விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 01 புதன்கிழமை (16.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 333

## உயிரிழந்தவர்களை நினைவுகூர

# தெற்கில் முடியுமானால் வடக்கிலும் சாத்தியமே!

### நியாயமான கோரிக்கை என்கிறார் அமைச்சர் வஜிர

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த அனுமதியளிக்கவேண்டும் என்ற தமிழர் தரப்பு கோரிக்கை நியாயமானதே என தெரிவித்த உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபே குணவர்த்தன, அதுகுறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

### முன்னாள் இராணுவ சிப்பாய் உட்பட

## ஆவாகுழு சந்தேக நபர்கள் 62 பேரில் 38 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி வரும் ஆவா குழு என சந்தேகிக்கப் படும் 62 பேர் இதுவரை இனங் காணப்பட்டுள்ளதாகவும் அவர் களில் 38 பேர் தற்போது வரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நா யக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆவா குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் எனக் கைது செய்யப்பட்டுள்ள 38 பேரில் முன் னாள் இராணுவச் சிப்பாய் ஒரு வரும் உள்ளடங்குவதாகவும் பாதுகாப்பு இராஜாங்க

23ஆம் பக்கம் பார்க்க....

### சிவாஜிலிங்கத்தின் உறுதிமொழியை அடுத்து

## யாழ்.சுகாதார தொழிலாளர்கள் பணிக்கு திரும்புவதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சுகாதார தொழிலாளர்களுக்கான நிரந்தர நியமனம் பகுதி பகுதியாக வழங் கப்படும் என்ற சாதகமான உறுதி மொழியினை அடுத்து சுகாதார தொழிலாளர்கள் தமது பணிப்புறக் கணிப்பு போராட்டத்தை நிறைவு செய்வதாக அறிவித்துள்ளதுடன், இன்றைய தினம் வழமைபோல் பணிக்கு திரும்பவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாநகரசபையில் தற்காலி கமாக பணிபுரியும் மாநகரசபை சுகா தார தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம்

23ஆம் பக்கம் பார்க்க....

## நிரந்தர நியமனம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமருடன் பேசுவோம்

### சுகாதார தொழிலாளர்களிடம் த.தே.கூ. உறுதியளிப்பு



23ஆம் பக்கம் பார்க்க....

## அரச அதிகாரிகள் இணைந்து யாழில் நேற்று கழிவு அகற்றல்

### சுகாதார தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பு




23ஆம் பக்கம் பார்க்க....

## மனைவியை கொன்று புதைத்த நபருக்கு மரண தண்டனை

(அநுராதபுரம்)

கர்ப்பிணியான தனது மனை வியை கொலை செய்து புதைத்த, இராணுவத்தின் முன்னாள் விளை யாட்டு ஆலோசகராக செயற்பட்ட நபருக்கு அநுராதபுரம் மேல் நீதி மன்றம் நேற்று மரணத் தண்டனை விதித்துள்ளது.

அநுராதபுரம் மஹாவிலச்சிய பகுதியில் கடந்த 2003 ஆம் ஆண்டு தனது மனைவியை தாக்கி கொலை செய்து

24ஆம் பக்கம் பார்க்க....

## நிரந்தர நியமனம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமருடன் பேசுவோம்


### சுகாதார தொழிலாளர்களிடம் த.தே.கூ. உறுதியளிப்பு



23 ஆம் பக்கம் பார்க்க....

## அரச அதிகாரிகள் இணைந்து யாழில் நேற்று கழிவு அகற்றல்

### சுகாதார தொழிலாளர்கள் கடும் எதிர்ப்பு




23 ஆம் பக்கம் பார்க்க....

## மனைவியை கொன்று புதைத்த நபருக்கு மரண தண்டனை

(அநுராதபுரம்)

கர்ப்பிணியான தனது மனைவியை கொலை செய்து புதைத்த, இராணுவத்தின் முன்னாள் விளையாட்டு ஆலோசகராக செயற்பட்ட நபருக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றம் நேற்று மரணத் தண்டனை விதித்துள்ளது.

அநுராதபுரம் மஹாவிலச்சிய பகுதியில் கடந்த 2003 ஆம் ஆண்டு தனது மனைவியை தாக்கி கொலை செய்து

24 ஆம் பக்கம் பார்க்க....

# இனத்துவேசம் கக்கும் தேரரை உடனடியாக கைது செய்யுங்கள்

## கிழக்கு முதலமைச்சர் நஸீர் பகிரங்க கோரிக்கை

(ஏறாவூர்)

மட்டக்களப்பிலிருந்து கொண்டு இழிவான வார்த்தைகளால் இனத்துவேஷத்தைக் கக்கும் அம்பிட்டிய சுமணரத்ன தேரரை உடனடியாகக கைது செய்து அவர் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் பகிரங்கமாக கேட்டுள்ளார்.

மட்டக்களப்பு மங்களராமய விஹாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் அரசாங்க அலுவலர்களையும், தமிழ் - முஸ்லிம் மக்களையும் தகாத வார்த்தைகளாலும் இனத்து வேச ரீதியாகவும் நிந்தித்துள்ள சம்பவத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என நேற்று செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ள முதலமைச்சர், குறித்த தேரர் மீது நடவடிக்கை எடுத்து இச்சம்பவத்தை முளையிலேயே கிள்ளியெறிய நல்லாட்சி அரசு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (செ)

## 40 லீற்றர் கோடா மீட்பு

(சாவகச்சேரி)

வரணி குடமியன் பகுதியில் 40 லீற்றர் கோடா பரல்கள் கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று இரவு 7.30 மணியளவில் குறித்த பகுதியை முற்றுகையிட்ட பொலிஸார் 40 லீற்றர் கோடா பரல்களை மீட்டதோடு சந்தேகத்தின்

23 ஆம் பக்கம் பார்க்க....

### கைதுசெய்; வெளியேற்று; நீதிவேண்டும்

## சுமணரத்ன தேரருக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



24 ஆம் பக்கம் பார்க்க....

### வித்தியா கொலை, பொலிஸாருக்கு அச்சுறுத்தல்

## ஒன்பது சந்தேகநபர்களிடமும் வாக்குமூலங்கள் நேற்று பதிவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி வித்தியா கொலை வழக்கின் சந்தேக நபர்களினால் பொலிஸாருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக சம்மந்தப்பட்ட ஒன்பது சந்தேகநபர்களிடமும் தனித் தனியான வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ் வாக்குமூலங்கள் அனைத்தும் நீதவான் வை.எம்.எம்.றியாலின் உத்தரவுக்கு அமைய நேற்று ஒரே நாளில் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊர்காவற்றுறை பொலிஸாரினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வித்தியா கடத்திச் செல்லப்பட்டு கூட்டு வன்

24 ஆம் பக்கம் பார்க்க....

## விரும்பிய கடைகளில் சீருடைக் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்குரிய 2017ஆம் ஆண்டுக்கான இலவச சீருடைக்கு வவுச்சர்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான சுற்றுநிருபம் வெளியாகியுள்ளது. இச் சுற்றுநிருபத்தில் 2016 ஆம் ஆண்டு போலன்றி 2017ஆம் ஆண்டுக்குரிய இலவச சீருடையை மாணவர்கள் தாம் விரும்புகின்ற

04 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# பெற்றோர் தின நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

உடுவில் மகளிர் கல்லூரியின் பெற்றோர் தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் சுனித்தா ஜெபரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வினை உடுவில் மகளிர் கல்லூரியின் ஆரம்ப பிரிவு ஏற்பாடு செய்துள்ளதுடன் மாணவர்களின் ஆங்கிலப்பாடல், தமிழ் நடனம், வில்லுப்பாட்டு ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

# அகதிகளை அமெரிக்கா பொறுப்பேற்பது உறுதி!



(வாஷிங்டன்)

பப்புவா நியூகினி மற்றும் நவுறு போன்ற தீவுகளில் உள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த நியாயமான அகதிகளை அமெரிக்கா ஏற்றுக் கொள்ளும் என அறிவித்துள்ளது.

குறித்த விடயத்தினை அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான ஒப்பந்தம் ஒன்று அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒபாமாவின் நிர்வாகத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அகதிகளுக்கான திட்டத்தில் பப்புவா நியூகினி மற்றும் நவுறு போன்ற தீவுகளில் உள்ள இலங்கை உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த அகதிகளை அமெரிக்கா பொறுப்பேற்க தீர்மானித்தது.

இந்நிலையில் தற்போது அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகவுள்ள டொனால்ட் டரம்ப் இதனை ஏற்றுக்கொள்வாரா? என்ற கேள்வியெழுந்திருந்த நிலையில், குறித்த திட்டம் அமுலபடுத்தப்படும் என ஜோன் கெரி தெரிவித்துள்ளார். (செ-11)


உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்

303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்

T.P.No : 021 222 5392

(C-6396)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

மேற்படி பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமா துறையில் தமது கற்கைகளை பூர்த்தி செய்த கீழ்க்குறிப்பிட்டுள்ள பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 19.11.2016ஆம் திகதி சனிக்கிழமை, காலை 10.30மணிக்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

**பட்டச்சான்றிதழ்களைப் பெறத் தகுதியான மாணவர் பிரிவுகள்:**

- ♦ பிரிவு V மற்றும் பிரிவு VII – முழுநேரக் கற்கைநெறி
- ♦ பிரிவு III – பகுதி நேரக் கற்கைநெறி

-பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். (சி-6407)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விருதுகள் விழா 19.11.2016 (சனிக்கிழமை) அன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட கூவர் கலையரங்கில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். (செல்வி). வசந்தி அரசரட்ணம் அவர்களும், சிறப்பு விருந்தினராக முன்னாள் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் தலைவியும், கொழும்பு செலான் வங்கியின் அலுவலருமாகிய செல்வி தர்ஜினி சிவலிங்கம் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

22.10.2016 அன்று இடம்பெறவிருந்து பிற்போடப்பட்ட இவ்விழாவிற்கு ஏற்கெனவே அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெற்றவர்கள் இத்திகதி மாற்றத்தினைக் கருத்திற் கொண்டு இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம். மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2015ஆம் ஆண்டிற்கான விளையாட்டு அணிகளை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களை அன்று பிற்பகல் 01.30 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திற்கு தவறாது வருகை தருமாறு வேண்டிக்கொள்கிறோம்.

-ப்திவாளர் (சி-6405)

## இராமநாதன் நுண்கலைக்கழகம் கலைப்பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கல்வியாண்டு 2014 / 2015

### முதலாம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டிற்கான பரீட்சைகள்

முதலாம் வருட இசை மற்றும் நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கைநெறி மாணவர்களுக்கான பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாம் வருட இசை மற்றும் நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய கற்கை நெறிமாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பபடிவங்களை பூர்த்தி செய்து 25.11.2016ம் திகதிக்குமுன்னர் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் நிர்வாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

மீள்பரீட்சார்த்திகளும் மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பித்து ஏற்றுக்கொள்ளப்பட்டோரும் பரீட்சை பெறுபேற்றினை தரமுயர்த்துவதற்கு ஒவ்வொரு பாடஅலகிற்கு ரூபாய் 250 வீதமும் யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதனை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

-பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
15.11.2016 (சி-6406)

## துயர் பகிர்கின்றோம்


### அமரர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுமதினி உதயகுமாரன் அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன் அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/தாளையடி றோ.க.த.க பாடசாலை,
தாளையடி. (6614)

## மரண அறிவித்தல்



### கந்தசாமி சுப்பிரமணியம்

(கார்காரச் சின்னண்ணை)

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவரான சுப்பிரமணியம் சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், க.சண்முகசுந்தரலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரரும், சு.சிதம்பரநாதன் அவர்களின் அன்பு மைத்துனரும், சு.சிவயோகேஸ்வரன் (பிரான்ஸ்), சிவலட்சுமி (வசந்தி), சு.சிவலோகநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான சிவகுமார், விஜயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, கலாறஜினி, தர்சினி, தங்கராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று *(16.11.2016)* புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

"சிவகிரி" செம்பாடு தூதாவளை, கரணவாய், கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர் 021 373 7783

(சி-6408)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## பாராட்டி வாழ்த்துதல்



செல்வி

### விமலராயன் வினுசியா

2016ம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப்பெற்று (153) புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவி செல்வி விமலராயன் வினுசியா அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவருக்குக் கற்பித்த ஆசிரியை திருமதி சுமதினி உதயகுமாரன் அவர்களையும் பாராட்டுவதுடன், மேலும் சித்திப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.

யா/தாளையடி றோ.க.த.க பாடசாலை,
தாளையடி. (6615)

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலைச் சமூகத்தினர்.

# கொள்கையில் உறுதியாகயிருந்த பிரபாகரன்



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் கொள்கையில் விடாப்பிடியாக இருந்தார். அவரின் பிடிவாதம் காரணமாக ராஜீவ் காந்திக்கும் பிரபாகரன் மீது வெறுப்புத் தோன்றி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கருத்துக்குச் சாதகமாகத் திரும்பினார் என இந்திய விமானப் படையின் முன்னாள் தளபதி பாரத்குமார் சுட்டிக்காட்டியுள்ளார்.** (18 ஆம் பக்கம் பார்க்க...)

## மனிதநேயம் இல்லாத மனிதர்கள்; மகிந்த ராஜபக்ஷ ஆழ்ந்த கவலை

இலங்கைக்கு கடன் உதவி வழங்குவதற்கு சீன அரசாங்கம் மாத்திரமே காணப்பட்டதாகவும், சீன அரசாங்கத்துக்கு ஏசியதனால், இலங்கை அதன் பலனை அனுபவிக்க வேண்டி வரும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை, கம்புருகமுவ, கராதுவ விகாரையில் நடைபெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இன்று அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. சீனா, சீனா எனக் கூறி அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து கனவுகளை கண்டனர். அதிவேகப் பாதை, ரயில் பாதை என பல அபிவிருத்திப் பாதைகளை சீனாவைக் காட்டி ஆசையூட்டினர். எமக்கு அமெரிக்கா, ஐரோப்பா உள்ளன எனக் கூறினர். ஆனால், கடைசியில் சீனாவிடம்தான் தஞ்சம் அடைந்தனர்.

சீனாவுக்கு ஏசிக்கொண்டே தான் சீனாவிடம் உதவியைப் பெறுகின்றனர். இந்த மனிதர்களிடம் மனிதம் இல்லையென்பதை இதுபோன்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. நிதி அமைச்சர் அண்மையில் சீனத்தூதுவர் குறித்து விடுத்திருந்த அறிவிப்பு தொடர்பில் ஆச்சரியப் படுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## தடை நீக்கம்; 36 ஆயிரம் மெற்றிக்தொன் மீன்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி

மீன் ஏற்றுமதிக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நீக்கப்பட்டதையடுத்து இதுவரை 36 ஆயிரம் மெற்றிக்தொன் மீன்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். இதன்மூலம் அரசாங்கத்துக்கு 9 ஆயிரம் மில்லியன் ரூபா வருமானம் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மீன் ஏற்றுமதிக்கான தடை ஐரோப்பிய ஒன்றியத்தினால் கடந்த ஜூன் 22ஆம் திகதி நீக்கப்பட்டது. அன்று முதல் ஜூலை, ஒகஸ்ட், செப்டெம்பர் ஆகிய மாதங்களிலேயே 36 ஆயிரம் மெற்றிக் தொன் மீன்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மீன்பிடி தடை விதிக்கப்பட்டிருந்த 2015 ஜனவரி முதல் 2016 ஜூன் வரையான 18 மாதங்களிலும் ஆகக் கூடியது 4,200 மெற்றிக் தொன் மீன்களே ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தன.

தற்போது மாதாந்தம் 11 ஆயிரம் மெற்றிக்தொன் மீன்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் இதன்மூலம் 3 ஆயிரம் மில்லியன் ரூபா வருமானமாகவும் ஈட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் மீன்களுக்கு விதிக்கப்படவிருந்த வரி, மீன் இறக்குமதியாளர்களின் வேண்டுகோளுக்கமைய நீக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். இதேவேளை உள்ளூர் மீனவர்களிடமிருந்தும் கூடுதலான மீன்களை பெற்று ஏற்றுமதி செய்யுமாறும் அமைச்சர் மீன்ஏற்றுமதியாளர்களைக் கேட்டுக்கொண்டார். (இ-7)

## கடற்படையின்கீழ் அவன்கார்ட்; 233 கோடி ரூபாய் வருமானம்

(கொழும்பு)

அவன்கார்ட் கடல்சார் பாதுகாப்பு சேவை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் 233 கோடி ரூபாய் வருமானம் பெறப்பட்டிருப்பதாக கடற்படை தெரிவித்துள்ளது.


அவன்கார்ட் கடல்சார் பாதுகாப்பு சேவை கடந்த வருடம் நவம்பர் மாதம் 13ஆம் திகதி கடற்படை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது. இக்காலப் பகுதியில் இந்த வருமானம் பெறப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் காலியில் அமைக்கப்பட்டுள்ள செயற்பாட்டு அலுவலகங்களுக்கிடையில் 6646 கப்பல்களுக்கான பயண சேவைகளுக்கு கடற்படை உதவியுள்ளது. மாதமொன்றுக்கு சராசரியாக 554 பயணங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட வருமானத்தை அரசாங்கத்தின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொள்ளவுள்ளனர்.(இ-7)

## நீர்க்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக உச்சநீதிமன்றில் மனு

நீர்க்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் எதேச்சதிகார போக்கில் திடீரென குடிநீருக்கான கட்டணம் உயர்த்தப்பட்டமை ஒட்டுமொத்த மக்களினதும் அடிப்படை மீறலாகும் எனவும் சட்டவிரோதமானது எனவும் நீர்வழங்கல் நீர் விநியோக முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

குறித்த நீர்க் கட்டணத்தை உயர்த்துவதற்கு திறைசேரியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படவில்லை எனவும் நீர்க் கட்டணங்கள் உயர்த்தப்பட்டமைக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளனர்.

மேலும் இலவசக் கல்வி சுகாதாரம் மற்றும் நீர் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கான ஒதுக்கங்கள் இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நீர்க் கட்டணத்தை உயர்த்துவது நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அணுகுமுறை முற்றிலும் தவறானது. மிலேனிய அபிவிருத்தி இலக்குகளில் இலங்கையும் கையொப்பமிட்டுள்ள நிலையில் இவ்வாறு நீர்க்கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

குடிநீர் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்ட ஓர் விடயம் எனவும் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக மட்டும் நீர்க்கட்டணத்தை உயர்த்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7)

## வரவு-செலவுத்திட்டம் குறித்து சு.க.அமைச்சர்கள் அதிருப்தி

2017ஆம் ஆண்டுக்காக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வரவு- செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ள சில பரிந்துரைகள் தொடர்பில் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் அதிருப்தி வெளியிடத் தீர்மானித்துள்ளனர்.

துறைசார் அமைச்சர்களிடம் எவ்வித அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளாது நிதியமைச்சர் எதேச்சதிகாரமாக தீர்மானங்களை எடுத்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளனர்.

வரவு செலவுத்திட்டத்தில் ஊழியர் சேமலாப நிதியினை பிணையாகக் கொண்டு கடன் பெற்றுக்கொள்ளும் முறைமை இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த தீர்மானம் குறித்து துறைசார் அமைச்சருக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் அமைச்சர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, ஊழியர் சேமலாப நிதியை பிணையாக கொண்டு கடன் பெற்றுக்கொள்ளும் நடைமுறை இரத்து செய்யப்பட்டமை பற்றி தமக்கு அறிவிக்கப்படவில்லை என தொழில் அமைச்சர் ஜோன் செனவிரட்ன கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.(இ-7)

## விளக்கமறியல்

பண்டித் டபிள்யு. டீ அமரதேவவின் இறுதிக்கிரியையின் போது, சந்தேகப்படும் விதத்தில் நடந்து கொண்ட, ஊடகவியலாளர் என்று கூறப்படும் நபரின் விளக்கமறியல் நவம்பர் மாதம் 17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சப்புமல் தேவிந்த குமார என்னும் நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு பிரமான நீதவான் கிஹான் பிலபிட்டிய, இந்த உத்தரவை நேற்று செவ்வாய்க்கிழமை பிறப்பித்துள்ளார். (இ-7)

## நீதிமன்ற வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு நீதிச்சேவை ஆணைக்குழுவால் ஆலோசனைக்கோவை

(கொழும்பு)

நீதிமன்ற வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்காக நீதவான் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களுக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் ஆலோசனைக்கோவை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த ஆலோசனைக் கோவை நாடளாவிய ரீதியில் அமுலாகும் வகையில் வெளியிடப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடத்தின் முதல் அரையாண்டுக்குள் இந்த ஆலோசனை கோவையூடாக பாரிய பெறுபேறு கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# அபோட் ஆறு... தென்னாபிரிக்கா ஜோரு
# அவுஸ்திரேலியாவோ கண்ணீரு

ஹொபர்ட் டெஸ்டில் அசத்திய தென்னாபிரிக்க அணி, இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2:0 என கைப்பற்றியது. வேகத்தில் மிரட்டிய அபோட் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி அசத்தினார். சொந்த மண்ணில் அவுஸ்திரேலியா மீண்டும் சொதப்பியது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் தென்னாபிரிக்க வென்றது. இரண்டாவது போட்டி ஹொபர்ட்டில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 85, தென்னாபிரிக்கா 326 ஓட்டங்கள் எடுத்தன. நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட முடிவில், அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்கு 121 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கவாஜா (56), ஸ்மித் (18) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**அபோட் அபாரம்**


நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடந்தது. தென்னாபிரிக்காவின் அபொட், ரபாடா மாறி மாறி 'வேகத்தில்' போட்டுத்தாக்கினர். அபொட் பந்துவீச்சில் கவாஜா (64) அடம் வோஜஸ் (2) ஆட்டமிழந்தனர். பின் ரபாடா மிரட்டினார். இவரின் 'வேகத்தில்' பெர்குசன் (1), நெவில் (6), மென்னே (0) ஒற்றை இலக்கத்தில் திரும்பினர். அணத் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மீண்டும் பந்துவீச வந்த அபொட், ஸ்ரார்க் (0), லியோனை (4) வெளியேற்றினார். இறுதியில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 161 ஓட்டங்கள் மட்டும் எடுத்து படுதோல்வியடைந்தது. தென்னாபிரிக்க அணி சார்பில் அபொட் 6, ரபாடா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்காவின் அபொட் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் வரும் 24ஆம் திகதி அடிலெய்டில் ஆரம்பமாகிறது.

**அதலபாதாளத்தில் ஆஸி**

டெஸ்ட் அரங்கில் அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கம் அநேகமாக முடிவுக்கு வருகிறது. ஒரு இன்னிங்ஸில் 85 ரன்களுக்கு சுருண்டது, தொடர்ந்து 5 டெஸ்ட் தோல்வி, தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் வைட் வோஷ்' அவமானத்தை சந்திக்கும் நிலைமை என எல்லாமே மோசமாக உள்ளது. கடந்த 1877 முதல் அவுஸ்திரேலிய அணி டெஸ்டில் பங்கேற்று வருகிறது. தற்போது வரை, சொந்த மண்ணில் நடந்த 3 அல்லது அதற்கு மேற்பட்ட டெஸ்ட் தொடரை முழுவதுமாக இழந்தது கிடையாது. ஒரு வேளை, பகலிரவு ஆட்டமாக நடக்கவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது போட்டியிலும் (நவ. 24) வீழ்ந்தால், பெரும் சிக்கல் ஏற்படும்.



ஹொபர்ட் டெஸ்டில் வோர்னர், அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித், கவாஜா, மென்னேவைத்தவிர யாருமே இரட்டை இலக்கத்தை தாண்டவில்லை. இதனால், அடம் வோஜஸ், பீட்டர் நெவில், 'சுழல்' வீரர் நேதன் லியோன் உள்ளிட்டோர் நீக்கப்படலாம்.

**இளம் வீரர்கள்**

தவிர, குர்திஸ் பாட்டர்சன், டிராவிஸ் ஹெட், பயிற்சியாளர் டரன் லேமன் மகன் ஜாக் லேமன் ஆகியோர் அறிமுக வாய்ப்பு பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொடர் முடிந்தவுடன் அணியில் களை எடுக்க வேண்டும். அப்போது தான் இழந்த பெருமையை அவுஸ்திரேலியா மீட்க முடியும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சிறுவர் சித்திரப் போட்டி - 2016



செல்வி
**அரவிந்தன் அரிஷனா**
**(தரம் 04)**
நிகழ்வு - சிறுவர் சித்திரப் போட்டி
மாகாண மட்டம் 3ஆம் இடம்



செல்வன்
**ஜெசுரன் பிரேம்டிலக்சன்**
**(தரம் 03)**
நிகழ்வு - சிறுவர் சித்திரப் போட்டி
மாகாண மட்டம் 1ஆம் இடம்

வாழ்த்துவோர்:- பாடசாலைச் சமூகம், கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்

(C-6410)

## விரும்பும் கடைகளில்...

கடைகளில் வாங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டில் வவுச்சர்கள் மூலம் மாணவர்கள் சீருடைத் துணியை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அனுமதியளிக்கப்பட்ட கடைகளில் மட்டுமே இச் சீருடைத் துணிகளை கொள்வனவு செய்யக்கூடியதாக நிபந்தனை இடப்பட்டது.


எனினும் இந்த நடைமுறையில் தரமற்ற சீருடைகள் வழங்கப்பட்டதான முறையீடுகளை அடுத்து 2017ஆம் ஆண்டுக்குரிய சீருடையை மாணவர்கள் தாம் விரும்பும் கடைகளில் கொள்வனவு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (செ)

## தெற்கில் முடியுமானால்...

நாட்டில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக உயிர் நீத்தவர்களுக்காக ஆத்ம சாந்தி பிரார்த்தனை கூட நடத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை கடந்த ஆட்சிக் காலத்தில் காணப்பட்டது. இந்நிலையில் நல்லாட்சி அரசாங்கத்தில் அதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் பாராளுமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தார்.

இந்த கோரிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் வஜிர அபேகுணவர்தன, அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு உயிரிழந்த தெற்கு மக்களை நினைவுகூர தெற்கிலுள்ள உறவுகளால் முடியுமானால் வடக்கில் உயிரிழந்தவர்கள் குறித்தும் நினைவுகூர அனுமதியளிக்க முடியும். எனவே அது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என் குறிப்பிட்டார்.

மேலும், உயிரிழந்தவர்கள் அப்போதிருந்த அரச ஆட்சியாளர்களின் செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்டு உயிரிழந்த இளைஞர்களாவர். அவர்கள் தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் சிந்தித்து, கவனம் செலுத்த வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (செ)



**கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் வருடாந்த**

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

| | |
|---|---|
| காலம் | : 20.11.2016 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | : காலை 10.00 மணி |
| இடம் | : கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை மண்டபம் |

**குறிப்பு**

பேருந்து உரிமையாளர்கள் மட்டும் கலந்து கொள்ளவும்.


வருகை தரும்போது தவறாது புதிதாக தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வழி அனுமதிப்பத்திரத்தின் நிழல் பிரதியை எடுத்து வரவும்.

தகவல்:
தலைவர் ப. ஜமுனாதரன்
கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனம்

(C-6409)

தொடர்பு: 021 320 8181

## கண்ணீர் அஞ்சலி



(C-6411)

**அமரர்**
**வேலுப்பிள்ளை**
**இரத்தினசிங்கம்**

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தின் முதல்வர் திருமதி **காஞ்சனா சிவகரன்** அவர்களின் அன்புத் தந்தையாராகிய அமரர் வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் அவர்கள் 14.11.2016 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தகவல்:
**பாடசாலைச் சமூகம்**
**கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்**

# மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில் வல்லுநர் சேவைகள் மற்றும் துணை மருத்துவ சேவைகளின் பயிற்சிக்கான பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு-2016 இற்கான நேர்முகப் பரீட்சை

மத்திய சுகாதாரம்போஷனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் மேற்படி பயிற்சி நெறிகளுக்கான பயிலுநர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 19,20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்கள் மத்திய சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் சில நேர்முகப் பரீட்சைதாரிகளுக்கான கடிதங்களில் நேர்முகப் பரீட்சை அம்பாந்தோட்டையில் இடம் பெறுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியக் கூடியதாகவுள்ளது. எனவே வேறு மாவட்டத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட வடமாகாண நேர்முகப்பரீட்சைதாரிகள் தாதியர் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் குறித்த திகதிகளில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியுமென வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன் அறிவித்துள்ளார். (இ)

# 2500 ரூபாய் தண்டப்பண யோசனை மீள்பரிசீலனை

## தீர்மானம் அமைச்சரவையில்

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட வாகனப் போக்குவரத்துச் சட்டத்தை மீறுவோருக்கான குறைந்தபட்ச தண்டப் பணத்தை 2500 ரூபாவாக அதிகரிக்கும்யோசனை அமைச்சரவையில் மீள்பரிசீலனைக்குட்படுத்த நிதி அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

தனியார் பேருந்து சங்கங்கள் நேற்று முன்தினம் முன்னெடுக்கவிருந்த நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்தை நிறுத்துமாறும் குறித்த தண்டப்பணம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனை மீள்பரிசீலனை செய்யப்படும் எனவும் நிதி அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை தனியார் பேருந்து சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் க.குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு தை மாதம் 2016 இற்கு பின்னர் பட்டம் பெற்ற தூய,பிரயோக விஞ்ஞான பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

தகைமை:

எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம்,விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப்பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள் தங்கப்பதக்கத்திற்கு தகுதியுடையவராகக் கருதப்படுவர்.

விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காணும் ஒரு முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர்,வவுனியா வளாகம்,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், வவுனியா.
3. இணையத்தளம்:www.jfn.ac.lk

முடிவுத்திகதி: 25.11.2016

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும் தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத்திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படா.

பதிவாளர் (C-6403)


# புதையல் தோண்டிய 11 பேர் கைதாகினர்

குருநாகல் பொல்பிடிகம, மாபேகமுவ பகுதியில் தனியார் காணி ஒன்றில் புதையல் தோண்டிய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களில் முன்னாள் அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தரும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் பொலிஸ் நிலையத்தில் கடமை புரிந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் இவர்கள் 11 பேரும் புதையல் தோண்டிக் கொண்டிருந்த போது பொல்பிட்டிகம பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பழமைவாய்ந்த மரம் முறிந்தது



மந்திகை ஞானவைரவர் ஆலய அரசமரம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் முறிந்து வீழ்ந்துள்ளது.

நூற்றாண்டு பழமைவாய்ந்த இவ் அரச மரம் முறிந்தமையினை இட்டு அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர். (இ-60)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு தை மாதம் 2016 க்கு பின்னர் பட்டப்படிப்பில் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்பில் சித்தியெய்தி எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் இளமாணி பட்டம் அளிக்கப்படவிருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வவுனியா வளாகம், வவுனியா
3. www.jfn.ac.lk இணையத்தளம்

விருதுகள்:- பல்கலைக்கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும் பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

முடிவுத்திகதி:- 25.11.2016

சரியான பொருத்தமான தகவல்களை உள்ளடக்காததும் தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத்திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர் (C-6402)


# பிரித்தானியப்பிரஜை இலங்கையில் கைது!

பிரித்தானிய பிரஜை ஒருவர் இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ளார். புலனாய்வுப் பிரிவினரால் குறித்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2.1 மில்லியன் ரூபா பணம் மோசடி செய்துள்ளதாக சந்தேகநபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இரத்தினக்கல் வியாபாரி ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன் இணைந்து குறித்த வியாபாரி நீண்ட காலமாக இரத்தினக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தனக்கு தர வேண்டிய 2.1 மில்லியன் ரூபா பணத்தை மிக நீண்ட காலமாக குறித்த பிரித்தானிய பிரஜை வழங்கவில்லை என வியாபாரி முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இராசி பலன்

16.11.2016

(கார்த்திகை 01, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

துதியை பிற்பகல் 3.36 மணிவரை

ரோகினி பிற்பகல் 2.21 மணிவரை

சுபநேரம் 4.37-6.07 மணிவரை

இராகுகாலம் 12.07-1.37 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம், அனுசம்<br>இரவு 1.25 மணிக்கு<br>மிது-சந் | | |
| செவ் | | | ராகு |
| சுக் | சூரி<br>புத<br>சனி | | குரு |

**மேடம்:** கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.

**இடபம்:** குடும்பப் பொறுப்புக்கள் கூடும், எடுத்த வேலைகளை இன்று செய்து முடிப்பீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்:** விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வு அவசியம், காரிய அலைச்சல்கள் இடம் பெறலாம், யாராவது உதவி கேட்டு வரலாம்.

**கடகம்:** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் பெருகி வளம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** தொட்ட காரியங்கள் துளிர் விடும் நாள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி:** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், தொழில் போட்டிகள் மாறும், பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிடைக்கலாம், பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**தனுசு:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** செய்தொழில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், மறைமுக போட்டிகள் மாறும், கல்யாணக்கனவுகள் நனவாகலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கும்பம்:** தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும்.

**மீனம்:** உடன் பிறப்புக்களின் ஆதரவு பெருகும் நாள், பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்கள் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

# யாழ்.மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் நேற்று திடீரென நிர்வாக முடக்கப் போராட்டம்













படங்கள்:-பொ.சோபிகா



யாழ்.மாநகரசபைச் சுகாதார தொழிலாளர்கள் தமக்கான உரிய தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை என்பதை கண்டித்து நேற்றைய தினம் நிர்வாக முடக்கப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

ஒருவார காலமாக மேற்கொண்டுவரும் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தையடுத்து நேற்றைய தினம் காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை யாழ்.மாநகரசபைச் நிர்வாகத்தினை முடக்கி போராட்டத்தினை மேலும் விஸ்தரித்திருந்தனர்.

யாழ்.மாநகரசபையில் தற்காலிகமாக பணிபுரியும் மாநகரசபை சுகாதார தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி யாழ். மாநகரசபை சுகாதார தொழிலாளர்கள் கடந்த 7 ஆம் திகதி முதல் தமது பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனால் யாழ்.நகர்ப்பகுதி முழுவதும் கழிவுப்பொருட்களால் நிறைந்து சுகாதார சீர்கேட்டுடன் காணப்படுவதுடன் தொற்றுநோய்கள் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்பட்டுள்ளன.

அத்துடன் குறித்த மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள் பல பூட்டப்படவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் தமக்குரிய சாதகமான தீர்வை இதுவரை யாரும் வழங்கவில்லை என்பதை கண்டித்து நேற்று நிர்வாக முடக்க போராட்டத்தை சுகாதாரத் தொழிலாளர்கள் மேற்கொண்டனர்.

இவர்களின் போராட்டத்துக்கு சில அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

ஆனால் குறித்த இடத்துக்கு வருகை தந்த யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொலிஸார் மேற்குறித்த நிர்வாக முடக்கத்தை கைவிடும்படி கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதனையடுத்து மேற்குறித்த நிர்வாக முடக்க போராட்டத்தினை 10 மணியளவில் கைவிட்டிருந்தனர். அதன் பின்னரே மாநகர சபை அலுவலர்கள் தமது கடமைக்கு சென்றனர்.

ஆனால் நிர்வாக முடக்க போராட்டம் நடைபெற்றிருந்த வேளையில் வீதிகளில் வைத்து பல அலுவலர்கள் தமது கையொப்பங்களை இட்டிருந்தமையும் காணக்கூடியதாக இருந்தது.

குறித்த போராட்டம் தொடர்பாக வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்க தலைவர் அ.உதயகுமார் கருத்துத் தெரிவிக்கையில்,

9 நாட்களாக தொடரும் எமது போராட்டத்துக்கு உரிய தீர்வை யாரும் வழங்க முன்வரவில்லை. வடமாகாண முதலமைச்சர் ஏன் அமைதியாக உள்ளார் என்ற காரணம் எமக்கு இதுவரை தெரியவில்லை. எமக்கான உரிய தீர்வை தந்தால் நாம் உடனடியாக எமது சேவையை ஆரம்பிப்போம்.

உரிய தீர்வு வழங்கப்படாததை கண்டித்து நிர்வாக முடக்க போராட்டத்தை மேற்கொண்டோம். ஆனால் பொலிஸார் (இன்று) காலை 10 மணிக்குள் எமக்கான தீர்வை உரிய அதிகாரிகளிடம் இருந்து பெற்றுத் தருவதாகவும் இல்லையெனில் தாமும் இப்போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

எனவே எமது பணிப்புறக்கணிப்பு தொடரும் இவ்வேளையில் நிர்வாக முடக்க போராட்டத்தை நாளை (இன்று) 10 மணிவரை ஒத்திவைப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

2009 ஆண்டு தொடக்கம் யாழ்.மாநகரசபை சுகாதார பகுதியில் தற்காலிக தொழிலாளிகளாக 127 பேர் பணியாற்றி வருவதாகவும் இதுவரை அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்றும் நியமனம் வழங்குவதாக கூறி இழுத்தடிப்புக்கள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவித்து சரியான தீர்வு கிட்டும் வரை தமது புறக்கணிப்பு போராட்டம் தொடரும் எனவும் அவர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

## பொறுப்பேற்கப்படாதுள்ள வாகன இலக்கத்தகடுகள்

யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப்போக்குவரத்துக்கிளையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாகன இலக்கத் தகடுகள் இன்றுவரை உரிமையாளர்களால் பொறுப்பேற்கப்படாமல் உள்ளன.

உரிமையாளர்களால் பொறுப்பேற்கப்படாதுள்ள வாகன இலக்கத் தகடுகளில் 2015.12.31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத் தகடுகள் யாவும் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்துக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளன.

எனவே வாகன இலக்கத் தகட்டிற்கு விண்ணப்பித்து இதுவரை குறித்த வாகன இலக்கத்தகட்டினை பெற்றுக் கொள்ளாத வாகன உரிமையாளர்கள் 2016.11.23 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து கிளையில் தமது வாகனப் புத்தகம், தேசிய அடையாள அட்டை மற்றும் வாகனத்தின் பழைய இலக்கத்தகடுகள் என்பவற்றைச் சமர்ப்பித்து தமது வாகனங்களின் இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

திருப்பி அனுப்பப்படவுள்ள வாகன இலக்கத்தகடுகளின் பட்டியலை யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள கட்டடத்திலுள்ள விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும் என மோட்டார் வாகன போக்குவரத்துத்திணைக்களபிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார்.(இ)

## பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மூளாய் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலைஅதிபர்இலோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார், சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவர் செ.சிவசுப்பிரமணியம் (ஆசுகவி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)







கவிமணி க.த.ஞானப்பிரகாசத்தின் நூற்றாண்டு விழாவும் "ஞானக்களஞ்சியம்" மலர் வெளியீடும் அண்மையில் யாழ். கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# தனியார் பஸ்களின் வேலை நிறுத்தத்தை முகம்கொடுக்க தயாராகவே இருந்தோம்

## அமைச்சர் நிமால் கூறுகிறார்

தனியார் பஸ் ஊழியர்கள் சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டால் அதற்கு முகம் கொடுக்க தயார் நிலையிலேயே இருந்ததாக போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இ.போ.ச. மற்றும் ரயில்வே போக்குவரத்து என்பவற்றுக்குப் பொறுப்பான தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்ததாகவும் தெரிவித்தார்.

நேற்று மேற்கொள்ளப்படவிருந்த தனியார் பஸ் ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு முகம் கொடுப்பதற்காக இ.போ.ச. பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் ஆகியோரின் விடுமுறைகளை இரத்து செய்திருந்ததாகவும் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தெரிவித்துள்ளார். (இ-7)

# சிறுநீரகத் தொகுதியை விற்று இரவு விடுதிக்குச் சென்ற இந்தியர்களுக்கு மறியல்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து கொழும்பிற்கு வந்து சிறுநீரகத் தொகுதியை விற்பனை செய்த இந்தியர்கள், தங்களுக்கு கிடைத்த பணத்தை கொழும்பில் இரவு விடுதிகளில் செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு மிரிஹானை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 இந்தியர்கள் கடந்த எட்டாம் திகதி தப்பிச் சென்றிருந்தனர்.

இதனை அடுத்து மூன்று தினங்களின் பின்னர் அவர்கள் கைதாகி தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தற்போது அவர்களின் கைப்பேசிகள் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சாவகச்சேரி சுகாதாரத் தொழிலாளர்கள் இணைவு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சுகாதாரத் தொழிலாளர்களினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலை நிறுத்த போராட்டத்தில் சாவகச்சேரி நகரசபை சுகாதார தொழிலாளர்களும் நேற்று முதல் இணைந்துள்ளனர். (இ-29)

# ஆட்டோ சாரதி கொலை

எஸ்பிட்டிய பகுதியில் ஆட்டோ சாரதி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆட்டோ சாரதி கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அவருடைய வீட்டிலிருந்து வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் கல்பிலவத்த பகுதியில் நேற்று முன்தினம் மாலை குறித்த நபரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆட்டோவை பொலிஸார் கண்டு பிடித்துள்ளதுடன் சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)

# பிரதமர் சீனத் தூதுவருடன் திடீர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் சீனாவுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் ஏற்பட்டுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீனத் தூதுவருக்கும் இடையில் திடீர் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த திடீர் சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சீனத் தூதுவர் தெரிவித்த கருத்தால் கடந்த ஒரு வார காலமாக சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இதன் பின்னர் இலங்கை-சீனாவுக்கு இடையில் இராஜதந்திர முறுகல் உச்சம் பெற்றிருந்தது. இந்த நிலையில் தான் தெரிவித்த கருத்து இலங்கை அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தால் வருத்தம் தெரிவிப்பதாக சீனத் தூதுவர் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும், இந்த சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதுவும் தெரியவரவில்லை. (இ-7)

# வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் அறிவித்தல்

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கும் யாழ். மாநகர சபையின் ஊழியர்களுக்கான பகிரங்க அழைப்பு

கடந்த பத்து (10) நாட்களாக மாநகரசபை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான சுத்திகரிப்பு சேவை தடைப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள், நிறுவனங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் மழை காலத்தில் ஏற்படக்கூடிய தொற்று நோய்கள் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை தொடர்பாக சகல தரப்பினரிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற வண்ணமுள்ளன.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் ஊழியர்களின் பிரதிநிதிகளுடன் எம்மால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு கலந்துரையாடல்களின் போது குறிப்பிட்ட ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட முடியாதுள்ளதென எமக்கு அறியத்தரப்பட்டுள்ளமையானது அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் எமது கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட விதத்தில் கட்டம் கட்டமாக நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அரசாங்க சேவையின் சகல ஊழியர்களும் தமது பதவிகளை மக்களுக்கு வகைகூறும் பொறுப்புடையவர்களாகக் கருதி செயற்பட வேண்டும் என்ற ஒழுங்கு விதிக்கமையவும் மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளுக்குள் கழிவுகள் அகற்றப்படாமையினால் ஏற்பட்டுள்ள சுகாதார சீர்கேடான நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டியது எம் எல்லோரது கடமையும் பொறுப்புமாக இருப்பதனாலும் சுத்திகரிப்பு சேவையின் அவசியத்தன்மை கருதி பின்வரும் பகிரங்க அழைப்பு விடுக்கப்படுகின்றது.

1. பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கும் சகல ஊழியர்களும் 2016.11.17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு முன்னர் தங்களது கடமைக்குத் திரும்புதல் வேண்டும்.

2. அவ்வாறு கடமைக்குத் திரும்பாதவர்கள் தாமாகவே பதவியை விட்டு விலகியதாக (வெறிதாக்கியதாக) கொள்ளப்படுவார்கள்.

3. அவ்வாறு தாங்கள் கடமைக்குத் திரும்பாதவிடத்து மாற்று ஒழுங்குகள் மூலம் சுத்திகரிப்பு மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4. பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் சேவைக்குத் திரும்பாதவிடத்து, மாநகர சபையின் அலுவலக வளாகத்தினுள் தரித்து வைக்கப்பட்டுள்ள மாநகர சபைக்குச் சொந்தமான வாகனங்கள், ஏனைய சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவிருக்கும் ஏனைய ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும் காவற்றுறை மற்றும் ஏனையோரின் சேவை நாடப்படும்.

இப்பகிரங்க அறிவித்தல் பொதுநலன் சார்ந்து விடப்படுகின்றது.

திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன்
முதலமைச்சரின் செயலாளர்,
வடமாகாணம்.


## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்
தொ.இ: B/6455

பிறப்பு: 1979 RC
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்
தொ.இ: B/6456

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூசம்
உயரம்: 6'
தகைமைதொழில்:பட்டதாரி நோர்வே
தொ.இ: B/6458

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்
தொ.இ: B/6460

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம் உத்திரட்டாதி
கி.பா: 41
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்
தொ.இ: G/2364

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 19செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSMS, MSc/ ஆயுள்வேத வைத்தியர்
தொ.இ: G/2365

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 27
உயரம்: 167cm
தகைமை/தொழில்:BSc/ Demo
தொ.இ: G/2368

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 42
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSc/தனியாளர்
தொ.இ: G/2381

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00- 5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.
இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.

# 7 அடி உயரமான கஞ்சா செடி முதன்முறையாக மலையாளபுரத்தில் மீட்பு

## 25 லீற்றர் கசிப்பும் கைப்பற்று





கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முதலாக 7 அடி உயரமான கஞ்சா செடி மீட்கப்பட்டுள்ளது. மலையாளபுரம் பகுதியில் சட்ட விரோத செயற்பாடுகள் காணப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து மேற்கொண்ட விசேட தேடுதலின் போது குறித்த கஞ்சா செடியும் 25 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் கட்டளைக்கமைய தேடுதல் மேற்கொண்ட விசேட பொலிஸ் குழுவினரால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கசிப்பு, கஞ்சா செடி என்பன கிளிநொச்சி நீதவான் மன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் சந்தேக நபரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர். (2-15)

# உலக நீரிழிவு தினத்தையொட்டி மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம்

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றா நோய்த் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில் உலக நீரிழிவு தினத்தையொட்டி மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

குறித்த ஊர்வலத்தில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி ரதனி யூட், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி ரஜனி அன்ரன் சிசில், தொற்றா நோய் தடுப்புப்பிரிவு வைத்திய அதிகாரி வைத்தியர் அன்ரன் சிசில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இருந்து நேற்றுக்காலை 8 மணியளவில் ஆரம்பமான குறித்த ஊர்வலம் பிரதான வீதியூடாக மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது.

பின் குறித்த ஊர்வலம் மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மீண்டும் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை சென்றடைந்தது.

குறித்த ஊர்வலத்தில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணியாளர்கள், வைத்தியர்கள், சுகாதார தொண்டர்கள், பாடசாலை மாணவர்கள், தொண்டு நிறுவனங்களின் பணியாளர்கள், மருத்துவ மாதுக்கள் எனப்பலர் கலந்து கொண்டு "உலக நீரிழிவு" தினத்தையொட்டி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்ததையடுத்து குழு அமைப்பு

(மல்லாவி)

புதுக்குடியிருப்பு மந்துவில் மணல் குட்டை குளம் தொடர்பாக கிறிஸ்தவ மதம் சார்ந்த மக்களுக்கும் இந்து சமயம் சார்ந்த மக்களுக்கும் இடையில் நீண்டகாலமாக குளத்திற்கும் கோவிலுக்குமான எல்லைப் பிரச்சினை தொடர்பிலான கலந்துரையாடல் புதுக்குடியிருப்பு கமநல திணைக்களத்தில் முல்லைத்தீவு கமநல உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றபோது இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்ததையடுத்து இருதரப்பிலும் 4 அங்கத்தவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு கூட்டம் நிறைவு பெற்றது. அத்துடன் கோவிலுக்கும் குளத்திற்கும் இடையில் மதில் ஒன்றை அமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (2-15)

# வீரமறவர்களை நினைவுகூருவதற்கான உரிமையை அரசாங்கம் வழங்க வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை

தமிழ் மக்களின் விடிவுக்காக தம்மை விடுதலை போராட்டத்தில் ஆகுதியாக்கிய அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், தங்களது போராளிகளை பொதுமக்கள் பொது இடத்தில் நினைவுகூருவதற்கான உரிமையை அரசு வழங்க வேண்டும் எனக் கோரியுள்ளார். மாவீரர் வாரம் எதிர்வரும் 21 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகி 27 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய வீரமறவர்களை நினைவு கூருவதற்கான சுதந்திரத்தை வழங்குவதன் மூலமே அவர்களது மன வடுக்கள் ஆறும். புதிய அரசு நல்லிணக்கத்தை முன்னெடுப்பதாக வெறுமனே கூறிக்கொண்டு, நினைவுகூருவதற்கான உரிமையை தொடர்ந்தும் மறுத்துக்கொண்டு இருக்குமாயின் அரசால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கம் ஒருபோதும் உண்மையானதாக இருக்க முடியாது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் விடிவிற்காகவும் விடுதலைக்காகவும் ஆயுதப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை தியாகம் செய்து போராடி மடிந்த எமது மாவீரர்களுக்காக நாம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாவீரர் தினத்தை அனைத்து தமிழ் மக்களும் அனுஷ்டிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். எமது தமிழ் மக்கள் விடுதலையுடன் வாழ வேண்டும் என்பதற்காக பல்லாயிரக்கணக்கான போராட்ட வீரர்கள் கடந்த காலத்தில் வீர மரணம் அடைந்திருக்கின்றனர். அந்த வீர மறவர்களை ஒவ்வொரு மக்களும் நினைவுகூர வேண்டும்.

எங்களுக்காக போராடியவர்களை நாங்கள் மறக்கின்ற தன்மை காணப்படக்கூடாது. அந்த வகையில் அனைத்து மக்களும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாவீரர் தினத்தை ஆரம்பித்து இறுதி நாளான 27 ஆம்திகதி பிரகடனப்படுத்தப்பட்ட மாவீரர் நாளினை பொதுமக்கள் அனைவரும் தமது வீடுகளிலோ அல்லது சமய ஸ்தலங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும். மேலும் யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் வடக்கில் இராணுவம் இன்னமும் நிலை கொண்டுள்ளது.

இந்த நிலையில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் எமது மாவீரர் துயிலுமில்லங்களும் உள்ளன. அந்த துயிலும் இல்லங்களை உருத் தெரியாமல் இடித்து அழித்து அதன் மேலும் சப்பாத்து கால்களுடன் இராணுவம் நிலை கொண்டுள்ளது. எமது பிள்ளைகள், உறவுகள், போராளிகளின் மேல் இராணுவம் சப்பாத்து கால்களுடன் நிற்கும் போது நல்லிணக்கம் என்பது ஒரு போதும் சாத்தியமாகாது. நல்லிணக்கத்தை உண்மையாக இந்த அரசு விரும்புமானால்,

முதலில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களும் விடுவிக்கப்பட்டு, அவற்றில் முன்னைய காலங்கள் போல் வழிபாடுகள் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

இப்போதும் நாங்கள் அவர்களின் நினைவுகளுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற உண்மையை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் சொல்வதாக இந்த மாவீரர் தினம் அமைய வேண்டும் என்றார். (2-4)




# முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கும் நோயாளிகளுக்கான விசேட நடமாடும் மருத்துவ சேவை

வடக்கு மாகாணத்தில் யுத்தத்தினாலும் ஏனைய காரணங்களினாலும் காயங்களுக்கு உள்ளாகி முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டு சுயமாக நடமாட முடியாது படுக்கையிலிருக்கும் நோயாளிகளின் நலன் கருதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சு விசேட நடமாடும் மருத்துவ சேவையொன்றினை வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்துள்ளது. இந்த நடமாடும் மருத்துவ சேவைக் குழுவில் மருத்துவ தாதிய உத்தியோகத்தர், உளநல ஆலோசகர் மற்றும் சுகாதார பணியாளர் ஆகியோர் இடம்பெறுவாரென சுகாதார அமைச்சரின் ஊடக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுயமாக நடமாடமுடியாது தொடர்ந்தும் படுக்கையிலிருக்கும் நோயாளிகள் படுக்கைப்புண் மற்றும் பல்வேறுபட்ட உபாதைகளை எதிர்நோக்குகின்றனர். சுயமாக நடமாட முடியாமையினால் தமது மருத்துவ தேவைகளை நிறைவேற்ற மற்றவர்களில் தங்கி வாழ்கின்றனர். இவர்களின் நன்மை கருதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் விசேட நடமாடும் மருத்துவ சேவையை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளது. இதற்கான நிதியுதவி புலம்பெயர் நாடுகளில் வாழும் தாயக உறவுகளினால் வழங்கப்படுகின்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கடந்த வாரங்களில் இந்த மருத்துவ நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையைப் பெற விரும்புவோர் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அவசர அம்புலன்ஸ் சேவைக்கான தொலைபேசி இலக்கங்களான 021 222 4444 அல்லது 021 222 5555 இற்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நோயாளர்களின் வீடுகளுக்கு சென்று சிகிச்சை அளிக்கும் மருத்துவ குழு தேவையேற்படின் மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு நோயாளர்களை அனுமதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ சேவைக்கு கனேடிய செந்தில்குமரனின் "நிவாரணம்" நிறுவனமும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ சேவைக்கு கனேடிய தமிழர் தேசிய அவை அமைப்பும் நிதியுதவி வழங்கி வருகின்றது. எதிர்வரும் காலங்களில் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கும் இந்த சேவை விஸ்தரிக்கப்படவுள்ளதாக அச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# நெடுங்கேணி பிரதேசத்தில் சிங்களக் குடும்பங்களை இணைக்கும் திட்டம் திரைமறைவில் நடைபெறுகின்றது

## ஆனந்தன் எம்.பி.தெரிவிப்பு

வெலிஓயா பகுதி மக்களையும் கொக்கச்சான்குளம் மக்களையும் உள்ளடக்கி கிட்டத்தட்ட 5000 இற்கும் மேற்பட்ட சிங்கள குடும்பங்களை நெடுங்கேணி பிரதேசத்திற்குள் இணைத்துக் கொள்ளுகின்ற திட்டம் அரசாங்கத்திடம் இருக்கின்றது. அதற்கான வேலைகள் திரை மறைவில் நடைபெறுகிறது என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். வவுனியா, பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட விண்ணாங்கம்பிட்டி கிராமத்தில் நேற்று முன்தினம் மூங்கில் பயிர்ச்செய்கை நடவடிக்கையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டத்தின் எல்லைப் புறத்தில் இந்த பட்டிக்குடியிருப்பு உள்ளது. வெலிஓயா என்ற பகுதியில் தென்பகுதியில் இருந்து பெருந்தொகையான சிங்கள மக்கள் அழைத்து வரப்பட்டு குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் அந்த வெலிஓயாவைச் சேர்ந்த கிராம மக்கள் அநுராதபுரம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்குள் ஒவ்வொரு பகுதிகளை உள்ளடக்கியதாக அவர்களது நிர்வாக, அபிவிருத்தி நடவடிக்கைகள் இருக்கின்றது. ஆகவே, இந்தப் பிரதேசம் பறிபோகக் கூடிய நிலையில் அதற்கான வேலைகள் திரைமறைவில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

காலப்போக்கில் இந்தக் காணிகள் பறிபோவதைத் தடுப்பதற்கும் மூங்கில் செய்கை மூலம் வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கும் இந்த திட்டம் உதவுகின்றது. இந்த இரண்டையும் முக்கியமானதாக நாங்கள் பார்க்கின்றோம். ஏனெனில் போருக்கு பின்னர் பல மக்கள் தமது காணிகளை துப்புரவு செய்து பாதுகாக்க முடியாத நிலையில் இருக்கின்றார்கள். இவ்வாறான திட்டங்கள் மூலம் மக்களது காணிகளை பாதுகாக்க முடியும் எனத் தெரிவித்தார். (2-250)

### புளியம்பொக்கனை காட்டில்

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு 1,036 கசிப்பு கோடா போத்தல்கள் கைப்பற்று

## 2 ஆவது நாளாகவும் உபகரணங்களுடன் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதானார்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட தர்மபுரம் பொலிஸ் நிலைய பகுதியில் உள்ள புளியம்பொக்கணை காட்டுப் பகுதியில் இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட கசிப்பு உற்பத்தி நிலைய முற்றுகையில் 4 பரல்கள் உள்ளடங்கிய ஆயிரத்து 36 கசிப்பு கோடா போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கசிப்பு காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கசிப்பு உற்பத்தி நிலையமும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாகவும் தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தர்மபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். எம். டி.என்.சதுரங்க தலைமையில் பொலிஸ் கொஸ்தாபல்களான ஜனக (75704), தவச்சந்திரன்(3401), திசநாயக்க (5642) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் திடீர் சுற்றி வளைப்பில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் நீதிமன்றில் பாரப்படுத்தப்படவுள்ளதுடன் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரும் தர்மபுரம் பொலிஸ் நிலைய விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# உலக அஞ்சல் தின நிகழ்வு முல்லையில் முன்னெடுப்பு



(கொழும்பு)

ஒக்டோபர் 9 உலக அஞ்சல் தினத்தினை கொண்டாடும் முகமாக வடக்கு மாகாண ரீதியில் வடக்கு மாகாண அஞ்சல் திணைக்களத்தால் நடத்தப்படும் உலக அஞ்சல் தின நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு நகர மண்டபத்தில் நடைபெற்றது..

இந்த நிகழ்வில் இலங்கை அஞ்சல்மா அதிபர் ரோஹன அபயரட்ன. வடக்கு மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் ரட்ணசிங்கம்.முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாணத்தை சேர்ந்த அஞ்சல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# சட்டவிரோதமாக வெட்டப்பட்டுள்ள முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று

### ஒதியமலை காட்டுப்பகுதியில் சம்பவம்


முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பழம்பாசி ஒதியமலை காட்டுப் பகுதியில் சட்ட விரோதமாக வெட்டப்பட்ட மரக் குற்றிகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் வெட்டப்பட்ட 10 முதிரை மரக் குற்றிகளை பொலிஸார் மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும்.அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் முதிரை மரக் குற்றிகள் வெட்டப்படுகின்றதாக பொலிஸ் நிலையத்தில் பதிவாகிய முறைப்பாட்டிற்கமைவாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன்.சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் சந்தேக நபர்களைக் கைது செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-281)

# கால்நடை மருத்துவ நடமாடும் சேவை கிளிநொச்சியில் ஆரம்பித்து வைப்பு



வடக்கு மாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் 13 ஆம் திகதி கால்நடை மருத்துவ நடமாடும்சேவை இடம்பெற்றுள்ளது.

ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற இந்நடமாடும் சேவையை வடக்கு கால்நடை அபிவிருத்தித் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

கால்நடைகளைச் சிகிச்சைக்காக கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதில் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டே மக்களை நோக்கி கால்நடை மருத்துவசேவைகளை எடுத்துச்செல்லும் விதமாக வடக்கு கால்நடை அமைச்சு தற்போது மாவட்டங்கள் தோறும் கால்நடை மருத்துவ நடமாடும் சேவையை ஏற்பாடு செய்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே கிளிநொச்சியிலும் ஜெயபுரம், முழங்காவில்,அக்கராயன் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பயன்பெறும் விதமாக இம்மருத்துவ சேவை இடம்பெற்றுள்ளது.

இந்நடமாடும் சேவையில் கால்நடைகளுக்கான மருத்துவ ஆலோசனை,நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்குதல், செயற்கை முறைச் சினையூட்டல், நாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சைகளை மேற்கொள்ளுதல், பசுத்தீவனம் தயாரித்தல், கால்நடைகளுக்கான காப்புறுதி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பசுக்களை வளர்ப்பவர்களுக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து பால் கொள்கலன்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் செ.கௌரிதிலகன் தலைமையில் நடைபெற்ற இதற்கான தொடக்க நிகழ்ச்சியில் மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சி.வசீகரன் ஆகியோரும் கால்நடை வளர்ப்பாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். (2)




# சன்னாரில் 231 ராணுவத்தினர் பயிற்சி முடித்து வெளியேற்றம்

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் இராணுவ பயிற்சி முகாமில் இராணுவ பயிற்சியை பூர்த்தி செய்த 231 வீரர்கள் கடந்த சனிக்கிழமை காலை பயிற்சியை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர்.

குறித்த 231 இராணுவ வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு சன்னார் இராணுவ பயிற்சி முகாமில் இடம்பெற்றது.

இதன் போது இராணுவ பொலிஸ் உயர் அதிகாரி கேணல் எச்.வல்கம, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பயிற்சியை பூர்த்தி செய்த இராணுவத்தினரின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது இராணுவ கூட்டுப்பயிற்சியும் மக்களுக்கு காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-9)




மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றாநோய் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில் உலக சலரோக தினத்தையொட்டி நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்ற போது.... (படங்கள்:-பொ.சோபிகா)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நீரைச் சுத்திகரிக்கும் மூலிகைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



கடுக்காய்

சித்த மருத்துவத்தில் உபயோகிக்கக்கூடிய நீர், உபயோகிக்க தகாத நீர், மலினமடைந்த நீரை எவ்வாறு சுத்திகரித்து பயன்படுத்தலாம் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. பொதுவாக எம்முன்னோர்கள் நிலங்களுக்கே மூலிகைகளின் பெயர்களை இட்டு மருதம், குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல் எனப் பெயரிட்டு அழைத்துள்ளனர். அந்தளவிற்கு இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கையை வாழ்ந்து ஆரோக்கியத்தை தக்க



தான்றி

வைத்துள்ளனர். வயல் வயல் சார்ந்த மருத நிலத்து நீரையே ஆரோக்கியத்திற்கு சிறந்தது எனவும் சித்தர்கள் கூறியுள்ளனர். மருத மரத்திற்கு பல மருத்துவக் குணங்கள் உண்டு. இதனுடைய தாவரவியற் பெயர் Terminalia arjuna Combretaceae குடும்பத்தைச் சேர்ந்தது. இதனுடைய வேருக்கு நீரிலுள்ள மலினங்களை வீழ்படிவாக்கும் தன்மையுண்டு. இதனால்தான் ஆற்றோரங்களில் மருதமரத்தை நட்டு வளர்ப்பார்கள். மருத மரத்தின் விதைகளுக்கும் நீரைச் சுத்திகரிக்கும் தன்மையுண்டு. பொதுவாக எமது மருத்துவத்தில் மருந்துகளுக்கு அதாவது குடிநீர் காய்ச்சும்போது மருதநிலத்து ஆற்று நீரை பயன் படுத்தும்படி குடிநீர் காய்ச்சும்பொதுவிதியில் கூறப்பட்டுள்ளது. எனவே சுத்திகரிக்கப்பட்ட நீருக்காகவே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றும் மருதமரம் வயல் ஓரங்களில் பரம்பிக் காணப்படுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

மற்றையது தேற்றா மரம். இதனுடைய கட்டை (Wood), விதை (Seeds) இரண்டிற்கும் நீரிலுள்ள மலினங்களை வீழ்படிவடையச் செய்து நீரைச் சுத்திகரிக்கும் தன்மையுண்டு. இதை ஆங்கிலத்தில் Clearing Nut Tree எனக் குறிப்பிடுவார்கள். சாதாரணமாக நாம் குடிக்கப் பயன்படும் கிணற்றினுள் தேற்றா விதைகளை அல்லது தேற்றாக் கட்டையை போட்டு நீரைச் சுத்திகரிக்கலாம்.

இதனுடைய தாவரவியற் பெயர் Strychnos potatorum. குடும்பம் Loganiaceae.



நெல்லிமுள்ளி

கடுக்காய், பெருநெல்லி, தான்றி இந்த மூன்றும் முப்பலை என்று குறிப்பிடப்பட்டு இதன் உலர் கனிகள் 3 உம் வாத, பித்த, கபம் இம்மூன்றையும் தன்னிலைப்படுத்தி நோய்களை நீக்குவதுடன் நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றலும் உண்டு.

நன்றாகப் பழுத்து உலர்ந்த நெல்லிக்கனிகளை, இதனை நெல்லி முள்ளி என்பர். இந் நெல்லி முள்ளிகளை அல்லது நெல்லிக் கட்டையை (Wood) நீரில் போட்டு வைப்பதால் நீர் தெளிவடையும். இதனுடைய கட்டைகளுக்கு உப்பு நீரை நன்னீராக்கும் ஆற்றலும் உண்டு. இதனால் நீருக்கு சிறிது புளிப்பும் இனிப்பும் கலந்த சுவையுமுண்டாகும். இதனுடைய தாவரவியற் பெயர் Phyllanthus emblica, குடும்பம் Euphorbiaceae பெருமரவகையைச் சேர்ந்தது.

இதேபோன்று கடுக்காய், இதன் உலர்கனிகளுக்கு நீரைத் தெளியவைக்கும் ஆற்றல் உண்டு. இதனால் கிணற்று ஓரங்கள், ஆற்றோரங்களுக்கு அருகில் இம்மரங்களை நட்டு வளர்க்கலாம். இவை நல்ல உயரமாக வளரக்கூடிய மரமாகையால் கிணற்றினுள் சூரிய ஒளி படுவதையும் தடுக்கமாட்டாது. இம்மரவேர்களுக்கு கூட நீரிலுள்ள நுண்ணிய மலினங்களை வீழ்படிவாக்கி நீரைத்தெளியவைக்கும் ஆற்றல் உண்டு. இதனுடைய தாவரவியற்பெயர் Termilia chebula, Combretaceae குடும்பத்தைச் சேர்ந்த உயரமான மரம்.



மருதமரம்

அடுத்து தான்றி, இதுவும் மிகவும் உயரமானமரம். இதன் உலர் கனிகளுக்கும் வேருக்கும் நீரைச் சுத்தப்படுத்தும் ஆற்றல் உண்டு. இதனால் கிணற்று அருகில் அல்லது ஆற்றோரங்களில் இதனை நட்டு வளர்க்கலாம். இதனுடைய தாவரவியற் பெயர் Terminalia bellirica, குடும்பம் Combretaceae.

நெற்கழனிகள் (வயல்கள்) சூழ்ந்த வயல்களிலுள்ள கிணற்றுநீரே சிறந்தது. தேகத்தை குளிர்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும். பலவிதமான நோய்களையும் நீக்கும் ஆற்றலுண்டு. முன்பு வயல்களில் நெல்விதைக்கு முன்பு அவுரி, காவிளாய், ஆவரசு, பூவரசு போன்ற குழைகளை இயற்கைப் பசளையாக மண்ணினுள் தாட்டு பின்பு நெல் விதைப்பார்கள். இப்போது செயற்கை உரங்களை போட்டு நெல்விதைப்பதால் மண்வளம் பாதிக்கப்பட்டு நிலத்தடிநீரில் கூட இலை சேர வாய்ப்புண்டு. கொஞ்சம் கொஞ்சமாக சுற்றுச் சூழலை மாசாக்குகின்றது.



தேற்றா மரம்

பொதுவாக ஆற்றுநீரில் மலினங்கள் சேர்வதில்லை. ஏனெனில் இயற்கையாகவே எப்போதும் ஓடிக்கொண்டே இருத்தலால் இந்நீரின் ஒவ்வொரு துளியும் சூரிய, சந்திர கிரகணங்களாலும் காற்றாலும் தாக்கப்பட்டு புனிதமடைகின்றன. அன்றியும் இதில் மிதக்கும் மலினங்கள் இரு கரைகளிலும் ஒதுக்கப்படுகின்றன. மற்றைய கனமான மலினங்களும் அடியிற் படிந்து விட இயலும். மேற்கூறிய நீர்களை அருந்தும் போது கூட கொதிக்க வைத்து ஆறவிட்டு மண்பானை அல்லது மண்கூஜாவில் விட்டுவைத்து அருந்த வேண்டும். மேலும் சித்த மருத்துவத்தில் சில ஆரோக்கிய முறைகள் கூறப்பட்டுள்ளன. கருந்துளசிஇலை, மிளகு, சீரகம், வில்வமிலை போன்றவற்றைப் போட்டு ஊறிய நீரை அருந்துதல் பற்றியும் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## கின்னஸ் சாதனை படைத்த தமிழர்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு உதவும் நோக்கில் ஒரே நாளில் 10 ஆயிரத்து 975 கிலோ பொருட்களை சேகரித்து தமிழர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

தமிழகம் திருநெல்வேலியைச் சேர்ந்த 52 வயதான வெங்கட்ராமன் கிருஷ்ணமூர்த்தி என்பவரே இவ்வாறு சாதனை படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

டுபாயில் பணியாற்றி வரும் கிருஷ்ணமூர்த்தி சமூக சேவையில் அதிக அக்கறை கொண்டவர். அனைவருக்கும் கல்வியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அறக்கட்டளை ஒன்றையும் நடத்தி வருகின்றார்.

இந்நிலையில் 10 ஆயிரத்து 975 கிலோ எடை கொண்ட கல்வி உபகரணங்களை ஒரே நாளில் சேகரித்து கொடுத்து கிருஷ்ணமூர்த்தி கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக ஒரே நாளில் 50.000 ஆயிரம் நோட்டுப் புத்தகங்கள், 3 இலட்சம் பென்சில்கள், 2000 ஆயிரம் புத்தகப்பைகள் உள்ளிட்ட 10,975 கிலோ எடையுள்ள பொருட்களைத் திரட்டியுள்ளார்.

சிரியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு வழங்கும் நோக்கில் குறித்த பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சேகரிக்கப்பட்டுள்ள பொருட்கள் எமிரேட்ஸ் ரெட் கிரசன்ட் என்ற அமைப்பின் ஊடாக பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் சுமார் ஒரு இலட்சம் குழந்தைகள் பயன் அடைவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

முன்னதாக கடந்த 2015 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவை சேர்ந்த ஒருவர் 4.571 கிலோ பொருட்களை ஒரே நாளில் திரட்டிக் கொடுத்தமையே கின்னஸ் சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஹோட்டல் உணவுப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படும்

ஹோட்டல் உணவுப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படவுள்ளதாக ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஹோட்டல் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும் என தெரிவித்துள்ளது.

இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் நீர்க் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதனால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என தெரிவித்துள்ளது.

இதன்படி தேநீரின் விலை 5 ரூபாவினாலும் பால் தேநீரின் விலை 10 ரூபாவினாலும் உணவுப்பொதிகள், ப்ரைட் றைஸ், கொத்து போன்றவற்றின் விலைகள் பத்து ரூபாவினாலும் உயர்த்தப்படவுள்ளது.

ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் இதனை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

நீர்க் கட்டணங்கள் உயர்த்தப்படுவதனால் மாதாந்த நீர்க் கட்டணங்கள் சுமார் பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிப்பதாகவும் இதற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக கொழும்பின் அனைத்து ஹோட்டல்களும் ஒருநாள் மூடி எதிர்ப்பு வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் ரோல்ஸ், பனிஸ் மற்றும் அப்பம் போன்றவற்றின் விலைகள் உயர்த்தப்படாது என தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி ஹோட்டல் உரிமையார்கள் சங்க தேசிய சம்மேளனத்தில் விலை அதிகரிப்பு குறித்து நிர்ணயிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு 200 கிலோ தங்கம் கடத்தல் படையினர் துப்பாக்கிச் சூடு !

இராமேஸ்வரம் கடலில் 200 கிலோ தங்கக்கட்டிகளுடன் ஊடுருவ முயன்ற கடத்தல்காரர்கள் மீது இந்திய பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இராமேஸ்வரம், தனுஷ்கோடியில் இருந்து 30 முதல் 40 கிலோ மீற்றர் தூரத்தில் நெடுந்தீவு, மன்னார் கடற்கரை உள்ளது.

இக்குறுகிய கடற்பரப்பை பயன்படுத்தி இராமேஸ்வரம், தனுஷ்கோடி மண்டபத்தில் இருந்து கஞ்சா, பிரவுன்சுகர், கடல் அட்டை, இலங்கையில் இருந்து தங்கக்கட்டிகளை கடத்தி வருகின்றனர்.

இதனை தடுக்க முடியாமல் இந்திய பாதுகாப்புப் படை, சுங்கத்துறை, உளவுத்துறையினர் திணறுகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு, இலங்கையில் இருந்து ஒரு படகில் வந்த கடத்தல் கும்பல் இராமேஸ்வரம் ஓலைக்குடா, பிசாசுமுனை கடற்கரைக்குள் ஊடுருவ முயன்றனர்.

அங்கு ரோந்து சென்ற இந்திய பாதுகாப்புப் படையினர், படகை நிறுத்துமாறு எச்சரித்தனர்.

இதில் ஆத்திரமடைந்த கடத்தல்காரர்கள், பாதுகாப்புப் படையின் மீது இருமுறை துப்பாக்கியால் சுட்டனர்.

சுதாரித்த இந்தியப் படையினர் பதிலுக்கு 11 முறை சரமாரியாக சுட்டனர். இதனால், கடத்தல்காரர்கள் படகுடன் மீண்டும் இலங்கை எல்லைக்குள் தப்பிச் சென்றனர்.

கடத்தல்காரர்கள் 200 கிலோ தங்கக்கட்டியுடன் ஊடுருவ முயன்றது தெரிய வந்தது.

இலங்கையில் இருந்து இராமேஸ்வரத்திற்கு கடத்தல் கும்பல் ஊடுருவிய பின் மீண்டும் இலங்கைக்கு தப்பிய சம்பவம் குறித்து இந்திய, இலங்கை பாதுகாப்புப் படை அதிகாரிகள் "ஹொட் லைன்" போனில் தகவல் பரிமாறிக் கொண்டதால், பல கோடி மதிப்புள்ள தங்கக் கட்டி கடத்தலை தடுக்க முடிந்தது.

இருப்பினும் கடத்தல்காரர்களுடன் பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுக்க பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா கடலில் இந்திய பாதுகாப்புப்படை, மாநில மரைன் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் உள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# சிகரெட் கடத்த முற்பட்ட சீனப் பிரஜைகள் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சட்டவிரோதமாக சிகரெட்டுக்கள் கொண்டுவர முற்பட்ட 4 சீனப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சீனப் பிரஜைகள் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தபோது, சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து சிகரெட்டுகள் அடங்கிய 410 சிகரெட் அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்களின் மதிப்பு சுமார் 32 இலட்சம் என தெரிவித்த சுங்க அதிகாரிகள், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 120 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 115 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 50 | 40 | 80 | 50 | 60 | 60 |
| தக்காளி | 50 | 50 | 50 | 80 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 50 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 40 | 80 | 70 | 80 | 70 |
| கரட் | 120 | 120 | 70 | 120 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 30 | 50 | 40 |
| புடோல் | 50 | 60 | 30 | 60 | 40 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 50 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 100 | 120 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 85 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 200 | 100 | 160 | 120 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 80 | 70 | 120 | 100 |
| கருவலைக் கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 160 | 100 | 60 | 150 | 80 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 120 | 90 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 40 | 60 | 100 | 50 |
| கறிமிளகாய் | 140 | 160 | 105 | 120 | 120 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 40 | 30 | 100 | 60 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 200 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 30 | 60 | 50 | 60 | 50 |
| கீரை – 1பிடி | 30 | 20 | 20 | 30 | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 500 | 600 | 450 | 600 | 550 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 50 | 40 | 50 | 35 | 35-45 | 50 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – |
| வெங்காயப்பூ | – | – | – | – | – | 280 | – |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 60 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | – | – | 50 | – | 100 |

# சிறைக்குள் பேரறிவு

11

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



**"உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பத்தி 666 இல் ராஜீவ் காந்தியைக் கொலை செய்யத் சதி புரிந்த குற்றச்சாட்டை நிறுவுவதற்கு எதிரிகள் அளித்த 17 ஒப்புதல் வாக்கு மூலங்களையே முக்கியமாக நம்பியுள்ளனர்."**

...இது, இந்தியாவில் மட்டுமே நிகழ்ந்து வருகிற கொடுமை அன்று. நீடித்து நிலை பெற்றுவிட்ட உலகளாவிய சிக்கல். அதற்குத் தீர்வு காணவே மேலைநாடுகள் புலனாய்வு முறை, ஆதாரங்கள் திரட்டுதல், தண்டனை பெற்றுத் தருதல் என்பனவற்றில் பல்வேறு நவீன முறைகளை, நாகரிக வழிகளைக் கண்டறிந்து கையாண்டு வருகின்றன. இந்தியாவிலோ, காவல் சீர்திருத்தங்கள் (Police Reformation) குறித்து உச்ச நீதிமன்றம் தொடர்ந்து தீர்ப்புகள் வழங்கிய பின்னரும் இன்னமும் உறுதியான, ஆக்கபூர்வமான முன்னெடுப்புகள் ஏதும் இல்லை என்பதே வருத்தம் தரும் நிலையாக உள்ளது. இன்னமும் அடித்து உதைப்பதிலும் மூன்றாம் தர முறை விசாரணை முறைகளிலும் நம்பிக்கையோடு இயங்கும் பொலிஸாகவே நீடிக்கிறது.

இவ்வாறான பொலிஸின் கண்காணிப்பாளர் பதவிக்குக் (Superintendent of police) குறையாத ஒருவர் குற்றம் சாட்டப் பட்டவரிடம் பெறும் ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஆவணத்தை ஏற்று அதையே பிரதான சாட்சியம் (Substantive Evidence) என எடுத்துக்கொண்டு தண்டிக்கலாம் என்கிறது 'தடா சட்டப் பிரிவு 15.

இந்தியக் குற்றவியல் சட்டங்களுக்கு முற்றிலும் முரணான எதிரான நிலைப்பாடு மட்டுமல்லாமல் ஒருவர் தரும் ஒப்புதல் வாக்கு மூலத்தை அதே வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பிறருக்கு எதிராகவும் சாட்சியமாகப் பயன்படுத்தலாம் என அனுமதிக்கிறது, 'தடா' சட்டம். இது பெரும் கொடுமை அல்லவா!

எனது ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஆவணத்தைப் பதிவு செய்த அதிகாரி தியாகராசன் ஐ.பி.எஸ் பின்னாளில் என்ன சொன்னார் என்பதைப் பின்னர் சொல்கிறேன்.

11.05.1999 அன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் எனக்குத் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்ட பின்பு, நான் அடைக்கப்பட்டிருந்த சேலம் நடுவண் சிறையைச் சுற்றிப் பார்க்க வந்த பயிற்சி இந்தியக் காவல் பணிகள் (ஐ.பி.எஸ்) அதிகாரி ஒருவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் குறித்து நான் சொன்னபோது, "நாங்கள் துன்புறுத்திப் பெறும் வாக்குமூலங்களை நம்பியா உங்களுக்குத் தண்டனை!" என வியப்புடன் கேட்டு வருத்தப்பட்டார். ஒரு பயிற்சிக் காவல் அதிகாரிக்குத் தெரிந்த உண்மை, பண்பட்ட நீதிபதிகளுக்குத் தெரியாதா என்ன?

"கனம் நீதிபதி அவர்களே! ஒரே ஒரு நாள் நமது பொலிஸாரின் சித்திரவதையை எதிர்கொண்டால் நீங்களும் எந்தக் குற்றத்தையும் ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் தந்து விடுவீர்கள்" என கர்தார் சிங் வழக்கில் ஐந்து நீதிபதிகள் அரசியல் அமர்வின் முன்பு வாதிட்டார், இந்தியாவின் மூத்த வழக்குரைஞரும் மனித உரிமைப் போராளியுமான ராம்ஜெத்மலானி. அதைவிட, பொலிஸார் பதிவு செய்யும் ஒப்புதல் வாக்கு மூலத்தின் கொடூரத்தன்மை குறித்து எந்த வகையிலும் எடுத்துக்காட்டிவிட முடியாது.

'தடா' சட்டம் இந்தியாவில் மட்டுமல்ல, உலகமெங்கும் எதிர்ப்புகளைப் பெற அடிப்படைக் காரணமே இந்த ஒப்புதல் வாக்குமூலப் பிரிவுதான்.

எங்கள் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேரில் 17 பேரிடம் ஒப்புதல் வாக்குமூலம் என்ற ஆவணத்தில் கையெழுத்துப் பெறப்பட்டது.

அந்த 17 வாக்கு மூலங்களையும் பதிவு செய்தவர் ஒருவரே. அவர், தியாகராசன் ஐ.பி.எஸ். அனைவருமே, தமது 60 நாள் சி.பி.ஐ. பொலிஸாரின் விசாரணைக் காலம் முடியும் நாளுக்கு முந்தைய நாள், அதாவது 59 ஆவது நாள், ஒப்புதல் வாக்குமூல ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர் (எனில், 58 நாட்களின் சி.பி.ஐ.சித்ரவதைகளைப் புரிந்துகொள்ளுங்கள்). எங்கள் வழக்கில் மொத்தம் 288 சாட்சிகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டனர்.




அவர்களில் தியாகராசன் ஐ.பி.எஸ் 52-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் மூலம் அரசுத் தரப்புச் சான்று ஆவணங்களாகக் குறிக்கப்பட்ட 17 வாக்கு மூலங்களைக் கொண்டே, அதனை நம்பியே வழக்குக் கட்டியமைக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பத்தி 666 இல், "ராஜீவ் காந்தியைக் கொலை செய்யச் சதி புரிந்த குற்றச்சாட்டை நிறுவுவதற்கு எதிரிகள் அளித்த 17 ஒப்புதல் வாக்குமூலங்களையே முக்கியமாக நம்பியுள்ளனர்.

இந்த வாக்கு மூலங்கள் தடாச் சட்டத்தின் 15(1) பிரிவின்படி பதிவு செய்யப்பட்டவையாகும்" என நீதிபதிகள் கூறியுள்ளதில் இருந்து அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளலாம்.

(வலிகள் தொடரும்)

# இராணுவம் - போராளிகள் மியன்மாரில் கடும் மோதல்

## 30 பேர் உயிரிழப்பு

மியன்மாரின் வடபகுதியில் உள்ள ரக்கினே பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக இராணுவத்தினருக்கும் ரோகின்யா இனப் போராளிகளுக்கும் இடையே தொடர்ந்த மோதலில் 30 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


கடந்த ஒக்டோபர் மாதம் முதலே அங்கு மோதல்கள் இடம்பெற்று வருவதோடு, போராளிகளை ஒடுக்கும் வகையில், இராணுவம் குறித்த பகுதியை சுற்றிவளைத்து தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை ரோகின்யா முஸ்லிம்களின் மனித உரிமைகளை மீறும் வகையில் அந்நாட்டு இராணுவம் தாக்குதல் நடத்தி வருவதாகவும், இது தொடர்பில் வெளி உலகுக்கு தெரியாமல் இருப்பதற்காக நாட்டின் பத்திரிகையாளர்களை அரசாங்கம் தடுத்து வருவதாகவும் சமூக வலைத்தளங்களில் பல்வேறு செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரக்கினே பகுதியில் ரோகின்யா முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். மியன்மார் முழுவதும் 10 இலட்சத்துக்கும் அதிகமாக இவர்களின் குடித்தொகை காணப்படுகின்றது. இவர்கள் ஒடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வந்ததாக குற்றம் சுமத்தி, அதற்கு எதிராக அவர்களில் சிலர் கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஆயுதங்களை ஏந்தி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# ட்ரம்ப் - புடின் ஆலோசனை





அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொலைபேசிமூலம் பேசி முக்கிய விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தினார்.


அமெரிக்க ஜனாதிபதியாக தேர்வாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் ஜனவரி மாதம் 20ஆம் திகதி பதவியேற்கிறார்.

அதற்கேற்ப, வெள்ளை மாளிகையின் முக்கிய அதிகாரிகளையும், புதிய அமைச்சர்களையும் தேர்வு செய்யும் பணியில் அவர் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி ட்ரம்ப்புடன் ரஷ்ய ஜனாதிபதி புடின் தொலைபேசி மூலம் பேசி முக்கிய விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்தியதாகவும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்க இரு நாட்டின் தலைவர்களும் ஒப்புக்கொண்டதாகவும் ரஷ்ய ஜனாதிபதி மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக்காலத்தில் சிரியா உள்நாட்டுப் போர் மற்றும் உக்ரைன் நாட்டில் பிளவை ஏற்படுத்தி, கிரிமியா என்ற தனிநாட்டை உருவாக்கியது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கு இடையே பூசல்கள் நீடித்து வரும் நிலையில் ட்ரம்ப்புடன் புடின் தொலைபேசி மூலமாக தொடர்புகொண்டு பேசியது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (இ-7)

# 56 வருட கலைச் சேவையை பாராட்டி ஜாக்கிசானுக்கு கௌரவ ஒஸ்கார்








(லொஸ் ஏஞ்சல்ஸ்)

பிரபல நடிகர் ஜாக்கி சானுக்கு அமெரிக்காவில் நடந்த விழாவில் கௌரவ ஒஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. ஹொங்கொங்கைச் சேர்ந்தவர் நடிகர் ஜாக்கி சான். தனது அதிரடி சண்டைக் காட்சிகள் மற்றும் காமெடி மூலம் உலகமெங்கும் உள்ள ரசிகர்களை வசியப்படுத்தியவர்.

நடிகர், இயக்குநர், சண்டைக் கலைஞர், தயாரிப்பாளர் என பன்முகத் தன்மை கொண்ட ஜாக்கி சானுக்கு தற்போது 62 வயது. தனது ஐந்து வயதில் இருந்தே நடிக்கத் தொடங்கிய அவர், இப்போது 200 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

உலகம் முழுவதும் இருந்தும் பல்வேறு விருதுகளை பெற்றுள்ள அவருக்கு உலகின் உயரிய சினிமா விருதான ஒஸ்கார் விருது இதுவரை கிடைத்ததில்லை. 56 வருடமாக சினிமாத் துறையில் இருக்கும் ஜாக்கிசானுக்கு கௌரவ விருது வழங்க, ஒஸ்கார் கமிட்டி முடிவு செய்தது.

அதன்படி, 8வது கௌரவ ஒஸ்கார் விருது வழங்கும் வண்ணமிகு விழா, அமெரிக்காவின் ஹொலிவுட்டில் கடந்த ஞாயிற்றுக்கழமை இரவு நடைபெற்றது.

இந்த விழாவில் நடிகர் ஜாக்கி சான், எடிட்டர் ஆன்வி கோட்ஸ், காஸ்டிங் டைரக்டர் லின்ஸ்டால் மாஸ்டர் மற்றும் ஆவணப்பட இயக்குநர் பிரெடரிக் வைஸ்மேன் ஆகியோருக்கு அவர்களின் கலை சேவையை பாராட்டி கௌரவ ஒஸ்கார் விருது வழங்கப்பட்டது.

விருதை பெற்ற பின் ஜாக்கி சான் பேசியதாவது, 23 வருடங்களுக்கு முன் சில்வஸ்டர் ஸ்டாலோனை அவரது வீட்டில் சந்தித்தேன். அப்போது ஒஸ்கார் விருதை அங்கு பார்த்ததில் இருந்து அதை வாங்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. கடைசியாக இப்போது ஒஸ்கார் அகடமியின் தலைவர் ஐசாக் அழைத்து விடயத்தைச் சொன்னார். என்னால் நம்பவே முடியவில்லை.

எனது 56 வருட சினிமா வாழ்வில், 200 படங்களுக்கு மேல் நடித்து விட்டேன். படங்களுக்காக எனது எலும்புகள் பலவற்றை உடைத்து, கடைசியாக இந்த விருதை பெற்று விட்டேன்.

ஹொலிவுட்டுக்கு நன்றி. பல விடயங்களை அது எனக்கு கற்றுத் தந்திருக்கிறது. அத்தோடு என்னை கொஞ்சம் பிரபலமாகவும் உருவாக்கி இருக்கிறது. இங்கு இப்போது கௌரவிக்கப்பட்டிருக்கிறேன். இவ்வாறு ஜாக்கி சான் தெரிவித்தார். (இ-7)

# சீனாவிடம் நீர்மூழ்கி கப்பலை வாங்கியது பங்களாதேஷ்

(டாக்கா)

பங்களாதேஷத்தின் கப்பல்படையில் முதன்முறையாக நீர்மூழ்கி கப்பல் சேர்க்கப்படவுள்ளது. இதற்காக சீனாவிடம் இருந்து 2 நீர்மூழ்கி கப்பல்களை அந்நாடு வாங்கியுள்ளது.

இந்தியாவின் அண்டை நாடான பங்களாதேஷ், வங்கக்கடல் பகுதியில் அதிகளவு சர்வதேச கடல் எல்லையை மியன்மார் நாட்டுடன் பகிர்ந்து கொண்டுள்ளது. இங்கு பாதுகாப்பை பலப்படுத்த கப்பல்படையில் நீர்மூழ்கி கப்பலை சேர்க்க திட்டமிட்டது.

இதற்காக முதல்கட்டமாக சீனாவிடம் இருந்து 1370 கோடி ரூபாய் செலவில் இரு நீர்மூழ்கி கப்பலை வாங்கியுள்ளது.

பின்எஸ் நபஜத்ரா மற்றும் பினஸ் ஜாய்ஜத்ரா என அந்த கப்பல்களுக்கு பெயரிடப்பட்டுள்ளது. இக்கப்பல்கள் அடுத்தாண்டு பங்களாதேஷ் கப்பல்படையில் அதிகாரபூர்வமாக சேர்க்கப்படும் என வங்கதேச கப்பல்படை அதிகாரி தெரிவித்தார். நேற்று முன்தினம் சீனாவின் லியாநன் கப்பல் தளத்தில் நடந்த நிகழ்ச்சியில் பங்களாதேஷ் கப்பல்படை தளபதி நிஜாமுதின் அகமது, இதனை பெற்றுக் கொண்டார். (இ-7)

# ஒத்துழைப்பே உறவுகளை வலுப்படுத்தும் சீன ஜனாதிபதி ஜின்பிங் ட்ரம்பிற்கு அட்வைஸ்



(பீஜிங்)

ஒத்துழைப்பு மட்டுமே சீனா - அமெரிக்கா உறவுகளை வலுப்படுத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்பிடம் சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்ப்பை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவர் பேசினார். இது தொடர்பான தகவலை சீன அரசுத் தொலைக்காட்சியான சிசிடிவி வெளியிட்டது. ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்ற உடனேயே அவரைத் தொலைபேசியில் அழைத்து தனது வாழ்த்துகளை ஜீ ஜின்பிங் தெரிவித்தார். அதையடுத்து, நேற்று முன்தினம் திங்கட்கிழமை அவரை மீண்டும் தொடர்பு கொண்டு விரிவாக உரையாடினார் ஜீ ஜின்பிங்.

ட்ரம்ப்பிடம் ஜீ ஜின்பிங் தெரிவித்ததாவது, அமெரிக்காவுடன் நல்லுறவு மேற்கொள்வதற்கு சீனா அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. சீனா-அமெரிக்கா இடையே கடந்த 37 ஆண்டுகளாக நிலவிவரும் அரசியல் தொடர்பையடுத்து, இரு நாட்டு மக்களும் நன்மை அடைந்து வருகின்றனர். உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு மட்டுமே சரியானவழிமுறையாகும் என்றார்.

டொனால்ட் ட்ரம்ப் கூறுகையில், இரு நாடுகளும் இணைந்து செயலாற்ற வேண்டும் எனவும் பரஸ்பர பலன்களைப் பெறும் வகையில் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு சீன அரசுத் தொலைக்காட்சியான சிசிடிவி தெரிவித்துள்ளது.

இதனிடையே, சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங் யி கூறியதாவது, அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டது இரு நாடுகளிடையேயான உறவில் புதிய அத்தியாயத்தை தொடக்கி வைத்துள்ளது என்றார்.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நடந்த பிரசாரத்தில், அமெரிக்கர்களின் வேலைவாய்ப்பை சீனா பறித்துக் கொள்கிறது என்று ட்ரம்ப் குற்றம் சாட்டியிருந்தார். சீன வர்த்தக உறவு மறு பரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றதையடுத்து, வர்த்தகம், வேலைவாய்ப்பு விவகாரங்களில் இரு நாடுகளும் எவ்வாறு தங்களுக்குள்ள வேற்றுமைகளைப் போக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. (இ-7)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளின் தாக்குதலில் 15 பேர் பலி!

ஈராக் தலைநகர் பக்தாத்தின் தெற்கு பகுதி மற்றும் பலூஜா நகரின் மேற்கு பகுதியில் நேற்றுமுன்தினம் தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டது.



இந்த தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். 5இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த தற்கொலைப் படைத் தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

வெடிகுண்டு தக்குதலுக்கு முன்பாக தீவிரவாதிகள் ஆயுதங்களை கொண்டு தாக்குதலில் ஈடுபட்டனர். அப்போது ஈராக் படைகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

இந்தத் தாக்குதல்களில் தீவிரவாதிகள் தரப்பில் 6 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ் தீவிரவாதிகளின் பிடியில் உள்ள மொசூல் நகரின் வடக்கு பகுதியில் ஈராக் படைகள் முன்னேறி தாக்குதல் நடத்தி வரும் நிலையில் இந்த தற்கொலைப் படைத்தாக்குதல் நடைபெற்றுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி ஈராக் படைகள் ஐ.எஸ். வசமுள்ள பகுதிகளை மீட்பதற்கான பதில் தாக்குதலில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

அப்பொழுது முதல் ஐ.எஸ் அமைப்பும் பல்வேறு இடங்களில் வெடிகுண்டு தாக்குதல்களை நடத்தி வருகின்றது. (இ-7)

# ‘அனல்’ ஆண்டு ஐ.நா.எச்சரிக்கை

(மரக்கேஷ்)

கடந்த ஆண்டைவிட 2016 வெப்பமான ஆண்டாக அமையும் என, ஐ.நா., எச்சரித்துள்ளது.

கடந்த ஜனவரி, முதல் செப்டெம்பர், வரை பதிவான உலக வெப்பநிலையின் அடிப்படையில், 2015ஐ விட, 2016 வெப்பமான ஆண்டாக அமையும் என உலக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் பதோலி என்ற இடத்தில் கடந்த மே மாதம் 51 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவானது. இதுவே நாட்டின் அதிகபட்ச வெப்பநிலை.

**கூடுதல் வெப்பம்**

நேற்று முன்தினம் உலக வானிலை மையம் வெளியிட்ட அறிக்கையில் “கடந்த ஆண்டு பதிவை விட, சராசரியாக 1.2 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை கூடுதலாக நிலவும் என தெரிவித்துள்ளது. 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பதிவான வெப்பநிலையை ஆய்வு செய்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**வெப்பமான ஆண்டு**

இந்த ஆண்டு தொடக்கத்தில் தென் ஆபிரிக்காவின் பிரிட்டோரியாவில் 42.7 டிகிரியும், தாய்லாந்தில் ஏப்ரல் மாதத்தில் 44.6 டிகிரியும், இந்தியாவில் மே மாதம் 51 டிகிரியும், குவைத்தில் ஜூலை மாதம் 54 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் பதிவானது.

இவ்வாறு உலகநாடுகளில் ஜனவரி., முதல் செப்டெம்பர், வரை பதிவான வெப்பநிலையை ஆய்வுசெய்து, 2015ஐ விட, 2016 வெப்பமான ஆண்டாக அமை யும் என உலக வானிலை மையம் தெரிவித்துள்ளது. 2014இல் தொடர்ந்து வெப்பநிலை அதிகரித்து வருகிறது. (இ-7)

# ஐ.நாவில் நிரந்தர உறுப்பு நாடாக இந்தியாவுக்கு அமோக ஆதரவு

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட பெரும்பாலான உறுப்பு நாடுகள் அமோக ஆதரவு தெரிவித்துள்ளன.

ஐ.நா. பாதுகாப்புச்சபையில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய 5 நாடுகள் நிரந்தர உறுப்பினராகவும் மற்ற 10 நாடுகள் நிரந்தரமற்ற உறுப்பினராகவும் உள்ளன.

தற்போதைய உலக சூழலில், பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இதில், இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

பாதுகாப்புச் சபையில் விரிவாக்கம் செய்வதால் ஏற்படும் சாதக, பாதகங்கள் குறித்து கடந்த வாரம் (7ஆம் திகதி) நடந்த ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இதில் 50இற்கும் அதிகமான உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்று கருத்துக்களை தெரிவித்தனர்.

இது தொடர்பான அறிக்கை கடந்த 12 ஆம் திகதி ஐ.நா. இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

அதில், பெரும்பாலான நாடுகள் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி வழங்க ஆதரவு தெரிவித்தன.

குறிப்பாக இங்கிலாந்து, பிரான்ஸ், பிரேசில், ஜேர்மனி, ஜப்பான் ஆகியவை நிரந்தர உறுப்பினராக ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த விரிவாக்கம் பாதுகாப்புச் சபையில் மேலும் வலிமையாக்கும் என இங்கிலாந்து தூதர் மேத்யூ ரைகிராப்ட் தெரிவித்தார்.

உலகின் புதிய சக்திகளின் வளர்ச்சி, பாதுகாப்புச் சபைகளில் பிரதிபலிக்க தங்களின் நாடு ஆதரவு தருவதாக பிரான்ஸ் பிரதிநிதி அலெக்சிஸ் லாமேக் தெரிவித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற இந்தியத் தூதர் சயீத் அக்பருதீன், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் விரிவாக்கத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும் இதற்காக பல்வேறு கட்ட ஆலோசனை நடத்தி நேரத்தை வீணடிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தினார். (இ-7)

# 20% பணக்காரர்களுக்காக 80% ஏழைகள் பாதிக்கப்படுகின்றனர்

# நடிகர் விஜய் வேதனை



500, 1,000 ரூபாய் நாணயத்தாள்கள் செல்லாது என்று பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் அறிவித்தார். கறுப்புப் பணத்தையும், போலி நாணயத்தாள்களை யும் ஒழிக்கும் நோக்கில் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், இந்த நடவடிக்கையால் மக்கள் பீதியடையத் தேவையில்லை. மேற்கண்ட நாணயத்தாள்களை இன்னும் 50 நாட்களுக்குள் வங்கிகளில் வைப்பு செய்து கொள்ளலாம் என்றும், அந்த நாணயத்தாள்களை வங்கிகளிலும், அஞ்சல் நிலையங்களிலும் மாற்றிக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் இந்த நடவடிக்கை குறித்து நடிகர் விஜய் செய்தியாளர்களிடம் கூறியதாவது, பிரதமர் மோடியின் கறுப்பு பண ஒழிப்பு, யாரும் எடுத்திராத முயற்சி. ஆனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

20% பணக்காரர்களுக்காக 80% ஏழைகள் பாதிக்கப்படுவது வேதனைக்குரியது. மோடியின் அறிவிப்பு பொருளாதாரத்தை உயர்த்தும் என்பது நிச்சயம். அதே சமயம் வங்கியில் பணம் எடுக்க முடியாதவர்களின் பிரச்சினையை மத்திய அரசு தீர்க்கவேண்டும். மருந்துகள் வாங்க, திருமணங்கள் நடத்த மக்கள் சிரமப்படுகிறார்கள். பேத்தி திருமணம் நடக்காததால் பாட்டி தற்கொலை செய்துகொண்ட செய்தி வேதனையளிக்கிறது. எனினும் தற்போது, நிலைமை சீராகி வருவது ஆறுதல் அளிக்கிறது என்று தெரிவித்தார். (இ-7)

# இந்திய- சீன கூட்டு இராணுவப் பயிற்சி புனேயில் ஆரம்பம்

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சி முகாம் நேற்று செவ்வாய்க்கிழமை தொடங்கி, எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான கூட்டு இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சியாக இந்த முகாம் நடைபெற உள்ளதாக, தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுகுறித்து இந்தியப் பாதுகாப்புத் துறையின் சார்பில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இந்திய இராணுவமும்சீன மக்கள்குடியரசின் இராணுவமும் பங்கேற்கும் ஆறாவது கூட்டு இராணுவப்பயிற்சி முகாம், மகாராஷ்டிர மாநிலம், புனேவில் தொடங்குகிறது.



சீனாவின் யுன்னான் மாகாணத்தில் கடந்த 2007 ஆம் ஆண்டு தொடங்கிய கூட்டு இராணுவப் பயிற்சி சீனாவிலும் இந்தியாவிலும் மாறி மாறி நடைபெறுகிறது. இந்தக் கூட்டு நடவடிக்கையில், பயங்கரவாதத்தையும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளையும் எதிர்கொள்வதற்கான நடைமுறைகள் குறித்த நிபுணத்துவத்தை இருநாட்டு இராணுவங்களும் பகிர்ந்து கொள்வதோடு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கூட்டு இராஜ தந்திர நடவடிக்கைகளும் மேம்படுத்தப்படும்.

இந்த பயிற்சி முகாமை, இருநாட்டு இராணுவ அதிகாரிகள் நியமித்த கூட்டு குழு வழிநடத்த உள்ளது. இந்த முகாம் மூன்று கட்டங்களாக நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இந்தியா - பாகிஸ்தான் படையினர் கடும் மோதல்

# 7 பேர் உயிரிழப்பு

எல்லை கட்டுப்பாட்டு பகுதியில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஏழு பாகிஸ்தான் படைகள், இந்திய பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தியா - பாகிஸ்தான் இடையேயான எல்லைப் பகுதியில் கடந்த சில மாதங்களாகவே போர் பதற்றம் நீடித்து வருகின்றது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இரு நாட்டுக்கும் இடையிலான பிகிம்பர் எல்லைப் பகுதியில் இந்தியா - பாகிஸ்தான் படையினர் இடையே துப்பாக்கிச்சூடு நடந்தது.

அதிகாலை வரை நீடித்த இந்த துப்பாக்கி சண்டையில் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த ஏழு இராணுவத்தினர், இந்திய வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என அந்நாட்டு இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-7)

# உயர்நீதிமன்றத்திற்கான பதில் பிரதம நீதியரசர் ஜனாதிபதியால் நியமனம்



உயர்நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர பதில் பிரதம நீதியரசராக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து நேற்று முன்தினம் மாலை அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

இதன்போது, இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நான்கு தூதுவர்கள் உட்பட இரண்டு உயர்ஸ்தானிகர்கள், ஜனாதிபதியிடம் தமது நியமனக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உக்ரேய்ன், பூட்டான், எதியோப்பியா மற்றும் தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளின் தூதுவர்களும் தென்னாபிரிக்கா மற்றும் சீசெல்ஸ் ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்களுமே புதிதாக பதவியை ஏற்றுக்கொண்டுள்ளனர். (இ-7)

# பொலிஸாரின் சீருடையில் கமரா பொருத்துவது குறித்து யோசனை

பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரினதும் சீருடையில் குரல்களையும் காட்சிகளையும் பதிவு செய்யக்கூடிய வகையில் கமரா பொருத்துவது குறித்து யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக அம்பாந்தோட்டை ஷங்கரீலா ஹோட்டலில் நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை வரையறுக்கும் நோக்கில், சீருடையில் கமராக்களை பொருத்துவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த செயலமர்வில் வரவு- செலவுத் திட்ட யோசனையை அமுல்படுத்த சில குழுக்கள் நியமிப்பது குறித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும், இறுதித் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# இலங்கை மத்திய வங்கியை தனியார்மயப்படுத்தக் கூடாது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

இலங்கை மத்திய வங்கியை தனியார்மயப்படுத்தினால் நிதி முறைமையே வீழ்ச்சியடைந்து விடும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தங்காலை கார்ல்டன் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



மத்திய வங்கியினால் ஆற்றப்படும் பணிகள் வெளித்தரப்புக்களுக்கு வழங்கப்படுவது தேசிய குற்றமாகும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து மத்திய வங்கியை தனியார்மயப்படுத்த எடுத்துள்ள தீர்மானம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

மத்திய வங்கி தனியார்மயப்படுத்துவது நிறுத்தப்படுவதன் மூலம் நாட்டு மக்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

இவ்வாறு தனியார்மயப்படுத்தப்படுவதனால் பாரிய ளவு கொள்ளைகள் இடம் பெறக்கூடும். நாட்டின் முழு நிதி முறை மையும் வீழ்ச்சியடைவதுடன் நிதி முறைமை குறித்த நம்பிக்கையும் வீழ்ச்சியடையும்.

மத்திய வங்கியின் மீதான நம்பிக்கை காரணமாகவே நாம் மத்திய வங்கியுடன் கொடுக்கல்- வாங்கல் செய்கின்றோம்.

எமது ஆட்சிக் காலத்தில் மத்திய வங்கிக்கு ஸ்திரமான ஓர் நிலையை ஏற்படுத்திக் கொடுத்தோம்.

மத்திய வங்கியின் நிதிச் சபை விவகாரத்தில் தலையீடு செய்ததில்லை. எனினும் இன்று நிலைமை தலைகீழாக மாற்றமடைந்துள்ளது.

மத்திய வங்கி தனியார்மயப்படுத்தப்பட்டால் ஒட்டுமொத்த மக்களின் நிதிக் கொடுக்கல்- வாங்கல்களும் பாதிப்புக்கு உள்ளாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# கைதிகளை வைத்தியசாலைக்கு அனுப்பும் வைத்தியர்கள் தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

கைதிகளைச் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பும் வைத்தியர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

விளக்க மறியலில் வைக்கப்படும் சந்தேக நபர்கள் அல்லது கைதிகளை சிறைச்சாலை வைத்தியசாலைகள் அல்லது வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கும் வைத்தியர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதாக அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணிகளின் அடிப்படையில் கைதிகள், விளக்கமறியல் சந்தேக நபர்களை இந்த வைத்தியர்கள் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் சிலருக்கு எவ்வித நோய்களும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## சில செயல்கள்; சில அபிப்பிராயங்கள்

பேசிப்பேசி நல்ல அபிப்பிராயங்களை உருவாக்குவதை விட சிற்சில அசைவுகளின் மூலமே நாம் நல்லபிப்பிராயங்களை உருவாக்கி விட முடியும். சமயங்களில் பேச்சுக்கூட இரு அர்த்தங்கள் தோன்றுவது உண்டு. அசைவுகளுக்கோ இரண்டாம் அர்த்தமே இருக்க முடியாது. மொழி, நல்லபிப்பிராயங்களை உருவாக்கும்தான். ஆனால் அதை இரண்டாம் கருவியாக வைத்துக் கொள்வோம்.

கைகுலுக்கும்போது ஏனோ தானோ என்று கைகுலுக்கக்கூடாது. அதில் நம் பிரியத்தையும் அவர் மீது கொண்டிருக்கும் நன்மதிப்பையும் கையை உறுதியாகப் பற்றும் விதத்திலேயே காண்பித்து விட வேண்டும். பிறர் கைகுலுக்கப் பிரியப்படும்போது கைகளை மனப்பூர்வமாக நீட்ட வேண்டும். சம்பிரதாயமாக அல்ல. அப்போது முதுகும் சற்று ஜப்பானியப் பாணியில் வளையவேண்டும். அலட்சியமாகக் கைகுலுக்கக்கூடாது.

எவரேனும் நமக்கு வணக்கம் தெரிவித்தால் அதை ஏற்கும் வகையில் நாமும் வணக்கம் செலுத்தினால் மட்டும் போதாது. அவர்களை ஒரு கணம் பார்த்தபடியே இருக்க வேண்டும். பார்வையைச் சட்டென்று நகர்த்திவிட்டால் வணக்கம் செலுத்த வேண்டியது உன் கடமை. அதை ஏற்பது என் உரிமை என்பதாகப் பொருளாகிவிடும். புன்னகைக்கும்போதும் சரி அவர்களுக்கென சில கணங்களை ஒதுக்கவேண்டும். சட்டென்று பார்வையைத் திருப்பி விடக்கூடாது.

பேருந்துகளில், புகையிரத நிலையத்தில், பொது இடங்களில் உங்களுக்கு அருகில் ஒருவர் வந்து அமர்கிறார் என்றால் உடனே இலேசாக நகர்வதுபோல் பாவனை செய்யுங்கள். இது உங்களைப் பற்றி மிக உயர்வான அபிப்பிராயத்தை அவர்களிடையே உருவாக்கும். ஆணுக்கு ஆண், பெண்ணுக்குப் பெண் என்றால் இருக்கையைக் காண்பித்து உட்காரச் சொல்வதுபோல் (நீங்கள் சொல்லாவிட்டாலும் உட்காரத்தான் போகிறார்) கனிவான பார்வையைச் சிந்தலாம்.

வீட்டில், பணிபுரியும் இடத்தில், பெற்றோர், அண்ணன்கள், மூத்தவர்கள், உயரதிகாரிகள், தினமும் சந்திக்கிறவர்களாக இருந்தாலும் சரி எழுந்து நின்று பிறகு அமர்ந்து பாருங்கள். எழுந்து நிற்பதெல்லாம் மிக அதிகம் என்கிறீர்களா? சரி இஷ்டத்திற்கு உட்கார்ந்திருக்கும் நிலையை மாற்றிச் சற்று அடக்க ஒடுக்கமாய் உட்காருங்கள். அல்லது சற்று நிமிர்ந்தேனும் உட்காருங்கள். கால் மேல் காலைப் போட்டிருந்தால் எடுத்துக் கீழே போடுங்கள். அப்புறம் உங்களுக்கு கிடைக்கிற முக்கியத்துவமே அலாதியாக இருக்கும்.

கதவைத் திறந்து விடுதல், கைகழுவும் இடம் என்றால் கைகழுவிய பின்னர் அதே செம்பை தண்ணீருடன் எடுத்து அடுத்துக் கைகழுவ வருபவரிடம் தருதல். கைதுடைக்கும் துணியை அவரிடம் நீட்டுதல். இவையெல்லாம் முன்பின் தெரியாதவர்களுக்கும் செய்யலாம். இவற்றின் மூலம் நம்மைப் பற்றி அற்புதமான அபிப்பிராயம் பிறருக்கு சட்டென உருவாகும்.

பிறரை எழுந்து நின்று வரவேற்றல், குறுகலான பாதைகளில் நகர்ந்து வழிவிடுதல், தியேட்டர்களில் விருட்டென்று காலை நகர்த்தி (மெல்ல நகர்த்தக்கூடாது இதை எல்லோரும் செய்வார்கள்- இல்லையில்லை- செய்துதான் ஆகவேண்டும்), பிறரைக் கடந்து போக அனுமதித்தல், இதையெல்லாம் செய்து பாருங்களேன். உலகமே உங்களை நேசிக்கத் தொடங்கி விட்டதை உணர்வீர்கள்.

லேனாதமிழ்வாணன்

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

பகுதி -I வினாக்கள்

# மாதிரி வினாத்தாள்

ஒரு மணித்தியாலம்

கவனிக்க:

I எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

II 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), ( 2 ), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**15)** அஷான் மதுஷங்கவின் மதுஷங்க ஸ்ரோர்ஸ் வணிகத்திற்கும் அவர் மாற்ற எதிர்பார்க்கும் வணிகத்திற்கும் இடையிலான வேறுபாட்டை முறையே காட்டும் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. இலாபம் பகிரப்படும், இலாபம் தனியே அனுபவிக்கப்படும்.
2. பொறுப்பு வரையறுக்கப்படாதது, பொறுப்பு வரையறுக்கப்பட்டது.
3. தொடர்ந்து இயங்கும் தன்மையுடையது, தொடர்ந்து இயங்கும் தன்மையற்றது.
4. சட்ட ஆளுமை உடையது, சட்ட ஆளுமை அற்றது.

**16)** கணனி உதவியுடனான கணக்கீட்டு முறைமை சம்பந்தமாக சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. இற்றைப்படுத்திய தரவுகளைஇலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாமை
2. தேவையான உழைப்பு குறைவான படியினால் உழைப்புக்கான செலவு அதிகமாகும்
3. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தரவுகள் அழிக்கப்படலாம்.
4. கணனி மென்பொருளைக் கொள்வனவு செய்வதற்கான செலவு அதிகம் ஏற்படாது.

**17)** சொத்துக்களின் பண்புகளாக அமையாதது,

1. கடந்த காலக் கொடுக்கல் வாங்கலின் பேறாக உருவாதல்.
2. வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல்.
3. எதிர்காலத்தில் வணிகத்திற்குப் பொருளாதார நலன்கள் உட்பாய்ச்சப்படுதல்
4. நிகழ்காலக் கடப்பாடுகள் கொண்டதாக இருத்தல்.

**18)** பொறுப்புக்களை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1. காணி, தளபாடம், இயந்திரம்
2. வங்கிக் கடன், வாகனம், கடன்கொடுத்தோர்
3. வங்கி மேலதிக பற்று , வங்கிக் கடன், கடன்கொடுத்தோர்
4. கடன்கொடுத்தோர், கடன்பட்டோர், காசு

**19)** குறிப்பிட்ட தினமொன்றில் வணிகமொன்றில் காணப்பட்ட கணக்கீட்டு சமன்பாடு வருமாறு,

சொத்துக்கள் 150000 உரிமை 100000 + பொறுப்புக்கள் 50000

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இவ் வணிகத்தில் நடைபெற்ற பின்னர் காணப்படும் கணக்கீட்டு சமன்பாட்டைத் தெரிவு செய்க.

வங்கிக் கடன் பெற்றது ரூபா 50000, தளபாடம் கொள்வனவு ரூ 20000

| சொத்துக்கள் (ரூபா) | உரிமை (ரூபா) | | பொறுப்புக்கள் (ரூபா) |
|---|---|---|---|
| 1. 200000 | 100000 | + | 100000 |
| 2.150000 | 100000 | + | 50000 |
| 3.200000 | 150000 | + | 50000 |
| 4.220000 | 120000 | + | 100000 |

சயூரி என்பவரின் வணிகத்தில் 2015.01.01 திகதி அன்று காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் சில வருமாறு

| சொத்துக்கள் | ரூபா | பொறுப்புக்கள் | ரூபா |
|---|---|---|---|
| காணி | 500000 | வங்கிக்கடன் | 125000 |
| தளபாடம் | 100000 | கடன்கொடுத்தோர் | 175000 |
| கடன்பட்டோர் | 50000 | | |
| காசு | 50000 | | |

மேற்படி தகவல்களின் அடிப்படையில் 20,21 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

**20)** 2015.01.01 திகதியில் மூலதனம் எவ்வளவு?

1. ரூ 100 000 2. ரூ 700 000
3. ரூ 400 000 4. ரூ 300 000

**21)** 2015.01.01 திகதியில் நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு?

1. ரூ 100 000 2. ரூ 300 000
3. ரூ 400 000 4. ரூ 700 000

**22)** இரட்டைப் பதிவுத் தத்துவத்துக்கு அமைய கீழே தரப்பட்ட ஒவ்வொரு கணக்கிலும் பதிவு செய்யும் முறை காட்டப்பட்டுள்ளது. இதில் சரியான பதிவைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. கட்டடக் கணக்கு அதிகரித்தல் செலவு குறைதல் வரவு
2. வங்கிக் கடன் கணக்கு அதிகரித்தல் வரவு குறைதல் செலவு
3. சம்பளக் கணக்கு அதிகரித்தல் செலவு குறைதல் வரவு
4. மின் கட்டண கணக்கு அதிகரித்தல் வரவு குறைதல் செலவு

**23)** A நிரலில் மூல ஏடுகளும் B நிரலில் கொடுக்கல் வாங்கல்களும் காட்டப்பட்டுள்ளன AB என்பவற்றை இணைக்கும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1. காசு கணக்கு | W ரூ 10000 பெறுமதியான இயந்திரம் கடனிற்கு கொள்வனவு செய்தல் |
| 2. கொள்வனவு நாட்குறிப்பு | X ரூ 20000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்தல் |
| 3. விற்பனை நாட்குறிப்பு | Y ரூ. 40000 க்கு பண்டங்கள் கடனுக்கு கொள்வனவு செய்தல் |
| 4. பொது நாட்குறிப்பு | Z ரூ. 50000 சம்பளம் செலுத்துதல் |

1. yzxw 2. xzyw
3. zyxw 4. zwxy

**24)** கடன்பட்டோரிடமிருந்து பெற்று வைப்புச் செய்யப்பட்ட ரூ 15000 காசோலையொன்று மறுக்கப்பட்டுள்ளது. அதற்கு உரிய சரியான இரட்டைப் பதிவானது,

1. வங்கிக் க/கு வரவு, கடன்பட்டோர் க/கு செலவு
2. கடன்பட்டோர் க/கு வரவு, வங்கிக் க/கு செலவு
3. மறுக்கப்பட்ட காசோலை க/கு வரவு, கடன்பட்டோர் க/கு செலவு
4. கடன்பட்டோர் க/கு வரவு, மறுக்கப்பட்ட காசோலை க/கு செலவு

**25)** உடன்காசு விற்பனைக்காக கிடைத்த காசோலை ரூ 20000 க்கான சரியான இரட்டைப் பதிவைத் தெரிவு செய்க.

1. காசுக் க/கு வரவு ரூ 20000, விற்பனை க/கு செலவு ரூ 20000
2. வங்கிக் க/கு வரவு ரூ 20000, விற்பனை க/கு செலவு ரூ 20000
3. விற்பனை க/கு வரவு ரூ 20000, காசுக் க/கு செலவு ரூ 20000
4. விற்பனை க/கு வரவு ரூ 20000, வங்கிக் க/கு செலவு ரூ 20000

**26)** சமோத் என்பவரிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் ரூ 10000 ஆகும். சமோத் இதற்காக ரூபா 9000 பெறுமதியான காசோலையொன்றை வழங்குவதன் மூலம் தனது கடனைத் தீர்த்துக் கொண்டார். இக் கொடுக்கல் வாங்கலுக்கான சரியான இரட்டைப் பதிவைத் தெரிவு செய்க.

1. காசுக் கணக்கு வரவு ரூ 9000 கொடுத்த கழிவு கணக்கு வரவு ரூ 1000 சமோத் கணக்கு செலவு ரூ10000
2. காசுக் கணக்கு வரவு ரூ 9000 சமோத் கணக்கு செலவு ரூ 9000
3. காசுக் கணக்கு வரவு ரூ 10000 சமோத் கணக்கு செலவு ரூ 10000
4. சமோத் கணக்கு வரவு ரூ 9000 காசுக் கணக்கு செலவு ரூ 9000

**27)** மூல ஏடுகள் சம்பந்தமாகக் கூறப்பட்ட பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

1. வணிகக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை,பொதுவான பண்புகள் என்பவற்றிற்கேற்ப வகைப்படுத்தி பதிவதற்கு மூல ஏடுகள் பயன்படுத்தப்படும்.
2. மூல ஏடுகளானவை நாட்குறிப்புக்கள், தினசேரி போன்ற பெயர்களிலும் அழைக்கப்படும்
3. மூல ஏடுகளில் பதியும் போது மூல ஆவணங்கள் பயன்படுத்தப்படமாட்டாது.
4. மூல ஏடுகளில் கொடுக்கல் வாங்கல்களைப் பதியும் போது மூல ஆவணங்கள் பயன்படுத்தப்படும்

**28)** கழிவு நிரல்களைக் கொண்ட வங்கிக் கணக்கில் கழிவு நிரல்கள் சம்பந்தமாகக் கூறும் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1. கழிவு நிரல்களில் வியாபாரக் கழிவு பதிவு செய்யப்படும்
2. கழிவு நிரல்களில் காசுக் கழிவு பதிவு செய்யப்படமாட்டாது.
3. கழிவு நிரல்கள் சமப்படுத்தப்பட்டு மீதி காணப்படும்
4. கழிவு நிரல்கள் ஞாபக நிரல்களாகக் கருதப்படும்.

**29)** காசுக் கணக்கின் இரட்டைத் தொழிற்பாடானது,

1. காசுப் பெறுவனவு வரவிலும் காசுக் கொடுப்பனவு செலவிலும் பதிவதாகும்.
2. காசுப் பெறுவனவும்கொடுப்பனவும் கழிவும் பதிவதாகும்.
3. காசுக் கணக்கில் கொடுத்த கழிவு வரவிலும் பெற்ற கழிவு செலவிலும் பதிவதாகும்.
4. மூல ஏடாகச் செயற்படுதல், பேரேடாகச் செயற்படுதல்.

**30)** வங்கி மேலதிக பற்று காணக்கூடியதாக இருத்தல்

1. காசுக்கணக்கில் முன்கொண்டு வந்த மீதியானது வரவு மீதியாக இருத்தல்.
2. காசுக் கணக்கில் முன்கொண்டு வந்த மீதியானது செலவு மீதியாக இருத்தல்.
3. வங்கிக் கணக்கில் முன்கொண்டு வந்த மீதியானது வரவு மீதியாக இருத்தல்.
4. வங்கிக் கணக்கில் முன்கொண்டு வந்த மீதியானது செலவு மீதியாக இருத்தல்.

**31)** வங்கிக் கூற்றின் மீதியானது வங்கிக் கணக்கின் மீதியிலும் பார்க்க கூடுதலாக இருப்பதற்கான காரணமாக அமைவது.

1. வங்கிக் கட்டணம்
2. நேரடி வைப்பு
3. வைப்புச் செய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலையின் பெறுமதி
4. வைப்புச் செய்யப்பட்டு வசூலிக்கப்படாத காசோலையின் பெறுமதி

**32)** 2015.01.31 ஆம் திகதியில் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியானது ரூ.20000 ஆகவும் அத்தினத்தில் வங்கிக் கூற்று மீதியானது ரூ.22000 ஆகவும் காணப்பட்டது. இவ் வேறுபாட்டுக்கான காரணமாக இருக்கக் கூடியது.

1. வைப்பிலிட்ட போதிலும் இதுவரை வசூலிக்கப்படாத காசோலை ரூ 2000
2. வழங்கப்பட்ட போதிலும் இதுவரை வங்கியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ 2000
3. வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத ஆனால் வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ 2000
4. நிலையியற் கட்டளையின் பேரில் செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூ 2000

**33)** பவணி வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி ரூ 2000 ஆகும். 2015 01.31 ஆம் திகதி சில்லறைக் காசாளரிடம் இருந்த பணம் ரூ. 150 ஆகும். 2015.02.01 இல் சில்லறைக் காசு மீள் நிரப்பலுக்கான சரியான இரட்டைப் பதிவைத் தெரிவு செய்க.

1. சில்லறைக் காசேடு வரவு ரூ 2000 காசுக் க/கு செலவு ரூ 2000
2. சில்லறைக் காசேடு வரவு ரூ 1850 காசுக் க/கு செலவு ரூ 1850
3. காசுக் க/கு வரவு ரூ 2000 சில்லறைக் காசேடு செலவு ரூ 2000
4. காசுக் க/கு வரவு ரூ 1850 சில்லறைக் காசேடு செலவு ரூ 1850

**34)** கொள்வனவு நாட்குறிப்பின் கூட்டுத் தொகை பேரேட்டுக் கணக்குகளில் பதிவதற்கான இரட்டைப் பதிவு.

1. கொள்வனவுக் க/கு வரவு கடன் கொடுத்தோர் க/கு செலவு
2. கொள்வனவுக் க/கு வரவு கடன்பட்டோர் க/கு செலவு

(16 ஆம் பக்கம் பார்க்க)

15 ஆம் பக்க தொடர்ச்சி..

3.கடன் கொடுத்தோர் க/கு வரவு கொள்வனவு க/கு செலவு
4. கடன்பட்டோர் க/கு வரவு கொள்வனவுக் க/கு செலவு

**35)** பட்டியலொன்றில் விற்பனை நிபந்தனையாக "5/30 தேறிய 90" என குறிக்கப்பட்டுள்ளது. இதன் கருத்து.
1. கடன் தொகை மே மாதம் 30 ந் திகதியில் செலுத்தி முடிக்கப்பட வேண்டும் என்பதாகும்
2. கடன் தொகை 5.30 க்கு செலுத்தப்படாவிட்டால் மேலும் ரூ 90 மேலதிகமாக செலுத்த வேண்டும் என்பதாகும்
3. கடன் தொகையின் முழுப் பெறுமதியும் 90 நாட்களில் செலுத்தப்பட வேண்டும் எனவும் 30 நாட்களிற்குள் செலுத்தப்படின் 5% கழிவு வழங்கப்படும் என்பதாகும்.
4. கடன் தொகை செலுத்தப்பட வேண்டிய தினத்துக்கு முன் எத்தினத்திலாவது பணம் செலுத்தப்படுமாயின் 5% கழிவு வழங்கப்படும் என்பதாகும்.

**36)** 10000 ரூபாவிற்கும் தளபாடம் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டதற்கான மூல ஏடு
1. காசுக் கணக்கு 2. கொள்வனவு நாட்குறிப்பு
3. விற்பனை நாட்குறிப்பு 4. பொது நாட்குறிப் பேடு

**37)** பரீட்சை மீதியில் வரவுப் பக்கம் காணக்கூடிய கணக்கு மீதிகளை மட்டும் கொண்ட கணக்குகள்
1. காசுக் க/கு , மூலதனக் க/கு , சம்பளக் க/கு
2. வங்கிக் க/கு, விற்பனை க/கு , கடன்பட்டோர் க/கு
3. கடன்பட்டோர் க/கு, பற்றுக் க/கு, தளபாடக் க/கு
4. தளபாடக் க/கு ,பெற்ற கழிவு க/கு , பெற்ற வட்டிக் க/கு

**38)** பரீட்சை மீதி சம்பந்தமாக கீழ்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. பேரேட்டுக் கணக்குகளின் முன் கொண்டு வந்த வரவு மீதிகள் பரீட்சை மீதியில் செலவிலும்,முன்கொண்டு வந்த செலவு மீதிகள் பரீட்சை மீதியில் வரவிலும் பதியப்படும்.
2. பரீட்சை மீதியில் வரவில் சொத்து , பொறுப்பு கணக்குகளின் மீதியும் , செலவில் செலவு , கணக்கு வருமானம் கணக்குகளின் மீதிகளும் காட்டப்படும்.
3. கணக்கீடானது முழுமையாக சரியாக இருப்பின் பரீட்சை மீதியின் வரவு , செலவு நிரல்களின் கூட்டுத் தொகை நிச்சயமாக சமனாகும்.
4. பரீட்சை மீதியின் வரவு, செலவு நிரல்களின் கூட்டுத் தொகை சமனாயின் மொத்த கணக்கீட்டு செயற்பாடுகளும் நிச்சயமாக சரியாக இருக்கும் எனக் கூற முடியும்.

**39)** ரூ 12000 கொள்வனவுப் பட்டியலொன்று ஏடுகளில் முழுமையாகப் பதியப்படாது விடப்பட்டதனைத் திருத்துவதற்கான இரட்டைப் பதிவு
1. கொள்வனவுக் க/கு வரவு 12000 கடன் கொடுத்தோர் க/கு செலவு 12000
2.கொள்வனவுக் க/கு வரவு 12000 தொங்கல்க் க/கு செலவு 12000
3.கடன் கொடுத்தோர் க/கு வரவு 12000 கொள்வனவுக் க/கு செலவு 12000
4. தொங்கல் க/கு வரவு 12000 கடன் கொடுத்தோர் க/கு செலவு 12000

**40)** தொலைபேசிக் கட்டணக் க/கில் ரூபா 5000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது. இதனைத் திருத்துவதற்கான இரட்டைப் பதிவு
1. தொலைபேசிக் கட்டணக் க/கு வரவு ரூ 5000 காசுக் க/கு செலவு ரூ 5000
2.தொலைபேசிக் கட்டணக் க/கு வரவு ரூ 5000 தொங்கல்க் க/கு செலவு ரூ 5000
3.காசுக் க/கு வரவு ரூ 5000 தொலைபேசிக் கட்டணக் க/கு செலவு ரூ 5000
4. தொங்கல் க/கு வரவு ரூ 5000 தொலைபேசிக் கட்டணக் க/கு செலவு ரூ 5000

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் பகுதி -II வினாக்கள் 2 மணித்தியாலம்

- அறிவுறுத்தலுக்கமைய 5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
- முதலாம் வினா கட்டாயம்.பகுதி I இலிருந்து 2 வினாக்களையும் பகுதி II இலிருந்து 2 வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

**1)** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (I) தொடக்கம் ( X) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

க.பொ.த.உ.தி பரீட்சை எழுதியதன் பின் 2015 ஜனவரி மாதம் 1ஆந்திகதி கரண் என்பவர் மரத்தளபாடங்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வணிக மொன்றை ஆரம்பித்தார்.அவரிடமிருந்த ரூ 800000 பணத்தையும் ரூ700000 பெறுமதியான தளபாடத்தையும் ரூ 500000 பெறுமதியான வாகனத்தையும் இதற்காக ஈடுபடுத்தி 2015.01.12 ஆம் திகதி ரூ 500000 வங்கிக் கடனாகப் பெற்றார்.மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பாடுகளை மேற்கொண்டார்.பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 500000 இம்மாதம் செலவு செய்தார்.தளபாடங்களைக் கொண்டு வருவதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ 20000 ஆகும்.கொள்வனவு செய்யப்பட்ட சகல தளபாடங்களும் உடன் காசுக்கும் கடனுக்கும் விற்கப்பட்டன.உடன் காசுக்கு விற்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூ 1200000 ஆகும்.கடனுக்கு விற்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூ 400000 ஆகும்.

I. கரணின் வணிகம் நோக்கத்திற்கேற்ப உரிமைக்கேற்ப எவ்வகையான வணிக அமைப்பு என்பதனை வெவ்வேறாக எழுதுக.
II. உற்பத்தியின் தன்மைக்கேற்ப இது எவ்வகையான வணிக வகைக்கு உரியதாகும்.
III. கரணின் வணிகத்தின் 2 பலங்களை எழுதுக.
IV. கரணின் வணிகத்தில் காணப்படும் 2 உற்பத்திக் காரணிகளை உதாரணங் களுடன் எழுதுக.
V.இவ் வணிகத்தின் 2015.01.01இல் மூலதனம் யாது?
VI.ஜனவரி மாத இறுதியில் இவ்வணிகம் உழைத்த இலாபம் யாது?
VII.ஜனவரி 31 இல் மூலதனத்தைக் காண்க.
VIII.ஜனவரி 31 இல் காசு மீதி யாது?
IX.இவ்வணிகத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி யாது?
X.இதில் நடைமுறைச் சொத்தின் பெறுமதி யாது?

### பகுதி-I வணிகம்
(இப்பகுதியில் இருந்து 2வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

**2)** I.அ)தேவை,விருப்பம் என்பவற்றை வெவ்வேறாக விளக்குக.
ஆ)பொருள்கள்,சேவைகள் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் 2 எழுதுக.
II.பாடசாலை போன்ற நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தும் 2 பிரிவினர்களை எழுதி அவர்கள் அக்கறை செலுத்துவதற்கான காரணம் ஒன்று வீதம் எழுதுக.
I.உற்பத்திக் காரணிகளை எழுதி அவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக
II.பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
அ)உலகில் உள்ள அனைத்து வணிகங்களினதும் பிரதான நோக்கம் இலாபம் உழைப்பதாகும்.
ஆ)தேவைகள் வரையறுக்கப்பட்டதும் விருப்பங்கள் வரையறுக்கப்படாததும் ஆகும்.
இ)மரத்தளபாட உற்பத்தி செய்வது சேவை வணிகமாகும்.
ஈ)முகாமையாளர்கள் வணிகத்தின் மீது அக்கறை காட்டுவது தீர்மானங்களை எடுப்பதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குமாகும்.

**3)** I.பொருளாதாரச் சூழல் காரணிகள் 2உம்,அரசியல் சூழல் காரணிகள் 2உம் குறிப்பிடுக.
II.தொழில்நுட்பச் சூழல் என்பதனை விளக்குவதுடன் அதனால் வணிகங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் 2 எழுதுக.
III.பூகோள மயச்சூழல் உள்நாட்டு வணிகத்தில் ஏற்படுத்திய 2 சாதகமான விளைவுகளும் 2 பாதகமான விளைவுகளையும் எழுதுக.
IV.கீழ் தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் (✓) குறியீட்டையும் பிழையாயின்(✗) குறியீட்டையும் அடையாளமிடுக.
அ)வாடிக்கையாளர் வணிகத்தின் அகச்சூழல் காரணியாகும் ( )
ஆ)பொருள்கள் சேவைகளின் பொது விலை மட்டங்கள் அதிகரிப்பது பணவீக்கம் ஆகும். ( )
இ) நாடொன்றின் சேமிப்பு அதிகரிப்பானது முதலீட்டினை அதிகரிக்கும் ( )
ஈ)போட்டியாளர்கள் உருவாவது வணிகத்திற்கு அச்சுறுத்தல் ஆகும். ( )

**4)** I. வணிக அமைப்புக்களை உரிமை அடிப்படையில் வகைப்படுத்தும் பாய்ச்சல் கோட்டுப்படத்தை வரைக.
II. பருமன் அடிப்படையில் வணிக அமைப்புக்களை வகைப்படுத்தும் போது கருத்திற்கொள்ளப்படும் அளவு ரீதியான நியதிகளை எழுதுக.
III. கூட்டுறவுச்சங்கத்தில் காணப்படும் அனுகூலங்கள் 2 எழுதுக.
IV. கீழ் தரப்பட்ட கூற்றுக்கள் உண்மையா,பொய்யா என்பதைக் குறிப்பிடுக.
அ)சில்வா மற்றும் மகன் (சில்வா அன் சன்ஸ்) தனியாள் உரிமை வணிகமாகும்.
ஆ)வணிகத்தின் பெயரை பதிவு செய்வதன் மூலம் வணிகத்திற்கு அடையாளமொன்று கிடைக்கும்.
இ)அரச திணைக்களங்களில் 50% தனியார் துறைக்கு சொந்தமானது
ஈ)கூட்டுத் தீர்மானமெடுத்தல் பங்குடைமை வணிகத்தின் அனுகூலமாகும்.

### பகுதி-II கணக்கீட்டுக் கல்வி
(இப்பகுதியில் இருந்து 2வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

**5)** I. அ) கணக்கீட்டின் நோக்கத்தை எழுதுக.
ஆ) கணக்கீடு தேவைப்படுவதற்கான காரணங்கள் 2 எழுதுக
II.சதுஷ் வணிகத்தின் 2016 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 2016.01.01 | மூலதனம் இட்டது | ரூ500000 |
| 2016.01.05 | உடன் காசுக் கொள்வனவு | ரூ100000 |
| 2016.01.10 | வங்கியிலிருந்து பெற்ற கடன் | ரூ150000 |
| 2016.01.15 | உரிமையாளரின் சொந்தத் தேவைக்காக ரூ.10000 பெறுமதியான பொருட்கள் எடுக்கப்பட்டன. | |

மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் காட்டுக.
III. மேற்படி சதுஷ் வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய இரட்டைப் பதிவுகளை எழுதிக் காட்டுக.
IV.அவ் இரட்டைப் பதிவுகளை பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்து சமப்படுத்துக.

**6)** I. மூல ஏடுகள் நான்கினை எழுதி. அவற்றுக்குரிய மூல ஆவணங்களையும் எழுதுக.
II.காசுக் கணக்கின் இரட்டைத் தொழிற்பாட்டினை எழுதி விளக்குக.
III. திலூஷி வணிகத்தின் 2015 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில வருமாறு.

| | | |
|---|---|---|
| 2015.01.01 | ரூ 50000 மூலதனம் இடப்பட்டது. | |
| 01.04 | உடன் காசுக்கு விற்பனை ரூ 30000 | |
| 01.10 | கடனுக்கு விற்பனை | சமோத் ரூ 20000<br>ஏராங்க ரூ 15000 |
| 01.15 | காசு கொள்வனவு | ரூ 40000 |
| 01.20 | கடன் விற்பனை | மனோஜ் ரூ 20000<br>மகேஷ் ரூ 20000 |
| 01.23 | மனோஜிற்கு செலுத்தியது ரூ 15000<br>பெற்ற கழிவு ரூ 2000<br>மஹேஷிற்கு செலுத்தியது ரூ 19000<br>பெற்ற கழிவு ரூ 1000 | |
| 01.25 | கடன்பட்டோரிடமிருந்து பெற்றது<br>சமோத் ரூ 13500, கொடுத்த கழிவு ரூ 1500<br>ஏராங்க ரூ 9000 கொடுத்த கழிவு ரூ 1000 | |
| 01.25 | உபகரணங்கள் கொள்வனவு ரூ 10000 | |

மேற்படி கொடுக்கல் வாங்கல்களைக் கழிவு நிரல்களைக் கொண்ட காசேட்டில் பதிவு செய்து சமப்படுத்துக

IV. நயனா வணிகத்தின் 2015 ஜனவரி மாதத்தில் கடன் கொள்வனவுகள் வருமாறு,

| திகதி | பட்டியல் இல | வழங்குநர் | ஏனைய தகவல்கள் |
|---|---|---|---|
| 2015.01.01 | 15 | கமல் | ரோனியோ தாள் ரூ 6000<br>வியாபாரக் கழிவு 5% |
| 2015.01.15 | 25 | நிமல் | போட்டோ பிரதி தாள் ரூ 10000,<br>வியாபாரக் கழிவு 10% |

மேற்படி தகவல்களைக் கொள்வனவு நாட்குறிப்பில் பதிவு செய்து பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுக.

மிகுதி நாளை வெளிவரும்.

# 2016 இல் கடந்த 9 மாதங்களில் வீதி விபத்தினால் 2200 பேர் பலி!

## 70 ஆயிரம் விபத்துக்கள் பதிவு

இலங்கையில் இவ்வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களில் மாத்திரம் 2200 பேர் வீதி விபத்தினால் மரணித்துள்ளதாகவும் இவ்வருடத்தில் மாத்திரம் இதுவரையில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரவுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும் குறித்த வீதி விபத்துக்களினால் அதிகளவிலான பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அதிகாரிகளும் விபத்துக்குள்ளாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முறையற்ற பாதுகாப்பு கடவை, அதிக வேகத்தில் வாகனத்தை செலுத்தியமை, வீதி ஒழுங்கு முறைமைகளை கடைப்பிடிக்காமை போன்றன காரணமாகவே அதிக வீதி விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன.

அதேநேரம், இவ்வருடம் இடம்பெற்ற விபத்துக்களில் ரயில் விபத்துக்கள் கணிசமான அளவு அதிகரிப்பை காட்டுகின்றன. இதற்கான சிறந்த உதாரணமாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு பிறந்த நாள் நிகழ்வொன்றில் கலந்து கொள்ளச் சென்ற யுவதிகள் இருவர் பாடல்களை கேட்டுச் சென்றுள்ள நிலையில் ரயிலில் மோதுண்டு தூக்கி எறியப்பட்டு உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாது மாத்தறை பகுதியில் இளைஞர் ஒருவர் அதிவேக ரயில் ஒன்று எதிர்த்திசையில் பயணித்துக் கொண்டிருந்த வேளை ரயிலின் முன்பாகச் சென்று தண்டவாளத்தில் தனது கழுத்தை வைத்து தற்கொலை செய்துகொண்டிருந்தார். இவ்வாறான ரயில் விபத்துக்கள் இவ்வருடத்தில் கணிசமான அளவு இடம்பெற்றதில் அதிகளவான இளம் உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. இவற்றை வெறுமனே வீதிவிபத்துக்கள் என்று மட்டும்வரையறுத்து விட முடியாது. காரணம் இங்கு தற்கொலை செய்து கொள்ளப்பட்ட சம்பவங்கள் பலவும் பதிவாகியுள்ளன. குறிப்பாக இளைஞர்கள் தற்கொலை அதிகரித்துள்ளது. மறுபுறத்தில் வாகன சாரதிகளின் கவனயீன போக்கு மற்றும் வேகக்கட் டுப்பாட்டினை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று வாகனங்கள் விபத்துக்குள்ளாவதாலும் நாளாந்தம் ஒருவர், இருவர் என்றவாறு வீதி விபத்துக்களில் உயிரிழந்தோரின் தொகை அதிகரித்த வண் ணமே உள்ளன.

கடந்த வருடத்தில் பதிவான விபத்துக்களை தொகுத்து போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் 2590 அபாயகரமான உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன. 13095 சிறிய விபத்துக்கள் பதிவாகியுள்ளன. 13514 விபத்துக்களில் வாகனச் சேதங்களும் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் 10147 விபத்துக்கள் மோட்டார் சைக்கிள்கள் மூலமாகவும் 4429 விபத்துக்கள் லொறியின் மூலமும் 4858 வித்துக்கள் இரட்டைச் சக்கர வாகனங்கள் மூலமாகவும் 2877 விபத்துக்கள் தனியார் பேருந்துகளின் மூலமாகவும் 6871 விபத்துக்கள் ஆட்டோக்கள் மூலமாகவும் இடம்பெற்றுள்ளன.


ஆனால் கடந்த வருடத்தில் 142 பேர் மட்டுமே இழப்பீடுகளுக்காக விண்ணப்பித்துள்ளனர். இதில் 72 பேருக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ள போதிலும் ஏனைய 70 பேரினதும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது விபத்தில் இறந்தவர்களுக்கு 4 மில்லியன் ரூபாவும் காயங்களின் போதான மருத்துவ செலவுகளுக்காக 8.4 மில்லியன் ரூபாவும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் நாளாந்தம் பதிவாகும் விபத்துக்களின் அளவும் அவற்றினால் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் குறைந்த வண்ணம் இல்லை. இவ்வாறான நிலையில் இது தொடர்பாக மக்கள் அவதானமாக செயற்படுகின்றனரா? என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறு அதிகரித்துச் செல்லும் விபத்துக்களை கட்டுப்படுத்த சட்டங்கள் பல நடைமுறைக்கு வந்தபோதும் அவற்றுக்கு எந்த அளவு மதிப்பளிக்கப்படுகின்றது என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. எவ்வாறாயினும் இவ்வாறான சட்டங்களும் எமது உயிர் பாதுகாப்பினை கருத்திற்கொண்டுதான் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து செயற்படுதல் சிறந்ததாகும்.

அதேநேரம், அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு -செலவு திட்டத்திலும் வீதி விதிகளை மதிக்காவண்ணம் செயற்படுபவர்களுக்கு விதிக்கப்படும் தண்டப்பணத்தின் தொகையில் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான திட்டங்கள் குறித்து பலவாறான விமர்சனங்கள் எழுந்த போதும் அவை பாதுகாப்புக்கு ஏதுவான காரணிகளாக அமையுமாயின் வரவேற்கத்தக்கதாகும். மேலும் வழமைக்கு மாறாக இவ்வருடத்தின் முதற்பகுதியில் சிறுவர்களினால் நிகழ்த்தப்பட்ட இரு விபத்துக்கள் பதிவாகியிருந்தன. எனவே இவ்வாறான விடயங்களிலும் பொறுப்புடன் செயற்பட வேண்டியது காலத்துக்கு ஏற்ற விடயமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 901

குரு




அனு




பவானி




சிந்து




உஷாந்தன் நெய்மர்





பவி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ‘தமிழ்நாட்டிலேயே புலிகளுக்குப் பயிற்சி’

## கொள்கையில் உறுதியாகயிருந்த பிரபாகரன்



“ஜுலை 1983 தமிழர் எதிர்ப்புக் கலவரங்களின் பின்னர், தமிழ்நாட்டுக்கு தமிழ் அகதிகள் வருகையும் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்குத் தெரியக்கூடியதாக அதன் அனுசரணையுடன் தமிழ் கிளர்ச்சியாளர்கள் பயிற்றுவித்தலும் தொடங்கியது.

இந்த வகையில், தமிழ்நாட்டின் நடவடிக்கைகள் இந்தியாவின் நலனுக்கு ஏற்றதல்ல என டில்லி உணர்ந்த வேளையில்தான், 1984இல் இந்திய தேசிய புலனாய்வு முகவரங்கள், அவர்களின் பயிற்சித் திட்டங்களைத் தொடங்கின” என, “ஒப்பரேஷன் பவான்: IPKF உடன் விமானப்படையின் வகிபாகம்” எனும் தனது நூலில், முன்னாள் இந்திய விமானப்படை தளபதி பாரத்குமார் கூறியுள்ளார் என, நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

“தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் உட்பட தமிழ் கிளர்ச்சியாளர்களின் பயிற்சி, மாநில அரசாங்கத்துக்குத் தெரியும் வகையிலும் சில சமயம் அதன் ஆதரவுடனும் தொடங்கியது. டில்லி இந்த தமிழ் குழுக்களை கட்டுப்படுத்தும்படி கூறியமை தமிழ்நாட்டுத் தலைவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. இலங்கை மீதான தமிழ்நாட்டின் ஆக்கிரமிப்பை மத்திய அரசு விரும்பவில்லை. இதனால், இந்திய உளவு நிறுவனங்களும் 1984இல் தலையீடு செய்தன. இந்திய மத்திய அரசின் தலையீடு, தமிழ்நாடு அரசின் தலையீட்டைவிட நல்லதாக இருந்தது. இதற்கான காரணம் வெளிப்படையானது” என பாரத் குமார் கூறியுள்ளார்.

எம்.ஜி. இராமச்சந்திரன் மற்றும் கருணாநிதி போலன்றி பிரதமர் இந்திரா காந்தியும் ராஜீவ் காந்தியும் சுதந்திர தமிழ் ஈழம் என்பதை விரும்பவில்லை. இவர்கள், தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதம் மற்றும் பயிற்சி வழங்குதலை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காண இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு தந்திரமாகவே கருதினர்.

இதனால்தான் இலங்கைத் தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கு 1984 இல் பயிற்சி நடந்து கொண்டிருக்கையில், பிரதமர் ராஜீவ் காந்தி, டிசெம்பரில் பாக்குநீரிணையில் ரோந்துக்காக இந்தியக் கப்பல்களை அனுப்பினார் என பாரத் குமார், “சைனைட் யுத்தம்” எனும் நூலை ஆதாரமாகக் காட்டி இவ்வாறு கூறுகின்றார்,

“ராஜீவ் காந்தி, இலங்கை கிளர்ச்சியாளர்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து ஆயுதம் போவதைக் குறைக்கத் தீர்மானித்தார். மார்ச் 1985இல் பாக்குநீரிணை ஊடாக ஆயுதங்களைக் கடத்துவதாக சந்தேகிக்கப்பட்ட கப்பல்களைச் சோதனை செய்ய, இந்தியக் கரையோரப் பாதுகாப்புப்படை தொடங்கியது”.

“இந்த நிலையிலும், 1987 தொடக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தேவைக்கு அதிகமாகப் பலம் பெற்றுவிட்டதென்ற அச்சம் காணப்பட்டது. இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையவும் தொடர்பு சாதனங்ளை பறிக்கவும் என 1986 நவம்பரில், ‘ஒப்பரேஷன் ரைகர்’ எனும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது பெங்களூர் சார்க் மாநாட்டுக்கு முன்னர் நடந்தது. ஆயினும் நல்லெண்ணத்தை வளர்க்கும் நோக்கில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆகியோர் நேரடியாகப் பேச வேண்டுமென ராஜீவ் விரும்பினார். பறிக்கப்பட்ட கருவிகள் விடுவிக்கப்பட்டன.

ஜே.ஆர். - பிரபாகரன் பேச்சு முறிந்து போனது. ஜே.ஆர்.வடக்கு - கிழக்கு இணைவுக்கு உறுதியாக மறுத்துவிட்டார். பிரபாகரனும் தனித் தமிழ்நாட்டு கொள்கையில் விடாப்பிடியாக இருந்தார். இந்தப் பிடிவாதம் காரணமாக ராஜீவ் காந்திக்குப் பிரபாகரன் மீது வெறுப்புத் தோன்றி ஜெயவர்த்தனவின் கருத்துக்குச் சாதகமாகத் திரும்பினார். 1986 இல் த்மிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், மாற்று தமிழ் கிளர்ச்சி இயக்கங்களை அடக்கி ஒடுக்கியதுடன் இலங்கைப் படைகளுக்கு எதிராக யாழ். குடாநாட்டைப் பாதுகாத்தும் வந்தது. 1987 இல் யாழ்ப்பாணத்தில் தனியானதொரு நிர்வாகக் கட்டமைப்பை தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்த போது, இலங்கை அரசாங்கம் ஓரளவு பஞ்சம் ஏற்படுத்தக்கூடிய உணவு மற்றும் எரிபொருள் தடையை வடக்கில் அமுலாக்கியது.

இந்த நிலையில், ஏற்படக்கூடிய அவசர நிலைகள் என தான் கருதிய நிலைமைகளை சமாளிக்கும் பல திட்டங்களைத் தீட்டியது. இவற்றில் சில நூதனமானவையாகவும் இருந்தன.

இலங்கை, இந்தியாவின் நலனுக்குப் பாதகமான முறையில் வேறு நாடுகளை இலங்கைக்கு வரவழைத்தால் அதற்கு எதிராக இலங்கையில் படையை இறக்கும் திட்டம் ஒன்றையும் தீட்டியது.

இப்படியாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டிய நிலையை உருவாக்கியது. இந்த ஒப்பந்தம் அமுலாக்குவதை கண்காணிக்க இந்திய அமைதிகாக்கும் படை (ஐ.பி.கே.எப்.) இலங்கையில் இருப்பதற்கும் ஜே.ஆர். சம்மதிக்க வேண்டியிருந்தது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## தத்துவப் பாடல்கள் எழுதுவதில் 300

## கல்யாணசுந்தரம் சாதனை

..பெரியாரின் பகுத்தறிவு கொள்கைகளும் கம்யூனிசக் கொள்கைகளும் அவரை வெகுவாக கவர்ந்தன.

இதனைத் தொடர்ந்து இளம் வயதிலேயே மேடைப் பாடகரானார். கம்யூனிஸ்டு கட்சி கூட்டங்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் பாட்டுக் கட்டிப் பாடுவது அவரது பணிகள்.

### முதல் பாடல்

நல்லதைச் சொன்னா நாத்திகனா? இதுதான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் முதல் பாடலாகும். இதை எழுதி அண்ணன் கணபதி சுந்தரம் அதிராம் பட்டணத்தில் தி.மு.க. மேடையில் ஏறி பாடி இருக்கிறார்.


சினிமா சிந்தனை மேலோங்க கல்யாணசுந்தரம் கிளம்பி சென்னைக்கு வந்தார். அக்காலத்தில் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த டி.எஸ். துரைராஜ் சேலம் மாடர்ன் தியேட்டர் படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். நாங்கள் எல்லாம் நாடகத்தில் நடித்து விட்டுத் தான் சினிமாவுக்கு வந்தோம். நீயும் முதலில் நாடகம் நடித்து விட்டுப் பின்பு சினிமாவுக்கு வருவது தான் சிறந்தது என்று டி.எஸ். துரைராஜ் ஆலோசனை கூறியதோடு சிபாரிசு கடிதம் கொடுத்து சக்தி நாடக சபாவுக்கு அனுப்பி வைத்தார்.

முதலில் நாடகத்தில் நடிக்க அவருக்கு வாய்ப்பு தரவில்லை. நாடக சபாவுக்கான ஆயத்த வேலைகளையே செய்து வந்தார். பின்னர் அவரது குட்டிக்கதைகளையும் பாடல் திறமையையும் அறிந்ததால் நடிக்க வாய்ப்பு கொடுத்தனர். என் தங்கை கவியின் கனவு ஆகிய நாடகங்களில் நடித்தார்.

கவியின் கனவு நாடகத்தில் முக்கியமான ராஜகுரு வேடமேற்று நடித்து வந்த எம்.என். நம்பியார் சபாவில் இருந்து விலகி விட்டதால் அந்த கதாப்பாத்திரத்தில் நடிக்கும் வாய்ப்பு கல்யாணசுந்தரத்துக்கு கிடைத்தது. அந்த கதாப்பாத்திரம் அவருக்கு புகழைத் தேடிக் கொடுத்தது. அப்போது ஏ.கே.சுந்தரம் என்றே அழைக்கப்பட்டார்.

1954ஆம் ஆண்டில் டி.கே. பாலச்சந்திரன் தயாரித்த கண்ணின் மணிகள் என்ற நாடகத்தில் கல்யாணசுந்தரம் பொலிஸ்காரர் வேடமேற்று நடித்தார்.

அந்த நாடகத்தில் அவர் எழுதிய தேனாறு பாயுது செங்கதிரம் சாயுது ஆனால் மக்கள் வயிறு காயுது என்ற பாடல் பிரபலமானது. இந்தப் பாட்டுத்தான் பின்னர் சில புதிய கருத்துக்களோடு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு சினிமா படத்திலும் இடம் பெற்றது.



பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திருமணத்தை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நடத்தி வைத்தபோது எடுத்த படம்.

### பாரதிதாசன் சீடரானார்

பிறகு புதுச்சேரி சென்று தனது மானசீக குருவான பாரதிதாசனை சந்தித்தார்.

ஏற்கனவே அறிமுகம் ஆகி இருந்த கல்யாண சுந்தரத்தை அவர் தன்னுடன் தங்கி இருந்து குயில் ஏட்டை வெளியிடும் பணியில் ஈடுபடுமாறு கூறினார். அதன்படி பாரதிதாசனின் விருப்பத்தை நிறைவேற்றினார்.

அந்தச் சமயத்தில் பாரதிதாசன் எழுதும் கவிதைகள் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் சமூகப் பார்வையை கூர்மைப்படுத்தியது எனலாம்.

பாரதிதாசனிடம் மாணவராக இருந்து கவிதை இலக்கணங்களை கற்றுக்கொண்டார். பல நல்ல கவிதைகளை எழுதிப் பாராட்டும் பெற்றார்.

மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்திற்கு வசனம், பாடல் எழுதும் பணியில் பாரதி தாசன் ஈடுபட்டிருந்தார். கல்யாண சுந்தரத்தையும் பாட்டு எழுதுவதற்காக அங்கு அழைத்துச் சென்றார். அந்தச் சந்தர்ப்பத்தில் மாடர்ன் தியேட்டஸாருடன் பாரதிதாசனுக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு திரும்பினார். உடனே அவரோடு கல்யாண சுந்தரமும் புறப்பட்டார். ஆனால் பாரதிதாசன் கல்யாணசுந்தரத்தை தட்டிக் கொடுத்து நீ முன்னேற வேண்டியவன் பொறுத்துக் கொண்டு இங்கேயே இரு என்று சொல்லி விட்டு போனார்.

குருவின் கட்டளையை ஏற்று கல்யாணசுந்தரம் சேலத்திலேயே தங்கி இருந்து மாடர்ன் தியேட்டர்ஸ் சினிமா படங்களுக்கு பாடல் எழுதினார்.

(தொடரும்)

# கலைத் தரிசனம்

## எஸ்.ஜீ.சாந்தன்
## அவர்களுடனான ஒரு நேர்காணல்



ஈழத்தின் தலைசிறந்த முதன்மைப் பாடகராக எஸ்.ஜீ.சாந்தன் திகழ்கின்றார். 1991 ஆம் ஆண்டு வெளியான மகிந்த மண் எங்க ளின் சொந்த மண் என்ற ஒலிப் பதிவு நாடாவில் பூமலர்ந்தது கொடியினில் ஒரு புலி பிறந்தது மடியினில் என்ற பாடலினைப் பாடிப் புரட்சிப் பாடற்துறைக்குள் நுழைந்தார்.300 இற்கு மேற்பட்ட புரட்சிப் பாடல்களையும் 350 இற்கு மேற்பட்ட பக்திப்பாடல்களையும் பாடித் தமிழ் நெஞ்சங்களில் நீங் காத இடத்தைப் பிடித்தார். வே.பிரபாகரனினால் ஆறு தடவைகள் பரிசுகளைப் பெற்றார். நோர்வே, பிரான்ஸ் ,நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து,டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று பாடல்களைப் பாடித் தடம்பதித்தார்.

1960 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி புங்குடுதீவில் பிறந்த இவர் சிறந்த நடிகராகவும் பல குரல்களில் கதைக்கும் வல்ல வராகவும் வில்லிசைக் கலைஞனாகவும் பல்துறைகளில் விளங் குகின்றார். அவர் வலம்புரிக்கு அளித்த செவ்வியினை இங்கே தருகின்றோம்.

**நீங்கள் பாடல் உலகிற்குள் எவ்வாறு கால்பதித்தீர்கள்?**

நான் சிறுவயதில் பாடுகின்ற போது கேட்டுக்கொண்டிருப்பவர்கள் நன்றாகப் பாடுகிறாய் என்று சொல்லுவார்கள். அப்போதெல்லாம் எனக்குள் உற்சாகம் ஏற்படும். என்னுடைய தகப்பனார் கொழும்பில் கடை வைத்திருந்தார். விடுமுறைக் காலத்தில் கொழும்பில போய் நிற்பேன்.ஒருமுறை சிவராத்திரி விடுமுறைக்காக கொழும்பு கதிரேசன் கோவிலில் இசைக் குழு நிகழ்த்தினர். கலாவதி சின்னச் சாமி, முத்தழகன் போன்றோர் பாடினார்கள். என்னையும் பாடச் சொன்னார்கள். அப்போது என க்கு 12 வயது தான். அப்போது நான் ''மருதமலை மாமணியே முருகையா'' என்ற பாடலைப் பாடினேன். எனக்குத் தாளமோ, சுருதியோ தெரியாது. ஒரு மாதிரிப்பாடி முடித் தேன். அதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. பிறகு என்னைத் தூக்கிக் கொண்டு ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலிலும் பாட வைத் தனர். அன்று பாட ஆரம்பித்த னான். படிப்படியாகப் பாடிக் கொண்டிருந்தேன்.

1991ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் இருந்த பொழுது விடுதலைப்புலிகள் கேட்டார்கள். ஒலிநாடாவிற்குப் பாடுறீங்களோ என்று. நானும் ஆம் எனச் சம்மதித்து அப்படியேபாடல்உலகில்கால்பதித்தேன்.

**தாங்கள் இதுவரைக்கும் எத்தனை புரட்சிப் பாடல்களைப் பாடியுள்ளீர்கள்? அதில் தாங்கள் பாடிய முதல் பாடல் எது? அதில் தாங்கள் பாடிய இறுதிப் பாடல் எது?**

300இற்கும் மேற்பட்ட புரட்சிப் பாடல்களைப் பாடியுள்ளேன். 1991 இல் வெளியான இந்த மண் எங்களின் சொந்தமண் என்ற ஒலிப் பதிவு நாடாவில் நானும் பாடகி சியா மளாவும் சேர்ந்து சோடியாக,

"பூமலர்ந்தது கொடியினில்
ஒரு புலி பிறந்தது மடியினில்"

என்ற இந்தப் பாடலைப் பாடினோம். இந்தப் பாடல் தான் எனது முதலாவது பாடல். இரண்டாவது பாடல் "இந்த மண் எங்களின் சொந்த மண்..."

**தாங்கள் பாடிய பாடல்களில் நெஞ்சை விட்டு அகலாத பாடல் என்றால் எதனைக் குறிப்பிடுவீர்கள்?**

வேங்கைகளின் விடுதலை வேதங்கள் என்ற ஒலி நாடாவில் பாடிய மாவீரர் பாடல்தான்.

"பின்வரும் மேகங்கள் பாடும்
மாவீரரின் நாமங்கள் கூறும்..."

**நீங்கள் இதுவரைக்கும் எத்தனை பக்திப்பாடல்கள் பாடியுள்ளீர்கள்? அந்தப் பக்திப்பாடலில் முதல் பாடல் எது?**

இதுவரைக்கும் 350 பக்திப் பாடல்களுக்கு மேல் பாடியுள்ளேன். "நம்பினோம் மூத்த விநா யகனை நாடியே வந்தோம் உம் சந் நிதியில்'' இதுதான் நான் பாடிய முதலா வது பக்திப்பாடல்.1993ஆம் ஆண்டு பாடினேன்.இப்பாடலை இணுவில் கவிஞர் வீரமணி ஐயர் எழுதினார்.

**''பிட்டுக்கு மண் சுமந்த பெருமான்'' என்ற இறை இசைப்பாடல் அனைவரினதும் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட பாடல். அந்தப்பாடலின் அனுபவத்தைக் கூறுங்கள்?**

1997 ஆம் ஆண்டு "கோபுர வாசல்'' என்ற ஒலிநாடா மட்டக்களப்புத் திருத்தலங்களை வைத்துப் பாடப்பட்டது.மொத்தம் பத்துப் பாடல்கள்.அதில் ஒருபாடலை என்னைப் பாடச்சொல்லிச் சொன்னார்கள். எஸ்.வி.ஈஸ்வரநாதன் தான் இசை வழங்கினார். இந்தப் பாடலைப் கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதினார். அதில் இசையமைத்த பங்கு யாழ்.இரமணனையும் சாரும்.அவரும் அதில் கிற்றார் வாசித்தார். இந்தப் பாடலைப் ஒலிப்பதிவு செய்யும்போது கூட ஒலிப்பதிவு கருவி கூட பழுதடைந்துவிட்டது. பின்னர் ரேப் றெக்கோடரிலதான் பதிவு செய்தோம். சிறிய காலத்திற்குப் பிறகு அந்தப் பாடலைத் திரும்பச் செய்ய வேண்டும் என்றார்கள்.ரேப் றெக்கோடரில பதிவு செய்ததை புதுவை இரத்தினதுரையிடம் போட்டுக் காட்டினார்கள்.அவர் சொன்னார் இது நன்றாக இருக்கிறது.திரும்ப பாட வேண்டியதேவையில்லை.இதையே நீங்கள் போடலாம் என்றார். பின்னர் இசையை மட்டும் மீள்ஒலிப் பதிவு செய்தார்கள். உண்மையாக் இந்தப் பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்ட தல்ல, ரேப் றெக்கோடரில சாம் பிளாகச் செய்யப் பட்டது. நித்தியனின் மகன் டன்னா தான் ஒலிப்பதிவு செய்தார். இந்தப்பாடல் மட்டக்களப்பில வெளியீடு செய்யப்பட்டது.என்னை அறியாமலேயே அது கோபுர உச்சிக்கு வந்தது.

**அரிச்சந்திரன் நாடகத்தில் தாங்கள் சிறந்த நடிகர். அந்த வகையில் நாடகத்துறை சார்ந்த அனுபவத்தைக் கூறுங்கள்?**

சிறுவயதில் பள்ளிக்கூட நாட்களில் நாடகம் நடித்த அனுபவம் உண்டு. சாம்பிராட்ட அசோகன் என்ற நாடகத்தில் புத்த பிக்குக்கு நான் நடித்தேன். வி.வி.வைரமுத்துவைத் தெரியாத காலத்திலேயே அவரது நாடகங்களைப் பார்த்திருக்கின்றேன். பார்த்த போது நடிக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்தது. நடிக்கக் களம் கிடைக்காதோ எனக் காத்திருந்தேன்.

கிளிநொச்சியில் கங்கேஸ்வரா நாடகமன்றத்தை உருவாக்கிக் கலைஞர்களை உருவாக்கிச் சமூக நாடகங்களைத் தயாரித்தேன். கேட்காத காதுகள், மாமி சறுக்கி விழுந்தாள் என்ற நகைச் சுவை நாடகத்தையும் அருணகிரி வரலாற்று நாடகத்தையும் அளிக்கை செய்திருந்தேன். இசை நாடகத்தில் நடிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. நாடகத்தில் பாடல் களைப் பாடிக் கொண்டிருந்த போது இசையை அரியாலையைச் சேர்ந்த பாஸ்கரன், வாசன் கீபோட், கிற்றார் வாசித்தார்கள். நான் பாஸ்கரனின் இல்லத்தில் தங்க வேண்டி வந்தது. தங்கியிருந்த போது வி.வி.வைரமுத்துவோடு நடித்த செல்வத்துடன் நட்பு ஏற்பட்டது. அவரும் எங்கள் இசைக் குழுவில பாடலைப் பாடுவார். பாடும் போது நான் அவரிடம் கேட்டிருந்தேன். நான் இசை நாடகம் நடிக்க வேண்டும் என்று அவரும் சந்தர்ப்பம் வரும்போது சொல்லுகிறேன் என்றார். ஒருமுறை அவருடைய தம்பி சின்னக்கிளி கேட்டார் ஒருநாடகம் போடுவமா என்று? நானும் சரி என்று சொல்ல சோபித சொர்ணக்குயில் இரத்தினம் நாடகத்தைப் பழக்கினார். தற்காலிகமாக ஒரு நாளைக்கு அந்த நாடகத்தைப் போடுவம் என்று அரியாலையில் செல்வம் என்பவரின் வீட்டிற்கு முன்னாலுள்ள மைதானத்தில் மேடையேற்றினோம். மேடையேற்றியபோது அது வெற்றிகரமாக முடிந்தது. இந்நாடகத்தை இரண்டு மூன்று இடங்களிலும் ஆற்றுகை செய்யுமாறு பார்வையாளர்கள் கேட்டுக் கொண்டார்கள். தொடர்ந்து நாடக அளிக்கையைச் செய்து வந்தோம். பார்வையாளர்கள் அலைமோதினார்கள். இந்த ஆர்வத்தோடு அரிச்சந்திரன் நாடகத்தை 50 தடவைகளுக்கு மேல் ஆற்றுகை செய்தோம். பின்னர் சத்தியவான் சாவித்திரி நாடகத்தைப் பழக்கினோம். அந்நாடகத்தை 10 தடவைகளுக்கு மேல் அளிக்கை செய்திருந்தோம்.

**நீங்கள் பல குரல்களில் கதைப்பீர்கள். யார் யார் மாதிரி கதைப்பீர்கள்?**

நான் கலைஞர் மு.கருணாநிதி , நடிகர் செந்தில், நடிகர் கவுண்டமணி, நடிகர் உசிலமணி, நடிகர் ராதாரவி போன்றவர்களைப் போல் கதைப்பேன். இவற்றோடு சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஜேசுதாஸ், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், திருச்செல்வநாதன் போன்ற பாடகர்கள் மாதிரிப் பாடுவேன்.

**நீங்கள் எஸ்.ஜீ.சாந்தன் இசைக்குழு நடத்தி வருகிறீர்கள். அதுபற்றி?**

21 வயதில் எஸ்.ஜீ.சாந்தன் என்ற எனது சொந்தப் பெயரில் இசைக் குழுவை ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் ஆர்மோனியம், தபேலா போன்ற இசைக்கருவிகளை வைத்து பாடி வந்தோம். பின்னர் காலத்தின் ஓட்டத்தில் புதிய இசைக் கருவிகளின் துணையுடன் பெரிய அளவில் நடத்தி வருகின் றோம். ஆலயங்களின் உற்சவ காலத்திலும் மங்களகரமான நிகழ்வுகளுக்கும் எமது இசைக்குழுவை அழைப்பார்கள். ஆரம்பத்தில் கலைஞர்கள் குறைவாக இருந்தார்கள். தற்பொழுது போதுமான அளவிற்கு துறைசார்ந்தசிறந்தகலைஞர்களைக்கொண்டு இயங்குகின்றது. தற் பொழுது உடல் நிலை சீராக இல்லாத காரணத்தினால் எனது மகன் பாடகராக இருப்பதனால் தற்பொழுது அவரே இந்த இசைக்குழுவை நெறிப்படுத்தி வருகின்றார்.

**நீங்கள் பெற்ற வெற்றிகள் விருதுகள் பற்றி?**

கிளிநொச்சியில் ''தேனிசை மழலை'' ப்போட்டியில் பங்கு பற்றி முதல் பரிசு பெற்றேன்.

"பாட்டுக்குப் பாட்டு" போட்டியில் பங்குபற்றி முதல் பரிசு பெற்றேன்.

மிருசுவிலில் மண்டேஸ் இசைக் குழுவின் பாடல் போட்டியில் முதல் பரிசு பெற்றேன்.

ஒவ்வொரு ஒலிநாடாவுக்கும் பாடியபோது அதில் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றேன்.

ஒவ்வொரு இறுவெட்டுக்கும் பாடியபோது அதில் பல பரிசில்களைப் பெற்றேன்.

பக்திப்பாடல்கள் பாடியமைக்காகப் பல கோவில்கள், பல பட்டங்களை வழங்கினார்கள்.

புரட்சிப் பாடலுக்காக அவர்களினால் ஆறு தடவைகள் பரிசுக ளைப் பெற்றேன். புலம்பெயர் தேசத்துக்குச் சென்று பாடி பல பரிசில்களைப் பெற்றேன்.


**இறுதியாக இந்தப் பாடலுலகிற்கு நீங்கள் மனந்திறந்து கூறுவது?**

இலங்கையைப் பொறுத்த வரையில் இசையுலகில் ரசிகர்களை சம்பாதிக்கலாம். ஆனால் வாழ்க்கையை கொண்டு நடத்துவதென்பது பெரும் சிக்கல். பாடலைத் தொழிலாக வைத்து வாழ முடியாது. என்னதான் இங்கு மிகத் திறமையாகச் செய்தா லும் அதற்கு கொடுக்கின்ற முக்கியத்து வம் குறைவாக இருக்கின்றது. இந்தியாவிலிருந்து யாராவது வந்தால் வரவேற்புக் கொடுப்பதும் அவர்கள் பாடினால் இலட்சக்கணக்கில் கொடுப்பார்கள். அந்தளவிற்கு சினிமா மக்கள் மனதை பிடித்துக் கொண்டுள்ளது. இங்கு ள்ள கலைஞர் களை அதிசய மாகப் பார்க்கின்ற காலம் குறைவாகவே உள்ளது. முன்பு நான் பாடிய பாடல்களை முப்பது தடவை பாடி ஒத்திகை பார்த்துப் பாடினேன். பாடும்போது அப்படியே அந்தப் பாடல்கள் மனதில் பதிந்துவிடும். பாடி முடிந்தாலும் அந்தப் பாடலை நினைவாற்றலுடன் திரும்பப்பாடு வோம். பாடல் அசைவை 20 தடவைக்கு மேலே இழுத்து இழுத்துப்பாடுவோம். சொற்கட்டை எப்படிக் கையாள்கின்றார்கள் என்றெல்லாம் நுணுக்கமாகப் பார்ப்போம். ஒரு பாடல் பாடும்போது சரியாக வரவில்லை என்றால் திரும்பத் திரும்பப் பாடி பயிற்சி எடுக்க வேண்டும். சுருதியை சரியாக கடைப்பிடிக்க வேண்டும். தொண்டையை கவனமாக வைத்திருக்க வேண்டும். அடிப்படையில் சங்கீதம் தெரிந் திருக்க வேண்டும். சங்கீதத்தை கற்ற ஒருவரால் பாடல்களுக்கு மெட்டுப்போடுவது இலகுவாக இருக்கும். ஆதலால் சங்கீதம் கற்றிருப்பது ஒரு பாடகருக்கு மிகப் பிரயோசன மாக இருக்கும்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# பட்ஜெட் - 2017

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...



# கடற்றொழிலை விருத்தி செய்ய பாரியளவு நிதியொதுக்கீடு

(தொடர்ச்சி)

குறித்த மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் போது விதிக்கப்பட்ட வரிகளை ஏற்றுமதியின் போது மீளப்பெற்றுக் கொள்வதற்கு அத்தகைய வியாபார முயற்சிகள் தகைமை பெறும்.

62.மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பன தமது நிர்வாகத்தின் கீழ் குறைந்த பயன்பாடுடைய 23,400 ஏக்கர்களை வைத்திருப்பதுடன், அவற்றின் விளைச்சலானது தேசிய சராசரியினை விடக் குறைவாகக் காணப்படுவதுடன் அதிகளவிலான நட்டமேற்பட்டு அரசாங்க நிதி இல்லாது போயுள்ளது.

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் மூலம் காணி மற்றும் ஏனைய சொத்துக்களை பயிர்ச்செய்கை மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துவதனை அரசாங்கம் வலியுறுத்துகின்றது.

இச்செயன்முறைக்காக 2017 இல் அரச பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றினை நாம் மீள்கட்டமைப்புக்கு உட்படுத்தவுள்ளோம்.

இத்தீர்மானத்தின் மூலம் தொழில்வாய்ப்பு இழப்பேதும் ஏற்படமாட்டாது என்பதனை நான் மீண்டும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதன் மூலம் வரி செலுத்துவோரின் நிதியிலிருந்து குறைந்தபட்சம் ரூபா 29 பில்லியனை எம்மால் சேமிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

63.தற்பொழுது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு போன்ற பிரதான நுகர்வுப்பொருட்கள் நேரத்தினை விரயம் செய்கின்ற மிகவும் சிக்கலான முறையில் கையினால் எண்ணப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இதற்காக, தன்னியக்க நுகர்வுப்பொருள் பரிமாற்றுமுறையொன்றினை உருவாக்குவதற்கு ரூபா 75 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கு மேலதிகமாக இலங்கை தேயிலைச் சபை, தெங்கு அபிவிருத்திச் சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்பன தமது செஸ் நிதியினூடாக குறித்த செயற்றிட்டத்திற்கு பங்களிப்புச் செய்யும்.

**சீனிக்கைத்தொழில்**

64. சபாநாயகர் அவர்களே, நாம் சீனி இறக்குமதிக்காக வருடத்திற்கு ஏறக்குறைய 250 - 400 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரை செலவிடுகின்றோம். எவ்வாறாயினும், சீனி உற்பத்திக்காக ஆற்றலினை அதிகரிப்பதன் மூலம் மாத்திரம் வெளிநாட்டுச் செலாவணி வெளியேற்றத்தினை எம்மால் நிறுத்த முடியாது.

ஆயினும் நாட்டில் தொழில் வாய்ப்பினை உருவாக்குதல் வேண்டும். இந்த வகையில், கரும்பு செய்கைக்காக உள்ளூர் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு 2017 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பயன் வலுப்பெறும் வகையில் கரும்பு மெற்றிக்தொன் ஒன்றுக்கு ஆகக் குறைந்த விலையாக 5,000 ரூபாவினை விதிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

மொனறாகலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நாளொன்றுக்கு 2,000 தொன்களை அரைக்கின்ற ஆகக் குறைந்த பொறித்தொகுதியில் முதலீடு செய்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

அத்துடன், உரிய தொழிற்சாலைகளில் வெளி பயிர்ச்செய்கையாளர்கள் முறைமையின் கீழ் கரும்பு பயிர்ச்செய்கைக்காக அரசாங்க காணிகளை வழங்குவதற்கும் முன்மொழிகின்றேன்.

மேலும் பெறுமதி சேர்க்கைக்காக சீனிக்கட்டிகளை இறக்குமதி செய்வதை நாம் ஊக்குவிக்கின்றோம்.

65.கரும்பு செய்கையாளர்களை விலைத்தளம்பல் மற்றும் பூச்சி, யானைத் தாக்குதல் என்பவற்றினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதற்கும் இறக்குமதி செய்யப்பட்ட சீனி மீதான 2 சதவீத மற்றும் எதனோல் இறக்குமதிகள் மீதான 5 சதவீத செஸ் வரியினையும் விதிப்பதன் மூலம் சீனி கைத்தொழில் உறுதிப்படுத்துகை நிதியம் ஒன்றினை ஸ்தாபிப்பதற்குநான் முன்மொழிகின்றேன்.

**பாற்பொருள் கைத்தொழில்**

66.சபாநாயகர் அவர்களே, 2015 இல் உள்நாட்டு பால் உற்பத்தி 375 மில்லியன் லீற்றராக அதிகரித்த போதிலும், அவற்றினால் உள்நாட்டு கேள்வியினை முழுமையாக ஈடுசெய்வதற்கு இதுவரை முடியாதுள்ளது.

இதுவரை நாம் 81,000 மெற்றிக்தொன் பால்மாவினை இறக்குமதி செய்து வருகின்றோம். இந்த வகையில் நாட்டுக்குள் திரவப்பால் வழங்கலினை அதிகரிப்பதற்கு அதிக பால் உற்பத்தியினை தரக்கூடிய 15,000 பசுக்களை இறக்குமதி செய்வதற்கு வெளிநாடுகளுடன் நாம்பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம்.

பாற்பண்ணைக் கைத்தொழிலினை சுயதொழிலாக மேற்கொள்ளும் ஒவ்வொரு பண்ணையாளருக்கும் ஆகக்குறைந்தது 10 பசுக்கள்வழங்கப்படும் இப்பாற்பண்ணைகளில் வேலை செய்வதற்கு ஆகக் குறைந்தது இரண்டு சமுர்த்தி பயனாளிகளை கட்டாயம் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். பண்ணையாளர்கள் இடைவெளி நிதியளிப்புத் திட்டமொன்றினூடாக உதவி வழங்கப்படுவர். இதற்காக ரூபா 400 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்படுகின்ற காணிகளை அரச, தனியார் பங்கேற்பினூடாக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மனைப் பொருளாதார ஒருங்கிணைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கும் பாற்பண்ணை அபிவிருத்தி வலயங்களை ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

67.கடந்த வருடம் 400 கிராம் பால்மாவினை 295 ரூபாவிற்கு விற்பனை செய்வதற்கான உபாய முறையொன்றினை நாம் ஆரம்பித்தோம். சர்வதேச விலை அதிகரித்துக் காணப்பட்டபோதிலும், உள்நாட்டு பால் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு உதவும் வகையில் இச் செயன்முறையினை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்ய மேலும் முன்மொழிகின்றேன்.

**கடற்றொழில் கைத்தொழில்**

68. சபாநாயகர் அவர்களே, 2015 இல் மீன்பிடி மற்றும் கடற்றொழிலுடன் தொடர்புடைய ஏற்றுமதிகள் ஐக்கிய அமெரிக்க டொலர் 163 மில்லியனாக இருந்தது.

எதிர்வரும் 3-5 வருடங்களில் நண்டு,சிங்க இறால், இறால், மட்டி மற்றும் கடலட்டை என்பவற்றை பெறுமதி சேர்ப்பின்றி ஏற்றுமதி செய்தல் மாத்திரமன்றி, பதப்படுத்தல் மற்றும் தகரத்திலடைத்தல் போன்ற பெறுமதி சேர்க்கையினூடாகவும் குறைந்தது 5 மடங்குகளினால் ஏற்றுமதி வருவாயினை அதிகரிப்பதற்கு குறிப்பிடத்தக்க சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

இது தொடர்பாக அம்பாந்தோட்டை, மன்னார் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் நீரியல்வள கைத்தொழில் வலயங்களை மேம்படுத்தும் பொருட்டு ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

செயற்பாட்டு ரீதியான வினைத்திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் அறுவடைக்கு பிந்திய இழப்புகளைக் குறைக்கும் நோக்குடனும் பல்-நாள் படகுகளுக்கான புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துவதற்கும் நான் ஊக்குவிக்கின்றேன்.

கடற்றொழில் கைத்தொழிலுக்கு மேலும் ஆதரவளிப்பதற்காக திக்ஓவிட்ட மீன்பிடித் துறைமுகத்தில் அரச தனியார் பங்கேற்பின் அடிப்படையில் 1,000 மெற்றிக்தொன் கொள்ளளவுடன் குளிரறை ஒன்றை நிர்மாணிப்பதற்கும் ஊக்குவிக்கின்றேன்.

அதேவேளை மீன்பிடித்துறை முகங்களினதும் மற்றும் நங்கூரத் தளங்களினதும் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக ரூபா 1,350 மில்லியனை ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளதுடன், கந்தர மீன்பிடி துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக மேலும் ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

69.நாட்டின் கரையோர மற்றும் குடாநாட்டுப் பிரதேசங்களான அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக 10 கரையோர மாவட்டங்களில் வீடமைப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தியினை மையமாகக் கொண்டு மீன்பிடிக் கிராமங்களை விருத்தி செய்வதற்கும் ரூபா 1,200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

70.உள்ளூர் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலின் அபிவிருத்தியானது போசாக்குப் பற்றாக்குறைக்குத் தீர்வுகாணல், கைத்தொழில்களை மேம்படுத்தல், வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் உள்ளடங்கலாக பல மடங்கு நன்மைகளை உருவாக்கும். அதேபோல் " வெவக் சஹித கமக்" (குளத்துடன் கிராமம்) நிகழ்ச்சித்திட்டம் எனும் 100 ஒன்றிணைக்கப்பட்ட உள்ளூர் நன்னீர் மீன்பிடிக் கிராமங்களை ஸ்தாபிக்கும் நோக்குடன் ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

71. சபாநாயகர் அவர்களே, பல்வேறு வகையான மீன் குஞ்சுகளை போதியளவு வழங்குவதனூடாக இக்கைத்தொழிலுக்குச் சிறந்த முறையில் ஆதரவளிப்பதற்காக தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் (NAQDA) செயற்பாடுகளை விரிவாக்குவதற்கு ஊக்குவிப்பதோடு, இந்நோக்கத்திற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

அத்தோடு கடற்றொழில் கைத்தொழிலின் வர்த்தகமயமாக்கலுக்கு ஆதரவளிப்பதற்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுமாறு தேசிய நீரியியல் வள ஆராய்ச்சி அதிகார சபையினையும் (NARA) ஊக்குவிக்கின்றேன்.

**கோழி வளர்ப்புக் கைத்தொழில்**

72.சபாநாயகர் அவர்களே, கால்நடைகளின் உணவில் பிரதான உள்ளீடாக சோளம் விளங்குகின்றது. எமது மொத்த சோள உற்பத்தியான 225,000 மெற்றிக்தொன் சோளஉற்பத்தியானது எமது உள்ளூர் தேவையான பெரும்பாலும் 400,000 மெற்றிக்தொன் தொகை சோளத்தினை பூர்த்தி செய்வதற்குப் போதியதாக இல்லை என்பதை நான் உணர்கின்றேன்.

அதேபோல, கால்நடை உணவுக் கைத்தொழிலானது உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்பட்ட சோள உற்பத்தியில் பற்றாக்குறையொன்றுக்கு முகங்கொடுக்கும் போது கால்நடை உணவு உற்பத்தி செய்யும் ஆலை உடைமையாளர்களுக்கு செஸ் வரியொன்றினைச் செலுத்தியதன் பின்னர் பற்றாக்குறையாகவுள்ள சோளத்தினை இறக்குமதி செய்து கொள்ள முடியும்.

செஸ் வரியானது கோழி இறைச்சியினை ஏற்றுமதி செய்வதன் மீதான ஒரு ஏற்றுமதித் தள்ளுபடியொன்றாக மீளச் செலுத்தப்படும்.

73.இறக்குமதியானது, குறுகிய கால நிரம்பலின் பற்றாக்குறையினைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அதேவேளை, இத்தீர்வானது நீண்டகால தீர்வொன்றாக அமையப் போவதில்லை.

அதேபோல், குறைந்தது, 20, 000 ஏக்கர் மொத்த நிலப்பரப்பொன்றில் குறைந்தது10,000 வெளிவளர்ப்பு விவசாயிகளை உள்ளடக்கிய வெளிவளர்ப்பு முறைமையொன்றில் முதலீடு செய்வதற்கு தனியார் துறை முதலீட்டாளர்களை ஊக்குவிக்கின்றேன்.

முதலீட்டாளர்கள் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான நீட்டிப்புச் சேவைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதோடு, அரசாங்கம் வட்டிச்செலவில் 50 சதவீதத்தினை ஏற்றுக்கொள்ளும்.

அதேபோல, இந்நோக்கத்திற்காக ரூபா 350 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

74.நுகர்வோர் சிறந்த தரத்திலான கோழி உணவு உற்பத்தியில் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக 48 மாதகால கடன் அடிப்படையில் 15,000 புதிய சுய தொழில் வர்த்தகர்களுக்கு குளிர்சாதனப் பெட்டிகளை வழங் குமாறு கோழிவளர்ப்பு உற்பத்தியாளர்களை வேண்டிக் கொள்கின்றேன்.

இதற்கான வட்டியானது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளதோடு இதற்காக 2017 இல் ரூபா 75 மில்லியனைஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

(தொடரும்)

முட்டாள் என்பவன் யார் தெரியுமா? தன் வியாதிக்காக டாக்டரிடம் போய் தன் சொத்துக்களுக்கு அவரையே வாரிசாக்கிறானே அவன்தான்.
- பெஞ்சமின் ஃபிராங்க்லின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பான் கீ மூன் மட்டுமல்ல சுப்பர் மூனும் எங்களை ஏமாற்றிற்று

உலகில் நம்பிக் கெட்ட இனம் ஒன்று இருக்குமாயின் அது நம் தமிழினமாகவே இருக்க முடியும் உலக நாடுகள் நம்மைக் காப்பாற்றும் என்று நம்பியிருந்தோம். ஆனால் நடந்தது வேறு கதையாயிற்று.

இப்போது ஈழத் தமிழினம் உலக நாடுகளின் பரிசோதனைக்குரிய இனமாக மட்டுமே பார்க்கப்படுகிறது.

மண் மீட்புப் போர் அதற்கான ஏதுக்கள், போராட்டத்தின் உச்சம், விடுதலைப் புலிகளின் தோல்வி, அதன் பின்னணியில் உலக நாடுகளின் பங்களிப்பு, போருக்கு பின்பாக தமிழ் மக்களை முட்கம்பி வேலிக்குள் அடக்கிய அட்டூழியம் இவற்றிலிருந்து ஒரு விடுதலை அமைப்பை தோற்கடிப்பதும் அந்த அமைப்புச் சார்ந்த இனத்தின் உணர்வை நசுக்குவதும் பற்றி சர்வதேச சமூகம் கற்றுக்கொண்டது.

இப்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழினம் எப்படி வாழ்கிறது. அதன் போராட்ட உணர்வுகள் எங்ஙனம் மங்கிப் போகிறது என்பன பற்றிய ஆய்வில் சர்வதேச சமூகம் ஈடுபட்டுள்ளது.

ஆக, சுருங்கக்கூறின் உலக நாடுகளின் ஆய்வு கூடத் தவளைகளாக மட்டுமே நம் தமிழினம் இருக்கிறது என்பதே நிஜம்.

விடுதலைப் போராட்டத்தை நடத்திய நம் இனத்தின் நம்பிக்கையில் பெரும் பகுதி சர்வதேச சமூகம் எங்களைக் கைவிடாது என்பதுதான்.

அதிலும் குறிப்பாக இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்று நம்பிக் கொண்டோம்.

1983களில் நடந்த இனவதையின் போதெல்லாம் ஈழத் தமிழர்கள் இந்திய வருகைச் செய்திகளையே தங்களின் நம்பிக்கைக்குரிய அறிவிப்புக்களாக ஏற்றுக் கொண்டனர்.

ஆனால் பின்னாளில் நடந்தது வேறுவிதமாயிற்று. இப்போது இருக்கின்ற சூழலில் சர்வதேச பிரதிநிதிகளின் இலங்கை வருகையும் தமிழ்த் தலைவர்களுடனான சந்திப்புக்களையும் பார்க்கும் போது அவர்கள் எங்கள் பற்றிய நிலைமைகளை அறிந்து அதைக் கற்றுக் கொள்வதும் ஆலோசனை கூறுவதும் என்ற நிலைமைக்குள் இருக்கின்றனரே தவிர இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்து தமிழினத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று கூறுவதாக இல்லை.

இதற்கு மேலாக தமிழ் மக்களின் இத்துணை அவலங்களையும் பார்த்துநின்ற பாவத்தை ஐக்கிய நாடுகள் சபை செய்ததுதான் கொடுமையிலும் கொடுமை.

வன்னிப் பேரவலம் நடந்தபோது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கை அரசுடன் இணங்கிச் சென்று தமிழ் மக்களுக்கு அநீதி இழைத்தார்.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் எங்களுக்காகக் குரல் கொடுப்பார் என்று நம்பியிருந்த வேளை அவர் தமிழினத்தை ஏமாற்றினார்.

ஒட்டுமொத்தத்தில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தமிழினத்தை ஏமாற்றுவதையே தமது குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டனர்; செயற்படுகின்றனர்.

ஆம், வடக்கு கிழக்கு தமிழ் மக்களை பான் கீ மூன் உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகள்தான் ஏமாற்றுகின்றனர் என்றால், நேற்று முன்தினம் (14.11.2016) வெள்ளைமி நிலவு தன் வழமையை விட பதின்னான்கு மடங்கு பெரிதாகி சுப்பர் மூனாகத் தெரியும் என்றும் அதனை அனைவரும் பார்க்க முடியும் என்று விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

அந்த அறிவிப்பு உலக நாடுகள் உட்பட இலங்கையின் தென்பகுதியிலும் சரியாக இருந்தது.

ஆனால் வடக்கு கிழக்கு மக்கள் சுப்பர் மூனைப் பார்ப்பதற்கு ஆவலோடு இருந்த போதிலும் பான் கீ மூன் போல சுப்பர் மூனும் எங்களை ஏமாற்றிவிட்டது.

என்ன செய்வது எல்லாரும் ஏமாற்றக்கூடிய ஒரு இனமாக தமிழினம் ஆகிவிட்டது என்ற வேதனை நெஞ்சை அடைக்கவே செய்கிறது.

# வலி.வடக்கில் என்ன நடக்கிறது? மாவை. சேனாதிராசா ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் எல்லைகளில் இராணுவத்தினரால் அமைக்கப்படும் வேலிகளையும் அங்கு தற்காலிக கொட்டில்களை அமைத்து வரும் மக்களையும் தான் பார்த்ததாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். குறித்த பிரதேசத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த மாவை சேனாதிராசா அங்குள்ள மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் மீள்குடியேற்றத்திற்காக புதிதாக விடுவிக்கப்பட்ட 454 ஏக்கர் காணிகளை காணி உரிமையாளர்களுக்கு பார்வையிட இராணுவத்தினர் அனுமதியளித்திருந்தனர். யாழ்ப்பாணத்திற்கு கடந்த 31 ஆம் திகதி திங்கட் கிழமை விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 454 ஏக்கர் காணிகளை மீள்குடியேற்றத்திற்காக விடுவிப்பதாக அறிவித்தார்.

இதனையடுத்து தமது காணிகள் மற்றும் வீடுகளை கடந்த 27 வருடங்களின் பின்னர் ஆர்வத்துடன் பார்வையிட்ட மக்கள் வீடுகள் இடிந்து தரைமட்டமாக்கப்பட்டதை கண்டு கவலையடைந்தனர். இதேவேளை தேசிய அரசாங்கம் ஆட்சியமைத்த பின்னர் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இராணுவத்தினர் வசமுள்ள காணிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய தற்போது வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/235, ஜே/246, ஜே/247, ஜே/249, ஜே/250 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் 4 ஆயிரத்து 589 ஏக்கர் காணிகள் தொடர்ந்தும் இராணுவத்தினர் வசம் இருக்கின்றன. இந்த நிலையிலேயே இராணுவம் தமது எல்லைகளை மீண்டும் பலப்படுத்த தொடங்கியுள்ளது.

நேற்றைய தினம் விடுவிக்கப்பட்ட இடங்களுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மற்றும் வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் நேரில் சென்று அங்கு மீள் குடியேறிவரும் மக்களை சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது மக்கள் மீள்குடியேறுவதில் தமக்குரிய கஷ்டங்களை கூறினார்கள்.

குறிப்பாக இறுதியாக விடுவிக்கப்பட்ட இடங்களை சேர்ந்த மக்களில் நூற்றுக்கு எண்பது வீதமானோர் கடற்றொழிலையே நம்பி வாழ்கின்றனர். எனினும் கடற்கரை பகுதி விடுவிக்கப்படாமலே உள்ளது. இதனால் அங்கு தம்மால் தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து கடற்பகுதி விடுவிக்கப்பட்டு அங்கு தொழிலில் ஈடுபட அனுமதி வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைத்தனர்.

இது தொடர்பில் தான் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசுவதாக மாவை சேனாதிராசா உறுதியளித்தார். (இ-4)

## ஒருவர் மரணம்; ஒருவர் கைது!

மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி ஒருவர் மரணமடைந்த சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நெல்லியடி சோதி வீதிக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் துன்னாலை வடக்கை சேர்ந்த கந்தசாமி விபுலானந்தம் (வயது-67) என்பவர் மரணமடைந்தார்.

இதனுடன் சம்பந்தப்பட்டதாகத் தெரிவித்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-60)

## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த மாணவி காயம்

(கரணவாய்)

பேருந்தில் மாணவி ஒருவரை ஏற்றுவதற்காக வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில்இருந்துவிழுந்தமாணவி ஒருவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள் ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மருதங் கேணிப் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் ரஞ்சிதா (வயது-17) என்ற மாணவியே படுகாயமடைந்தவராவார்.

வடமராட்சியில் உள்ள பாட சாலை ஒன்றில் கல்வி கற்று வரும் மாணவி பேருந்தில் பிரயாணம் செய்வதாகவும் அவர் வருவதற்கிடையில் பேருந்து புறப்பட்டதால் மோட்டார் சைக்கிள் ஒன்றின் உதவியுடன்பேருந்தைதுரத்தி வந்த போது மாணவி விழுந்து படுகாயமடைந்ததாக தெரியவருகிறது. (இ-60)

## ஹன்ரர் மோதியதில் அதிபருக்கு காயம்

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த ஹன்ரர் வாகனம் ஒன்று மோதியதில் பாடசாலை அதிபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணியளவில் புலோலி-கொடிகாமம் வீதியில் உள்ள முள்ளிப் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் குடமியன் அ.த.க. பாடசாலை அதிபரான ஆத்தியடி பருத்தித்துறையைச் சேர்ந்த மயில்வாகனம் லினாஸ் குமார் (வயது-39) என்பவரே காலில் பலத்த முறிவு ஏற்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பருத்தித்துறையில் இருந்து மோட்டார் சைக்கிளில் பாடசாலை நோக்கி சென்று கொண்டிருந்த அதிபரை ஹன்ரர் மோதிவிட்டு தப்பி சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (இ-60)

## திருமுறை விசேட செயலமர்வு

சைவ மகாசபையின் ஏற்பாட்டில் தெய்வத்தமிழ் திருமுறை விசேட செயலமர்வு இன்று முற்பகல் 10 மணிக்கு கீரிமலை குழந்தைவேல் சிவாலயத்தில் உள்ள துசான் ஞாபகார்த்த சைவ அறப்பணி மையத்தில் நடைபெறும்.

குறித்த செயலமர்வின் வளவாளராக தமிழ் நாடு கோயம்புத்தூர் பேரூர் ஆதீன ஓதுவார் சிவத்திரு கண்ணப்பன் கலந்து கொள்ளவுள்ளார். இதில் ஆர்வமுள்ளவர்கள் மற்றும் அறநெறி ஆசிரியர்கள் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

## அரச 'காணி வங்கி' உருவாக்கம்

(கொழும்பு)

அனைத்து அரச காணிகளும் "காணி வங்கி" எனும ஒரே அமைப்பின்கீழ்கொண்டு வரப்பட இருக்கின்றன. தற்போது வெவ்வேறான பல தரப்புக்கள், அமைப்புக்களின் பொறுப்பிலிருக்கும் பல்வேறு அரச காணிகளும் அபிவிருத்திகளுக்கான அவற்றின் பயன்பாட்டிற்கேற்ப அவசியமான தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கோ மாற்றிப் பயன்படுத்துவதற்கோ வசதியாக "அரச காணி வங்கி" எனப்படும் ஒரே நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்படவிருக்கின்றன.

இதன் பொருட்டு பொருளாதார முகாமைத்துவத்திற்கான அமைச்சரவைக்குழு இதற்கான சட்டவாக்க ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக உத்தேச மசோதாவொன்றை கொண்டு வந்து நிறைவேற்றவிருக்கிறது. இத்திட்டப்படி நாட்டின் அரச காணிகளின் விபரங்களனைத்தும் பதிவு செய்யப்படவிருக்கின்றன.

**இக்குழுவானது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் காணியுடைமை மற்றும் காட்டுக்காணி பிரச்சினை மட்டில் விசேட அக்கறை கொண்டுள்ளதாக தெரியவருகிறது.**

பெருநகரங்கள் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மேற்படி உத்தேச மசோதாவின் கீழ் வழங்கப்படவிருக்கும் அதிகாரங்கள் நாட்டின் மேற்குப் பிராந்திய அபிவிருத்திக்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளுடனும் வீடமைப்புச் சம்பந்தமான ஏனைய விடயங்களுடனும் முட்டி மோதக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கக் கூடும் என கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 2016**

"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக் கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக் கூடாது"
-தமிழகக் கவிஞர் அறிவுமதி

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை **வவுனியா பிரதேசத்தில** கொக்கெலியவிலிருந்து புளியங்குளம் வரை, ஓமந்தை தொழில் நுட்பக் கல்லூரி, **Union Alliance,** கொக்கெலிய இராணுவ முகாம், **AMP Ceylon (Pvt) LTD** ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# தேசிய ரீதியிலான எறிபந்துப் போட்டி
# மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க.சாதனை



தேசிய ரீதியிலான எறிபந்து போட்டியில் மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலையின் 21 வயதுப் பிரிவு ஆண்கள் அணியினர் சாதனை படைத்துள்ளனர். இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நடை பெற்றதனை படத்தில் காணலாம். (கு)

# வினோத்ராஜ், அமீர்தன் சிறப்பான ஆட்டம்
# மைக்கல் அடுத்த சுற்றுக்குத் தெரிவானது





பருத்தித்துறை மாதனை விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அணிக்கு 8 ஓவர் 9 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

இதில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து குரும்பகட்டி உதயசூரியன் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய உதய சூரியன் அணி 8 ஓவர் நிறைவில் பிரசாந் அதிரடியில் 73 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய மைக்கல் அணி 7.3 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது.

மாலுசந்தி மைக்கல் அணி வினோத்ராஜ், அமீர்தன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (கு)

# தேசிய மட்ட கபடி சாதனையாளர்களுக்கு உதவித்திட்டம்



மன்னார் மாவட்டத்தின் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் நோக்குடனான செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அவர்களது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலானநன்கொடை(CBG)நிதியில்இருந்து மன்னார் கட்டையடம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் கபடி அணியினருக்கு அவர்களுக்கான கபடி சீருடைகளை கொள்வனவு செய்வதற்கான காசோலையினை அண்மையில் மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலத்தில் வைத்து அமைச்சரினால் கல்லூரியின் ஆசிரியரிடம் வழங்கி வைக்கப்பட்டது. (கு-281)

# புதிய நிர்வாகத்தெரிவு

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைவர் செ.சண்முகலிங்கனும் செயலாளராக சற்குணலிங்கமும் பொருளாராக பீஜெயவிந்தனும் உபதலைவராக வை.ஆனந்த ஜெஸ்கரனும் உப செயலாளராக க.சுத னும் மேலும் 10 நிர்வாக உறுப்பி னர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (கு)

# பெடரேஷன் கோப்பை டென்னிஸ்
# செக் குடியரசு ஹாட்ரிக் சாதனை



பெடரேஷன் கோப்பைக்கான மகளிர் டென்னிஸ் இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியை 3-2 என்ற கணக்கில் வீழ்த்திய செக் குடியரசு அணி, தொடர்ந்து 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று ஹாட்ரிக் சாதனை படைத்தது.

54ஆவது பெட் கோப்பை டென்னிஸ் தொடரின் பைனல்ஸ் பிரான்ஸ் நாட்டின் ஸ்டிராஸ்பர்க் நகரில் நடைபெற்றது.

முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் பிரான்ஸ் வீராங்கனை கிறிஸ்டினா மிளாடெனோவிச்சுடன் மோதிய செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா 6-3, 4-6, 16-14 என்ற கணக்கில் வென்று 1-0 என முன்னிலை ஏற்படுத்தினார்.

அடுத்து 2ஆவது ஒற்றையர் ஆட்டத்தில் பிரான்சின் கரோலின் கார்சியா 7-6 (8-6), 6-3 என்ற நேர் செட்களில் நட்சத்திர வீராங்கனை பெத்ரா குவித்தோவாவை (செக்.) வீழ்த்தியதால் 1-1 என சமநிலை ஏற்பட்டது.

முதலாவது மாற்று ஒற்றையர் ஆட்டத்தில் பிரான்சின் கரோலின் கார்சியா 6-3, 3-6, 6-3 என்ற செட் கணக்கில் கரோலினா பிளிஸ்கோவாவை வீழ்த்த, பிரான்ஸ் 2-1 என முன்னிலை பெற்றது. பரபரப்பான 2ஆவது மாற்று ஒற்றையர் ஆட்டத்தில் செக் குடியரசின் பார்போரா ஸ்டிரைகோவா 6-2, 7-6 (7-4) என்ற நேர் செட்களில் ஆலிஸ் கார்னெட்டை வீழ்த்தி 2-2 என சமன் செய்தார். இதைத் தொடர்ந்து, சம்பியன் யார் என்பதை தீர்மானிக்கும் இரட்டையர் ஆட்டத்தில் பிரான்சின் கார்சியா - மிளாடெனோவிச் ஜோடியுடன் மோதிய செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா - பார்போரா ஸ்டிரைகோவா ஜோடி 7-5, 7-5 என்ற நேர் செட்களில் போராடி வென்றது.

இந்த வெற்றியுடன் 3-2 என்ற கணக்கில் பிரான்சை வீழ்த்திய செக் குடியரசு அணி தொடர்ந்து 3ஆவது முறையாக பெடரேஷன் கோப்பையை முத்தமிட்டு ஹாட்ரிக் சாதனை படைத்தது. அந்த அணி பெட் கோப்பையை வெல்வது 10 ஆவது முறையாகும்.

இதில் செக்கோஸ்லோவாகியா அணியாக 5 முறை வெற்றி பெற்றுள்ளது. அமெரிக்க அணி அதிகபட்சமாக 17 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது. 1976-1982 வரை தொடர்ச்சியாக 7 முறை கோப்பையை கைப்பற்றி ஆதிக்கம் செலுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (கு)

# பிரேசில் கிராண்ட் பிரீ கார் பந்தயம்
# லூயிஸ் ஹாமில்டன் சம்பியன்




பிரேசில் கிராண்ட் பிரீ பார்முலா 1 கார் பந்தயத்தில் மெர்சிடிஸ் வீரர் லூயிஸ் ஹாமில்டன் சம்பியன் பட்டம் வென்றார். ஜோஸ் கார்லோஸ் ஆட்டோட்ரோமோ பந்தயக் களத்தில் நேற்று முன்தினம் நடந்த விறுவிறுப்பான போட்டியில் ஹாமில்டன் 3 மணி, 1 நிமிடம், 1.335 விநாடியில் கடந்து கோப்பையை கைப்பற்றினார். அவருக்கு 25 புள்ளிகள் கிடைத்தன. சக மெர்சிடிஸ் வீரர் நிகோ ராஸ்பெர்க் (+11.455 விநாடி) 2ஆவது இடம் பிடித்து 18 புள்ளிகளை பெற்றார். ரெட் புல் ரேசிங் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் 3ஆவது இடமும், போர்ஸ் இந்தியா வீரர் செர்ஜியோ பெரஸ் 4ஆவது இடமும் பிடித்தனர். நட்சத்திர வீரர் செபாஸ்டியன் வெட்டல் (பெராரி) 5ஆவதாக வந்தார்.

2016 பார்முலா 1 சீசனில் இது வரை நடந்துள்ள 20 பந்தயங்களின் முடிவில் மெர்சிடிஸ் வீரர்கள் நிகோ ராஸ்பெர்க் (367), லூயிஸ் ஹாமில்டன் (355) தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றனர். கடைசி பந்தயமான அபுதாபி கிராண்ட் பிரீயில் (நவ. 25-27) ராஸ்பெர்க் 3ஆவது இடம் பிடித்தால் கூட உலக சம்பியன் பட்டத்தை ஹாமில்டனிடம் இருந்து தட்டிப் பறித்து விடுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## ஆவாகுழு சந்...

அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் மீதான வாசிப்பு நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது நிலையியற் கட்டளைச் சட்டத்தின் 23/2இன் கீழ் எதிர்கட்சி பிரதம கொறடாவான ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, ஆவா குழு தொடர்பாக சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் சாகல ரத்நாயக்க, இந்தக் குழுவினர் முதலில் வாள்களை பிரேசிலில் இருந்தே கொண்டு வந்ததாகவும், முன்னதாக இந்தியாவுக்கு அவற்றை எடுத்து வந்து பின்னர் இலங்கைக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

2011ஆம் ஆண்டு யாழ்பாணம், இணுவில் அம்மன் கோவிலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலின்போது எதிர்தரப்பினர் மீது தாக்குதல் நடத்துவதற்காக கூடிய குழுவே ஆவா குழுவாக உருவெடுத்துள்ளது. இக்குழுவில் உள்ளவர்கள் யாழ் குடாநாட்டின் பல்வேறு அடிதடிகளில் ஈடுபட்டதுடன், அவர்களை ஆவா குழு என்றும் அடையாளப்படுத்தவும் ஆரம்பித்துள்ளனர்.

இத்ன் தலைவராக இணுவில் மேற்கு கண்ணியம்மாள் கோவில் பகுதியில் வசிக்கும் நபரொருவரே செயறபட்டு வருகிறார். இவர் உள்ளிட்ட பலர் தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆவா குழுவில் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே பெரும்பாலும் காணப்படுகின்றனர்.

இந்தக் குழுவினரால் யாழ்ப்பாணம், கோப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி மற்றும் மானிப்பாய் ஆகிய பொலிஸ் பிரிவுகள் உள்ளிட்ட பல இடங்களில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதுடன் பல்கலைக் கழக மாணவர்களை பயமுறுத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்துதல் மற்றும் வர்த்தகர்களை அச்சுறுத்தி கப்பம் பெறுதல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலங்களில் இந்த குழுவினர் ஒப்பந்த அடிப்படையிலும் குற்றச் செயல்களில் ஈடுப்பட்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளன. வர்த்தகர்களிடம் கப்பம்கோரல் போன்ற செயற்பாடுகளில் இவர்கள் ஈடுப்பட்டுள்ளனர்.

இந்த குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன்னிலையிலும் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறானவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுமாத்திரமன்றி குற்றவாளியாக காணப்பட்டு தண்டப்பணம் விதிக்கப்பட்டு அந்த தண்டப்பணம் செலுத்தப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இந்தக் குழுவில் சுமார் 62 பேர் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதில் 38 பேர் கைது செய்யப்பட்டு 6 பேரிடம் விசாரணை நடத்தப்படுகிறது. 32 பேருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேநேரம், பிரதான தலைவர்கள் எனக் கருதப்படும் 8 பேரைத் தேடிவருகின்றோம். அதில் புதிய தலைவரும் இருக்கிறார் என்று கருதப்படுகிறது.

ஏனெனில், ஆரம்பத் தலைவர் தற்போது விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றார். அவர்களிடம் நிறைய பணம் உள்ளது. வெளிநாடுகளிலுள்ள உறவினர்கள் மூலமே இவர்களுக்கு பணம் வருகிறது என்றே நாம் கருதுகிறோம். இந்த சகல இளைஞர்களிடமும் நவீன ரக மோட்டார் சைக்கிள்கள் இருக்கின்றன.

இதேநேரம், தென்னிந்தியாவில் இருந்து வந்த உறுப்பினர் ஒருவர் மூலமே இந்த குழுவினருக்கான முதலாவது வாள் வந்துள்ளது. பிரேசிலில் இருந்தே அந்த வாள் கொண்டு வரப்பட்டுள்ளது. அது போன்ற பல வாள்கள் இங்குள்ள ஆயுத பட்டறைகளிலும் உருவாக்கிக் கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறான வாளை தயாரிக்க முடியாதென மறுத்த ஆயுத பட்டறை உரிமையாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்திய சம்பவமும் பதிவாகியுள்ளது என அமைச்சர் சாகல குறிப்பிட்டார்.

இதேவேளை ஆவா குழு தொடர்பான விசாரணைகளை நாம் நடத்திச் செல்கிறோம என குறிப்பிட்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன ஆவா குழுவுடன் தொடர்புபட்ட முன்னாள் இராணுவ உறுப்பினர் இராணுவத்தின் சுயேட்சை மின்சாரம் மற்றும் இயந்திர பொறியியல் சேவை ரெஜிமென்டில் பணியாற்றிய ஒருவராவார். பல மாதங்களாக அவர் கடமைக்கு சமுகமளித்திருக்கவில்லை. ஆகவே தப்பிச் சென்றவராகவே அவர் கருதப்படுகிறார். இந்த நிலையில் அவரையும் கைது செய்து நாம் விசாரித்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (செ-11)

## அரச அதிகாரி...

யாழ்.மாநகரசபை சுகாதார தொழிலாளர்கள் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டு வந்த காரணத்தால் யாழ் பண்ணை பகுதியில் தேங்கியிருந்த கழிவுகளை உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் முதலமைச்சர் அமைச்சின் அலுவலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் இணைந்து நேற்றைய தினம் அகற்றியிருந்தனர்.

இவ்வாறு அதிகாரிகள் கழிவுகளை அகற்றும் நடவடிக்கையை ஆரம்பித்த காரணத்தினால் தொழிலாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதுடன் தமக்கு தீர்வை வழங்காமல் கழிவுகளை அகற்றுவதற்கு பாரிய எதிர்ப்பைத் தெரிவித்திருந்திருந்தனர். இதனால் அப்பகுதியில் கலக மடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் சுமார் 6 மணித்தியாலங்கள் வரையில் பதட்ட நிலை காணப்பட்டது.

யாழ் மாநகரசபையில் தற்காலிகமாக பணிபுரியும் மாநகரசபை சுகாதார தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கோரி யாழ் மாநகரசபை சுகாதார தொழிலாளர்கள் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் தமது பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

இந்தநிலையில் நேற்றைய தினம் தமது போராட்டத்தினை மேலும் விஸ்தரித்து நிர்வாக முடக்க போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பொலிஸார் அப்பகுதிக்கு சென்று அவர்களுக்குரிய தீர்வை பெறுவதற்காக அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாக தெரிவித்து குறித்த நிர்வாக முடக்க போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தனர்.

அதன்படி நிர்வாக முடக்க போராட்டத்தை காலை 10 மணியளவில் நிறைவு செய்ய தொழிலாளர்கள் தமது பணி புறக்கணிப்பை தொடர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் யாழ்.பண்ணைப்பகுதியில் அதிகளவான கழிவுகள் தேங்கி புழுப்பிடித்த நிலை காணப்பட்டமையினால் அப்பகுதியில் பாரிய சுகாதார சீர்கேடு ஏற்பட்டதுடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது.

எனவே குறித்த கழிவுகளை அகற்றுவதற்கென ஏனைய பிரதேச சபைகளில் இருந்து வாகனங்களை வரவழைத்து வடமாகாண முதலமைச்சர் அமைச்சில் உள்ள அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் மற்றும் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் உத்தியோகத்தர்களும் இணைந்து கழிவுகளை அகற்றுவதற்கு ஆரம்பித்தனர்.

இதனை அறித்த யாழ் மாநகரசபை சுகாதார தொழிலாளர்கள் அவ்விடத்துக்கு சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கழிவகற்றுதலை நிறுத்துமாறு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்.பொலிஸ் நிலைய கலகத் தடுப்பு பொலிஸார் அவ்விடத்ததுக்கு வரவழைக்கப்பட்டு கழிவுகள் அகற்றும் பணி நடைபெற்றது.

தொழிலாளர்களின் தொடர்சியான எதிர்பினை தொடர்ந்து வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடமாகாண உள்ளுராட்சி ஆணையாளர் பொ.குகநாதன், யாழ் மாநகரசபை ஆணையாளர் பொ. வாகீசன், வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் யாழ் மாநகரசபை சுகாதார தொழிலாளர்களின் பிரதிநிதிகள் அவ்விடத்துக்கு வருகை தந்து உள்ளூராட்சி திணைக்கள அலுவலகத்தில் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர்.

கலந்துரையாடல் நடைபெற்றிருந்த வேளையில் கழிவுகள் அகற்றப்படுவதை நிறுத்த வேண்டும் என சுகாதார தொழிலாளர்களில் ஒருவர் தான் தீக்குளிக்கப்போவதாக கூறி தனது உடலில் மண்ணெண்ணையை ஊற்றி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டமையால் அப்பகுதியில் பெரும் பதட்டநிலை உருவாகியிருந்தது. அருகில் நின்றவர்கள் தீக்குளிக்க முற்பட்டவரை ஆசுவாசப்படுத்தியமையால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. (செ-9)

## நிரந்தர நியமன...

யாழ்.மாநகர சபையின் தற்காலிக சுகாதார தொழிலாளர்களின் நிரந்தர நியமனம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொழிலாளர்களுக்கு உறுதியளித்துள்ளது.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார தொழிலாளர்களின் பிரதிநிதிகள் பத்துப்பேர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ்.வணிகர்கழக தலைவர் ஜெயசேகரம். ஆகியோரினை நேற்று இரவு எட்டு மணியளவில் மாட்டீன் வீதியில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சியின் பணிமனையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதன்போதே ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசுவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரி கடந்த ஒருவாரத்திற்கு மேலாக பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் யாழ்.நகர் முழுவதும் குப்பைகளால் நிரம்பி சுகாதார சீர்கேடான முறையில் காணப்படுகின்றது.

இந்நிலையில் சுகாதார தொழிலாளர்களை பணிக்கு திரும்புமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வரும் நிலையில், நேற்றைய தினம் இந்த திடீர் சந்திப்பு இடம்பெற்றது. இந்த சந்திப்பு தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில், பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள சுகாதார தொழிலாளர்கள் தமக்கான நிரந்தர நியமனம் வழங்க வேண்டிய தமது தரப்பு நியாயத்தை கூறினார்கள். அவர்களது கோரிக்கை எமக்கு நியாயமாகதான் உள்ளது.

தொழிலாளர்கள் மேற்கொண்டுள்ள தொடர் பணிப்புறக்கணிப்பில் யாழ்.நகரம் முழுவதுமே பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் இது தொடர்பில் நாம் அவசர நடவடிக்கை ஒன்று எடுக்க வேண்டியுள்ளது. தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதில் வடக்கு மாகாண சபைக்கு, மாநகர சபை ஆணையாளருக்கு அல்லது அதிகாரிகளுக்கு பிரச்சினைகள் காணப்பட்டால் அதனை எம்மிடம் தெரிவித்தால், அது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசி நிரந்த நியமனம் வழங்குவதற்கான அனுமதியை பெற்றுத்தர முடியும் என மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இரவு 8 மணிக்கு ஆரம்பமாகிய குறித்த சந்திப்பு 9.15 மணிவரை நடைபெற்றிருந்தது. இதன்போது தொழிலாளர்களால் தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## யாழ்.சுகாதாரத் தொ...

வழங்கக் கோரி யாழ் மாநகரசபை சுகாதார தொழிலாளர்கள் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் தமது பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

9 நாட்கள் கடந்த நிலையில் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பொ.குகநாதன், யாழ் மாநகரசபை ஆணையாளர் பொ. வாகீசன், வடமாகாண முதலமைச்சர் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் யாழ் மாநகரசபை சுகாதார தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நேற்றைய தினம் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் இருபகுதியினரும் இணக்கப்பாட்டுக்கு வந்து மேற்குறித்த பணிப்புறக்கணிப்பை நிறைவு செய்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடலை மேற்கொண்டிருந்த வடமாகாண சபை உறுப்பினர் எஸ். சிவாஜிலிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

யாழ் மாநகரசபையில் சுகாதார தொழிலாளர்கள் மற்றும் வேலைத் தொழிலாளர்கள் இணைந்து தமது நிரந்தர நியமனத்துக்காக நியாயாமான போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

நாம் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் தொழிலாளர்கள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். அதாவது யாழ் மாநகர சபை சுகாதார பகுதியில் 127 பேரும் வேலைப்பகுதியில் 70 பேருமாக 197 பேருக்கு நிரந்தர நியமனம் கிடைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. நியமனங்களை பெறுவதில் வடமாகாண சபை, உள்ளூராட்சி திணைக்களம், யாழ் மாநகர சபை என்பன தனித்து செயற்பட முடியாது.

கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்திடம் இருந்து அதாவது முகாமத்துவ சேவை பிரிவிடம் இருந்துஅனுமதி வரவேண்டும். ஒரே நாளில் அனைவருக்கும் நிரந்தர நியமனம் கொடுப்பதென்பது சாத்தியமில்லை. எம்மால் இயன்றளவு படிப்படியாக நியமனங்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அந்தவகையில் 90 பேருக்கு எதிர்வரும் 3 மாதங்களில் நிரந்த நியமனம் வழங்கப்படும் எனவும் ஏனைவர்களுக்கு வெற்றிடங்களின் வரிசையில் எதிர்வரும் 6 மாதங்களுக்குள் படிப்படியாக நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனவும் அவர்களிடம் தெரிவித்துள்ளோம்.

இது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் வட பிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்க தலைவர் அ.உதயகுமார் கருத்து தெரிவிக்கையில்,

எமக்குரிய சாதகமான தீர்வு வழங்காததால்தான் தொடர்ந்து போராடவேண்டிய சூழ்நிலை காணப்பட்டது.

முதலமைச்சரின் அனுமதியுடன் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் எமக்கு சாதகமான பதிலை தெரிவித்துள்ளார். எதிர்வரும் 3 மாதங்களுக்குள் 90 நியமனங்கள் வழங்குவதாக உறுதி செய்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்ட நாட்களில் தொழிலாளர்களின் ஊதியத்தை பரிசீலித்து வழங்குவதாகவும் அவர் உறுதியளித்துள்ளார். அவரின் உறுதி மொழியை நாம் நம்புகிறோம்,

எனினும் அந்தவகையில் இன்றுடன் (நேற்று) எமது பணிப்புறக்கணிப்பை நிறைவு செய்து நாளையில் இருந்து (இன்று) பணியை தொடருவோம். உறுதிமொழிகள் நிறைவு செய்யாதவிடத்து மீண்டும் பணிப்புறக்கணிப்பை தொடருவோம் என மேலும் தெரிவித்தார்.

ஒருவாரங்களுக்கு மேலாக கழிவுகளின் தேக்கத்தால் அசுத்தமாகி இருந்த யாழ் மாநகர் இன்றில் இருந்து தூய்மை பெறும் என பொதுமக்களால் எதிர்பார்க்கப்படுகிறது. (செ-9)

## 40 லீற்றர் கோ...

பேரில் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் இன்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-89)

# சந்தேக நபர்களை நீதிமன்றம் தீவிரவாதிகளாக பார்ப்பதில்லை

## ஊர்காவற்றுறை நீதவான் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

வழக்கு சந்தேக நபர்கள் யாரையும் நீதிமன்றங்கள் தீவிரவாதிகளாக பார்ப்பதில்லை என புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கு விசாரணையின் போது ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எம்.றியால் அறிவுறுத்தியுள்ளார். மேற்படி கொலை வழக்கு நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்ட அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

நேற்றைய வழக்கு தவணையின் விசாரணை முடிவில் தம்மை சிறைச்சாலை அதிகாரிகள் அதிகாலை 3 மணிக்கே சிறைசசாலையில் இருந்து அழைத்து வருகின்ற போதும் தற்போது வரை தமக்கு குடிப்பதற்கு நீரோ உண்ணுவதற்கு உணவோ தரவில்லை என மன்றில் கூறியிருந்தனர்.

ஆரம்பத்தில் யாழ். பொலிஸ் அதிகாரிகள் வந்து அழைத்து செல்லும் போது தமது உறவினர்கள் தம்மை சந்திப்பதற்கு அனுமதியளித்த போதும் தற்போது அநுராதபுர பாதுகாப்பு அதிகாரிகள் அழைத்து வரும் நிலையில் அவ்வாறு உறவினர்கள் சந்திப்பதற்கு அனுமதிப்பதில்லை எனவும் கூறியிருந்தனர்.

மேலும் தம்மை தீவிரவாதிகளை போல பார்ப்பதாகவும், தமது வழக்கு விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் பரிசீலனையில் உள்ளதாக கூறப்படும் நிலையில் தற்போது மீண்டும் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் விசாரணை செய்ய வேண்டும் என கூறுகின்றனர்.

இவ்வாறான நிலையில்எப்போது எமது வழகக்கு மேல் நீதிமன்றுக்கு மாற்றமடையும் எனவும் மன்றில் வினவியிருந்தனர்.

இதனையடுத்து நீதிவான் குறிப்பிடுகையில், குறித்த சந்தேகநபர்களுக்கு காலை 3 மணியில்இருந்து தற்போது வரை உணவு மற்றும் அருந்துவதற்கு நீர்வழங்கப்படாமை தொடர்பாக ஊர்காவல்துறை நீதிமன்ற பதிவாளர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடம் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என கட்டளை பிறப்பித்ததோடு உடனடியாக சந்தேகநபர்களுக்கு உணவும் நீரும் வழங்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவட்டிருந்தார்.

மேலும் சந்தேக நபர்கள் யாரையும் நீதிமன்றம் தீவிரவாதிகளாய் பார்ப்பதில்லை எனவும் இலங்கை அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் குறித்த வழக்கில் தீர்ப்பானது மேல் நீதிமன்றினாலேயே வழங்கப்பட முடியுமானதுடன் அது தொடர்பில் மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபருக்கே அதிகாரம் இருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

அந்தவகையில் இவ் வழக்கானது தற்போது சட்டமா அதிபரிடம் பரிசீலனையில் உள்ள போது அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுபிரிவு மேற்கொள்வதை யாரா லும் தடுக்க முடியாது எனவும் குறிப்பிட்ட நீதவான் சந்தேகநபர்களை விசாரணைக்கு ஒத்துழைக்குமாறும் கூறியதுடன் இவ் வழக்கு விசாரணையை இம் மாதம் 28 ஆம் திகதிவரை ஒத்திவைக்க உத்தரவிட்டிருந்தார். (செ-4)


அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6359)

காணி விற்பனைக்கு

ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி வீதியில் கல்லுண்டாய் வைரவர் கோவிலில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் 46 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளும் இல :-

077 443 4501

(6613)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!

உணவே மருந்து!

SIKARAM ACADEMY, School of Hospitality

அறிமுகப்படுத்தும்



யாழ்ப்பாண பாரம்பரிய ஆரோக்கிய உணவகம்

இலைக்கஞ்சி, ஆட்டா றொட்டி, குண்டுத்தோசை குழல் பிட்டு, கீரைப் பிட்டு, அரிசிமா இடியப்பம் மரக்கறி, மீன், நாட்டுக்கோழி சாப்பாடு சுறாப் பிட்டு, இறால் பிட்டு பிட்டு / இடியப்ப கொத்து ஆயுசு கோப்பி, பழரச பானங்கள், சூப் வகைகள், ஒடியல் கூழ் பயற்றம் உருண்டை, சீனி அரியதரம், தட்டு வடை, முறுக்கு

யாழ் நகர எல்லைக்குள் FREE Delivery

இல.175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி பாடசாலை வீதி) யாழ்ப்பாணம்

தொ.பே.: 021 300 80 60

(C-6413)


# சுமணரத்ன தேரருக்கு எதிராக...

தமிழ் பேசும் சமூகங்களை கேவலமாக இழிவுபடுத்தும் வார்த்தைகளால் தூஷிக்கும் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரருக் கெதிராக நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் கதவைப் பூட்டி செயலகத்திற்கு முன்னால் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை பிரதேச செயலக அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவில் பெரும்பான்மையினத்தவர்களை அத்துமீறிக் குடியேற்றும் அவரது நடவடிக்கைக்கு ஆதரவாக கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சிங்கள மக்கள் சிலரை அழைத்து வந்த பிக்கு அம்பாறை - கண்டி பிரதான வீதியை வழி மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தியபோது மேற்படி தேரர் தமிழ் பேசும் மக்களை இழித்துரைத்திருந்தார்.

அத்துடன் தமிழ் பேசும் அரசாங்க அதிகாரிகளையும் அவதூறாகப் பேசியிருந்தார். இதனைக் கணடித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை பிரதான வீதியை மறித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரக ளான சீ. யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், சா.வியாழேந்திரன், மற்றும் கிழக்குமாகாண விவசாய அமைச்சர் க|.துரைராசசிங்கம் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான ஞா. கிருஸ்ணபிள்ளை, மா.நடராசா, கோ.கருணாகரம், இ.பிரசன்னா, இரா.துரைரெத்தினம், மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன் மற்றும் பொன்.செல்வராசா உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதனால் சில மணி நேரம் பட்டிப்பளை - கொக்கட்டிச்சோலை பிரதான வீதியின் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இந்நிலையில் ஆர்ப்பாட்ட இடத்தில் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சிசிர பெத்த தந்திரி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன் ஆகியோர் ஸ்தலத்திற்கு வருகை தந்திருந்தனர்.

மங்களராமயவின் புத்த பிக்குவைக் கைது செய்ய வேண்டும், மாவட்டத்திலிருந்து அந்த புத்த பிக்குவை வெளியேற்ற வேண்டும், அவரின் அடாவடித் தனங்களுக் கெதிராக நீதியான விசாரணை வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

விசாரணைகள் துரிதப்படுத்தப்படும், காணி விவகாரம் குறித்த விடயம் தொடர்பான விசாரணை அம்பாறைமாவட்டத்தில்நடைபெற்று வரும் இந்நிலையில் அதனை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மாற்றப்படும் என்ற கோரிக்கை உறுதிமொழியை மேலதிக அரசாங்க அதிபரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

-பொலிஸ்மா அதிபர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் இவ்விடயம் தொடர்பில் விசாரணையைத் துரிதப்படுத்துமாறு கோரும் மகஜர்களும் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர எஸ்.கிரிதரன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோரிடம் கையளிக்கப்பட்டன. (செ)

# ஒன்பது சந்தேக நபர்களிடமும்...

புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முதலில் 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இதன்படி குறித்த வழக்கு விசாரணை களுக்காக நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட ஒன்பது சந்தேக நபர்களும், வழக்கு நடவடிக்கைகள் முடிந்து நீதிமன்றத்தினை விட்டு வெளியேறிய போது, தாங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை என்றும், தங்களை ஊர்காவற்றுறை பொலிஸார் தேவையில்லாமல் கைது செய்துள்ளனர் என்றும், தங்களை கைது செய்த கோபி என்று அழைக்கப்படும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரை கொலை செய்வோம் என்றும் பகிரங்கமாக அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

இவ்வாறு பொலிஸாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தனியான வழக்கு ஒன்று ஊர்காவற்றுறை பொலிஸாரினால் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கும், வித்தியா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான பிரதான வழக்கும் நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலில் பொலிஸாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது ஊர்காவற்றுறை பொலிஸார் சார்பில், இவ்வழக்குத் எழுவதற்கான சம்பவம் நடைபெற்ற வேளை இங்கிருந்த சீரற்ற நிலமைகள் தொடர்பாக பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பாக வித்தியா கொலை வழக்கின் சந்தேக நபர்களிடம் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் தற்போது குறித்த சந்தேக நபர்களிடம் வாக்கு மூலத்தினை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியினை மன்று வழங்க வேண்டும் என்று கோரிக்கை விணணப்பம் ஒன்றினை நீதவான் முன்னிலையில் சமர்ப்பித்திருந்தனர்.

இவ் விண்ணப்பம் தொடர்பாக ஆராய்ந்த நீதவான் அவர்களிடம் வாக்கு மூலத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியினை வழங்கியதுடன், வித்தியா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான பரதான வழக்கு விசாரணைகளுககாக அவர்கள் இன்று (நேற்று) மன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளதால், இன்று (நேற்று) நீதிமன்ற வளாகத்திற்குள் வைத்தே 9 சந்தேக நபர்களிடமும் வாக்கு மூலத்தினை பெற்றுக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை பொலிஸாரை நீதவான் வை.எம்.எம்.ரியால் பணித்திருந்தார்.

இதன் படி குறித்த சந்தேக நபர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. (செ-4)

# மனைவியை...

யாருக்கும் தெரியாமல் குறித்த நபர் புதைத்துள்ளார்.

இந்நிலையில் 41 வயதுடைய குறித்த நபருக்கு எதிரான வழக்கு அனு ராத புரம் மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்று வந்த நிலையில், குறித்த வழக்கில் அவர் குற்றவாளி என நிரூபக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுளளது.

மேலும் மனைவியின் சடலத்தை மறைக்குமுற்பட்டமைக்காக ஏழு வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப் படடுள்ளது. (செ-1)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.யோகராசா தயாபரன் (அகில இலங்கை சமாதான நீதவான்)



மீசாலை வடக்கைச் சேர்ந்த திரு. யோகராசா தயாபரன் அவர்கள் 21.10.2016 அன்று அகில இலங்கை சமாதான நீதவானாக சாவகச்சேரி நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :- திரு.செ.கமலநாதன் குடும்பம் கச்சாய் வீதி, கொடிகாமம்.

திரு.இ.ஜெயதவராசா குடும்பம் நாவற்காடு, வரணி.

(C-6404)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

விற்பனைக்கு

போட்டோ கொப்பி இயந்திரம் விற்பனைக்கு உண்டு (2 Side Printing Machine)

077 330 2853

(6617)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express No.401 Clock tower road, Jaffna. (பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-6395)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.